சுதந்திரச்சங்கு

" சங்கு கொண்டே வெற்றி யூதுவோமே—இதைத்
தரணிக்கெல்லா மெடுத்தோதுவோமே "

போன் நெ. 8038 ஆசிரியர்: சங்கு. ஸுப்ரஹ்மணியன்.

Vol. IV.] வெள்ளிக்கிழமை (24—11—1933) 18712 [No. 1

சங்கு

ஓதுந் தமிழ் மறையை யூது சங்கே!
ஓம் சக்தி சக்தி யென ஓது சங்கே!

பேத மொழிந்த தென்றிங் கூது சங்கே!
பேரின்பம் வந்ததென்றே யூது சங்கே!

நீதி பிறந்த தென்றிங் கூது சங்கே!
நிலமுள் விழித்த தென்றே யூது சங்கே!

சோதி யுதித்த தென்றே யூது சங்கே!
சுத்த சுதந்திரத்திலூது சங்கே!

உலகேல்லாங் கோயிலென வூது சங்கே!
உழைப்பு வழி பாடென்றே யூது சங்கே!

கலகங்கள் வேண்டாமென் றூது சங்கே!
கட்டுகளுடைந்த வென் றூது சங்கே!

பல சாதி யில்லை யென்ன வூது சங்கே!
பார்ப்பதற்குச் சின்மய மென்றூது சங்கே!

அலைமோதும் ஆழியிடை வந்த சங்கே
அறிவு தெளிந்த தென்றே யூது சங்கே!
அச்சம் ஒழிந்த தென்றூது சங்கே.

—ஸ்வாமி சுத்தானந்த பாரதியார்.

'ஓடி வந்தேன்!'

சக்தியின் அருளால் இன்று 'சங்கு' புனர் ஜன்ம மெடுத்து விட்டது. ராஜீயக் கடலின் கொந்தளிப்புக் கேற்பக் குமுறிக்கொண்டிருந்த சங்கு எத்தனை நாள் அஞ்ஞாத வாசத்திலேயே இருக்கும்? அயர்ச்சிக்கு மருந்து உத்ஸாகம்; ஏக்கத்துக்கு மாற்று ஆவேசம்; தூக்கத்தைப் போக்குவது உழைப்பு. ஆம். நாம் உழைத்தே தீரவேண்டும்! இந்த நாட்டிற்குச் சுதந்திரம் கிடைக்கும் வரை, இந்தத் தேசத்தின் வறுமை ஒழியும் வரை, மக்களிடை அஞ்ஞானம் மங்கி அறிவு பொங்கும் வரை, சலிப்பின்றி ஓர் தொண்டர் கூட்டம் உழைத்தே தீரவேண்டும். அந்தத் தொண்டர் படையில் ஓர் ஊழியனாக இன்று 'சங்கு' அணி வகுத்து நிற்கின்றது. 'நமஸ்தே!'

பாரத ஜாதியின் வாழ்வு வர வரக் கேவலமாகிக் கொண்டு வருகிறது. இந்த ஜாதியின் அடிமைத் தனத்தைப் போக்க எவ்வளவோ தியாகமும் உழைப்பும் வேண்டும். " சுடுதலும் குளிரும் உயிருக்கில்லை
சோர்வும் வீழ்ச்சியும் தொண்டருக்கில்லை "
என்று கர்ஜிக்கின்றார் நமது ரிஷி. அந்த மகான் உள்ள வரை நமக்குப் பயமேன்? அந்த சாந்த முனியின் அருள் கொடியின் கீழ் இன்று 'சங்கு' அணி வகுத்து நிற்கின்றது. 'நமஸ்தே!' கூறுகின்றது.

நமது ராஜீய மேடையில் அவ்வப்போது நடக்குங் கபட நாடகங்களை, திரையைக் கிழித்து 'சங்கு' வெளிக் காட்டும். பாரத சமூகத்தைப் பாழ் செய்யும் அடிமைப் பூண்டுகளை 'சங்கு' வேரோடு கல்லி யெறியும். ஸமத்வ உணர்ச்சி இந்த நாட்டில் உதிக்கும் வரை 'சங்கு' சலியாது ஒலிக்கும். பைந்தமிழ்ச் சோலையில் புது மலர்கள் புஷ்பிக்கும்படி செடிகளுக்குச் 'சங்கு' நீர் வார்க்கும். கார்த்திகை மாதத்தில் ஏற்றப்படும் இவ்விளக்கு என்றும் கலை யொளி வீசுமாறு அறிஞர்களும் உதவுவர். தமிழ்த் தொண்டுதான் 'சங்கு'க்கு மூச்சு; தாய் நாட்டின் சேவையே 'சங்கு'க்கு மோக்ஷம்.

தமிழர்களே! உங்கள் அன்புப் பாலை உண்டு வந்த குழந்தை இன்று வளர்ச்சியுற்று இளமையோடு ஓடி வருகின்றான்; அவனை ஆசிர்வதியுங்கள்!

வந்தே மாதரம்!

கயிறு—ஜாக்ரதை !

'ஸ்வராஜ்யத்தைப் பிச்சை வாங்கி விடலாம்' என எண்ணிச் சீமைக்குச் சென்ற கூட்டத்தினர் அலுவல் முடிந்துத் திரும்பி வந்துகொண்டிருக்கின்றனர். 'கூட்டுக் சமிட்டி எத்தகைய ஆலோசனைகள் கூறினாலும் அத்தனையையும் மாற்றிக்கொள்ள பிரிட்டிஷ் பார்லிமெண்டுக்கு அதிகாரமுண்டு' என்று ஆதியிலிருந்தே இந்தியா மந்திரி கூறிவந்திருக்கிறார். இந்த வார்த்தைக்கு என்ன அர்த்தம்? "நீங்கள் உளறுவதை உளறுங்கள். நாங்கள் தந்ததைப் பிறகு மண்டிபோட்டு வாங்கிக் கொள்ளுங்கள்" என்பதுதான் அல்லவா? சூடு, சுரணை கொஞ்சமாவது இந்த இந்திய பிரகஸ்பதிகளுக்கு இருக்குமானால், மேற்படி கூட்டத்திற்குப் போயிருப்பார்களா? சரி, போனார்கள்; போன மச்சான்கள் இன்று திரும்பி வருகிறார்கள். இவ்வாறாகப் புதிய அரசியல் திட்டம் என்ற 'புரி' முறுக்கப் பட்டு வருகிறது ஓர் மூலையில்.

'மூலபாங்கி' (Reserve Bank) ஒன்று இல்லாமல் இந்தியா அழுது கொண்டிருக்கிறதாம். மகா கரிசனத்தோடு சில ராஜதந்திரிகள் மூல பாங்கித் திட்டமொன்று வகுத்திருக்கிறார்கள். 'இந்த மூலபாங்கித் திட்டத்தை இன்னும் 25 வருஷங்களுக்கு இந்தியச் சட்ட சபை கூடத் தொடக்கூடாது' என்ற பிடிகையை அழுத்தமாய்ப் போட்டிருக்கிறார்கள். இதனால், வரப்போகின்ற சட்டசபையின் வண்டவாளம் வெளிப்படுவதோடு இந்த மூல பாங்கியின் போக்கும் தெரிகின்றது. மேற்படி பாங்கிக்கு மேலதிகாரிகளை நியமிக்கும் பொறுப்பு கவர்னர் ஜனரலைச் சேர்ந்ததாம். இதனின்று எப்பேர்ப்பட்ட பேர்வழிகளிடம் இந்த பாங்கி போகப் போகிறதென்பதையும் இப்போதே நாம் ஊகிக்க இடமேற்படுகிறது. இந்த மூலபாங்கித் திட்டம் என்பதும் கயிற்றின் ஓர் 'புரி'

இந்தியக் குடியானவன் இன்றைக்கு இவ்வளவு கஷ்டப்படுவதற்குக் காரணம் அநியாயமான நாணய மாற்று விகிதமென்று அறிஞர் பலர் கூவுகின்றனர். "ரூபாய்க்கு 1ஷில்லிங் 4பென்ஸ் என்று நாணய மாற்று விகிதமிருந்ததை 1 ஷில்லிங் 6 பென்ஸாக ஆக்கிய அந்த தினத்தில் ஒவ்வொரு இந்திய மிராசுதாரனும் எட்டிலொரு பங்கு அதிகக் கடனாளியாகி விட்டான்" என்று மேஜர் வான்ஹனன் என்ற ஆங்கிலேய கனவானே சொல்லியிருக்கின்றார். மேஜர் வான்ஹனனுக்கு இந்தியாவில் கொஞ்சம் பூஸ்திதியிருக்கின்றது. ஆகவே நாணய மாற்று விகிதத்தால் தேசத்துக்கு ஏற்பட்ட நஷ்டம் அவருக்கு விளங்குகின்றது. இந்த 18 பென்ஸ் விகிதத்தைக் குறைக்கவேண்டும் அல்லது இங்கிலாந்தின் ஸ்டர்லிங்குக்கும் இந்தியாவின் ரூபாய்க்கும் போடப்பட்டுள்ள முடிச்சை அவிழ்த்தெறிய வேண்டுமென்று பல வியாபாரச் சங்கங்கள் தந்தி யடித்திருக்கின்றன. தந்திகளெல்லாம் குப்பைக் கூடைக்கே போயிருக்கவேண்டும். இந்த நாணய மாற்று என்ற 'புரி' வெகுநாளாகத் தயாரிருக்கின்றது.

புது அரசியல் திட்டம், மூலபாங்கித் திட்டம், நாணய மாற்று விகிதம் இவை சாதாரண மனிதனுக்கு எளிதில் விளங்கா விஷயங்கள். ஆனால் இந்த 36 கோடி மக்களையும் பிணிக்கும் கயிற்றின் முப்புரிகளென அவைகளைக் கூற வேண்டும். ஏதோ ஓர் மூலையிலிருந்துகொண்டு, ஓர் பேனாக் கிறுக்கினால், சாதாரண மனிதனின் அறிவுக்கு எட்டாதவண்ணம் ராஜ தந்திரிகள் எவ்வளவு சூழ்ச்சி செய்கின்றார்களென்பதையே இவை காட்டுகின்றன. இந்தக் கயிற்றின் கட்டுகளினின்று நமது தேசம் தப்பித்துக் கொள்ளுமா?

தவளையும் எலியும்

இந்திய வெள்ளி ரூபாய் என்ற எலியை பிரிட்டிஷ் காகித நாணயமான ஸ்டர்லிங் என்ற தவளையுடன், 18 –பென்ஸ் விகிதத்தால் சர்க்கார் பிணைத்துப் போட்டிருக்கிறது. ரூபாய் எலி தத்தளித்துக் கொண்டிருக்கிறது. கயிற்றையே அறுத்தால்தான் எலி பிழைக்கும். ஆனால், அதைவிட்டு, பெரிய கயிற்றால் கட்டுவதா, சிறிய கயிற்றால் கட்டுவதா என்பது பற்றியே பிரமாதமாக வாதம் நடக்கிறது. என்ன வேடிக்கை !

பத்திரிகைத் தொழில்

'படிக்கும் வழக்கம்' மக்களிடை பரவுவது தேச முன்னேற்றத்துக்கு அவசியமாகும். 1920-ம் வருஷத்து ஜன சங்கியைக் கணக்கின்படி சென்னை மாகாணத்தில் 1000-க்கு 5 பேரே பத்திரிகை படிக்கும் வழக்கமுடையவர்களா யிருந்தனராம். 1930-ம் வருஷத்திலோ 1000 க்கு 10 வீதம் பத்திரிகை படிப்பவர்கள் இருப்பதாக ஷை அறிக்கையினின்று தெரிகிறது. இந்தப் பத்து வருஷத்துக்குள் பத்திரிகை படிக்கும் வழக்கம் சிறப்பாகத் தமிழ் மக்களிடை வளர்ந்திருக்கிறதாம்.

இவ்வாறு பத்திரிகை படிக்கும் வழக்கம் தமிழகத்தில் வளர்ந்ததற்குக் காரணம் ராஜீயப் பத்திரிகைகளென 'கார்டியன்' பத்திரிகை எடுத்துக் காட்டுகிறது. வணக்கமாக அந்த அபிப்பிராயத்தை ஏற்றுக்கொள்கிறோம். இப்போது தமிழகத்தில் பத்திரிகை மழை பெய்து கொண்டிருப்பதாகவே சொல்லவேண்டும். டன் கணக்கில் காகிதம் விழுங்கப்பட்டு வருகிறது. ஆனால் பெரும்பாலான பத்திரிகைகள் ஒரே ரஸத்தை மக்களுக்குப் புகட்டிக் கொண்டிருக்கின்றன. நாடு முன்னேற்ற மடைய வேண்டுமானால் பல ரஸங்களையும் வழங்க எழுத்தாளர் இரங்க வேண்டுமென்றோ!

முப்பது வருஷங்களுக்கு முன்னே இங்கிலாந்தில் பத்திரிகை யுலகம் எந்த ஸ்திதியிலிருந்ததோ அந்த ஸ்திதியில் இன்றைக்குத் தமிழ்ப் பத்திரிகை யுலகம் இருப்பதாக ஒரு அறிஞர் கூறினார். மனிதனின் கேவல மனோ பாவங்களைப் பத்திரிகைக்காரர்கள் காசாக்கிக் கொள்கிறார்களென வசை கூறினார்.

ஆபாசமான விளம்பரங்கள், ஆசை காட்டி வாசகர் மனத்தைக் கெடுக்கும் போட்டிப் பரிசுகள், நிர்வாணப் படங்கள், பெண் குலத்தை நாணுறுத்தும் கட்டுரைகள் இவைகள் பத்திரிகைத் தொழிலுக்கே அவமான முண்டாக்குவனவாகும். இதைத் தமிழ் வாசகர்களும் பத்திராதிபர்களும் கவனித்தே தீர வேண்டும்.

ஆகவே நாட்டின் கலை வளர்ச்சியையும், அறிவு வளர்ச்சியையும், மொழி வளர்ச்சியையும் எல்லையாகக் கொண்டு பத்திரிகைகளை நடத்துவோமாக!

பருந்துப் பார்வை

[பத்திரிகைக் காட்டில் அலைந்த போது நமது பருந்துக்குக் கிடைத்த விருந்துகள் அடியில் தரப்பட்டிருக்கின்றன. ப-ர்.]

தோல்வியுற்றது யார்?

(சோ. த. ஆனந்தம்)

—பத்திரிகைக் கதைத் தலைப்பு.

ம-ா-ா-ஸ்ரீ ஆனந்தத்துக்கு நமது அநுதாபம்.

*　　*　　*

எங்களிடத்தில் நயம் கலப்பில்லாத காப்பிப் பொடியும்........கிடைக்கும்.

—விளம்பரம்.

கிராக்கி கலப்பு அதிகமாயிருக்கும் போலும்!

*　　*　　*

நமது பத்திரிகையில் வெளியாகும் கட்டுரைகளில், கதைகளில் காணப்படும் பெயர்களெல்லாம் கற்பனைப் பெயர்கள்; அவை யாரையுங் குறிப்பிடுவன வல்ல.

—பிரபல வாரப் பத்திரிகை.

பத்திரிகையின் முதற் கட்டுரையின் முதல் வரியிலுள்ள "பண்டித மாளவியா" என்ற பெயர்கூட இந்த இனத்தில் சேர்ந்ததுதானோ?

*　　*　　*

சாப்பிடும் தட்டுகள் வேண்டுமா?

—விளம்பரம்.

தட்டுத் தின்றுவிட்டால் நமக்குச் சோறேது?

*　　*　　*

........சென்னை "மேயர்" போட்டியில் கெலித்தார்.

—ஒரு விகடப் பத்திரிகை.

குறுக்கெழுத்துப் போட்டியிலா, மாற்றெழுத்துப் போட்டியிலா?

*　　*　　*

தேவையான லாஸ் கமலங்களும் சகாயமான விலைக்கு உயர்ந்த தருவாலிடியில் கிடைக்கும்.

—பத்திரிகை விளம்பரம்.

இம்மீடியேட் ஆர்டருக்கு பிராம்ட் எக்ஸிக்யூஷனுண்டா?

*　　*　　*

"ஒரே ஒரு பட்டிணத்தில் ஒரே ஒரு முனிஸிபாலிடி இருந்தது."

ஒரே ஒரு பத்திரிகையில் ஒரே ஒரு ஆசிரியர் ஒரே ஒரு கதையை இப்படி ஒரே ஒரு வாக்கியத்துடன் ஆரம்பித்திருக்கிறார்.

*　　*　　*

ஜோட்பூர் சமஸ்தானத்துக்கு ஆகாய விமானத்தில் முதன் முதலாகப் பறந்து வந்த வைசிராய் நானே.....
.........ஆகாயத்திலிருந்து செங்குத்தாய் உங்கள் முத்தத்தில் வந்து குதிக்கவும் கூரையில் வந்து குந்தவும் வைசிராய்க்கு சாத்தியமாகக்கூடிய காலம் வெகு தூரத்திலில்லை.

—வில்லிங்டன் பிரபு.

அநேக சமஸ்தானங்களில், கூரைகள் சேதமானால் பழுது பார்ப்பதற்காகப் பெரும் பணம் ஒதுக்கி வைக்கவேண்டுமென்று இப்பொழுதே பலமான கிளர்ச்சி நடப்பதாக வதந்தி.

*　　*　　*

காலரா, வயிற்றுப் போக்கு, சீதபேதி, இருமல், ஜலதோஷம், காசம். புட்டி 1 க்கு அணா 8. சாம்பிள் இனாம். சப் ஏஜண்டுகள் தேவை.

—வாரப் பத்திரிகை விளம்பரம்.

ஐயோ! 1000 ரூபாயோடு ஒரு புட்டி கொடுத்தாலும் வாங்கிக்கொள்ளப் பயமாயிருக்கிறதே.

*　　*　　*

கொச்சி மகாராஜா கான்பூரில் கங்கையில் முழுகிவிட்டு, உடனே பாட்னாவுக்குக் கிளம்பிவிடுவார்.

—பத்திரிகைச் செய்தி.

முயற்சி செய்தாரானால் கான்பூரிலேயே அவருக்குத் தலை தவட்டிக் கொள்ளத் துண்டு கிடைக்குமென்று நாம் உறுதி கூறுகிறோம்.

குறிப்புகள்

ஜவஹர் கைதியாவாரா ?

பண்டித ஜவஹர்லால் சமீபத்தில் விடுத்த அறிக்கைகளும், செய்த பிரசங்கங்களும், ஏற்பாடு செய்த திட்டங்களும் ஐக்கிய மாகாண சர்க்காரைத் திடுக்கிடச் செய்து விட்டதாகவும் ஆகவே பண்டிதரை சர்க்கார் கைதியாக்கலாமென்றும் ஓர் பத்திரிகை நிருபர் செய்தி யனுப்பியிருக்கிறார். இது வெறும் ஹேஷ்யமா யிருக்க வேண்டுமென்று நாம் விரும்புகின்றோம். அவ்வாறின்றி துரைத்தனம் ஜவஹர்லாலின் மீது விரல் வைக்குமாயின் அது மாகாண துரைத்தனத்தின் சின்ன புத்தியையே காட்டும். முதலாளிக்கும் தொழிலாளிக்குமுள்ள தகராறு, ஜமீன்தாருக்கும் குடியானவனுக்குமுள்ள சண்டை, இன்றைய நேற்றைய விஷயமில்லை. இங்கிலாந்தில் இந்தப் பிரச்சினைகள் சம்பந்தமாக வெகு பகிரங்கமாக வாக்கு வாதங்களும் நிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றன. இந்தியாவின் இளைஞர் தலைவரான ஜவஹர் அந்தப் பிரச்சினையில் வெறுமனே அபிப்பிராயங்களைச் சொல்லும்போதே சர்க்கார் முறைக்கிறார்களென்றால், அது நம்முடைய அடிமை வாழ்க்கையை வெகு தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

நாய் வாங்கும் ராஜாக்கள் !

இங்கிலாந்தில் விலையுயர்ந்த நாய்களை யார் வாங்குகிறார்கள் ? நாய்ப் பண்ணை வைத்திருக்கும் எச். எஸ். லாயிட் என்பார் இந்த இரகஸ்யத்தை வெளிப்படுத்தினார். "என்னுடைய சிறந்த நாய்களெல்லாம் இந்தியாவுக்குப் போகின்றன. உலகில் ஏராளமான பணக்காரர்கள் இந்தியாவில் தானிருக்கின்றன ரென்கிறார்கள். இங்கிருந்து போகும் நாய்கள் அங்கு பத்துப் பன்னிரண்டு வருஷங்கள் வாழ்கின்றனவாம்" என்று 'டெயிலிமிர்ரர்' பத்திரிகை நிருபரிடம் கூறியிருக்கிறார்.

இங்கிலாந்தில் நடந்த ஒரு நாய் கண்காட்சிக்கு ஒரு இந்திய ராஜா 'விஜயம்' செய்தாராம். அந்தக் காட்சியிலிருந்த அத்தனை நாய்களும் மொத்த விலை என்னவென்று பேரம் பேசினாராம். சந்திர வம்சமென்றும், சூரிய குலமென்றும் விருது கூறிக்கொள்ளும் நமது சிற்றரசர்கள் இப்படி நாய் பேரத்தில் இறங்கியிருந்தால் அவர்களுடைய சமஸ்தான ஆட்சி எப்படியிருக்குமென்று சொல்லவும் வேண்டுமோ ?

வைசிராய் வருகை.

டிசம்பர் மாத மத்தியில், வைசிராய் சென்னை நகருக்கு வருவாராம். அப்பொழுது, கலா சாலைகளுக்கும் கல்லூரிகளுக்கும் மூன்று நாள் விடுமுறை விடப்படுமாம். நமது நாட்டில் மாணவர்கள்தானே சம்சாரக் கவலையற்றுத் திரிபவர்கள். வைஸ்ராய்க்கு முன்னே வரிசை வரிசையாக நின்று வேடிக்கை பார்க்கும் கூட்டத்தைத் தயார்செய்யவே இந்த 'லீவு' தடபுடல்போலும் !

யுனிவர்ஸிடிகள் யுத்தம்.

சென்னைச் சர்வ கலா சாலைக்கும் பம்பாய்ச் சர்வ கலா சாலைக்கும் இடபோது கொஞ்சம் மனத்தாங்கலாம். சென்னையில் படித்த பையனை பம்பாய்க் காலேஜுகள் இனி சேர்த்துக் கொள்ளுமோ கொள்ளாதோ! அதே மாதிரி பம்பாயில் படித்த பையனை சென்னைக் காலேஜுகள் சேர்த்துக் கொள்ளுமோ கொள்ளாதோ! 'இரண்டு இராஜாக்கள் சண்டை பிடித்துக் கொண்டால் வயலில் மேயும் மாடு செத்துப்போகும்' என்பது பழமொழி. அதேபோல யுனிவர்ஸிடிகள் ஒன்றோடொன்று யுத்தம் செய்துகொண்டால் படிக்கின்ற பையன்களுக்கும் தாய் தந்தைகளுக்கும் அன்றோ பரம நஷ்டம்?

——— சுதந்திரத்துக்கு ஏற்ற வழி—சுயதேச கைத்தொழிலை ஆதரிப்பதே ———

நயம், நாணயம், நாகரீகம் மூன்றுக்கும் பெயர்பெற்றவை

காலிக்கோ, ஜுபிலி, அசர்வா மில் ஜவுளிகள்

என்பதை ஞாபகமூட்டுகிறோம்.

சுத்த சுதேசி—உழைப்புக்கும் உறுதிக்கும் உத்திரவாதம்.

மில் ஏஜெண்டுகள் :

என். ஸி. பட்வா அண்டு கம்பெனி, 49-51, ராட்டன் பஜார், சென்னை.

மொத்த விற்பனை :—நெ. 7, கிடங்கு தெரு, சென்னை.

THE LEADING HOUSE OF ELECTRIC PHOTOGRAPHY

HOURS 8 A.M. TO 8 P.M.

R. DASEN STUDIO

ELECTRIC PHOTO ARTISTS & ETC.

No 55 RATTAN BAZAAR RD MADRAS

தமிழ் இலக்கியத்தில் சிறு கதைகளைச் சிருட்டித்து உதவிய பெரியார்களுள் முக்கியமானவர் மூவர். மூவரும் புகழுடம்பில் இன்று உலாவுகின்றனர். கவி சுப்பிரமணிய பாரதியார், ஸ்ரீயுத வ. வே. சு. அய்யர், மாதவையா இம் மூவரையும் தமிழர் மறக்க முடியுமா? இருபது வருடங்களுக்கு முன் பாரதியார் எழுதிய 'ஆறி லொரு பங்கு' என்ற சிறு கதை இன்றைக்கு ஹரிஜன சேவைக்கு மக்களைத் தூண்டுவதாயிருக்கின்றது. இத்தகைய சாகாவரம் பெற்ற கதையைக் கொடுத்து உதவிய 'லோகோபகாரி' ஆசிரியர் பரலி. சு. நெல்லையப்ப பிள்ளைக்கு நமது நன்றி உரித்தாகுக. —சங்கு.

ஆறில் ஒரு பங்கு

கவி சுப்பிரமணிய பாரதியார் எழுதிய சிறு கதை

முகவுரை

ஒரு ஜாதி ஓர் உயிர். பாரத நாட்டிலுள்ள மூப்பது கோடி ஜனங்களும் ஒரு ஜாதி. வகுப்புக்கள் இருக்கலாம்; பிரிவுகள் இருக்கலாகாது. வெவ்வேறு தொழில் புரியலாம். பிறவி மாத்திரத்தாலே உயர்வு தாழ்வென்ற எண்ணம் கூடாது. மத பேதங்கள் இருக்கலாம்; மத விரோதங்கள் இருக்கலாகாது. இவ்வுணர்வே நமக்கு ஸ்வதந்திரமும், அமரத் தன்மையும் கொடுக்கும். "நாந்ய: பந்தா வர்த்ததே யநாய"—வேறு வழியில்லை. இந்நூலை பாரத நாட்டில் உழவுத் தொழில் புரிந்து நமக்கெல்லாம் உணவு கொடுத்து ரக்ஷிப்பவர்களாகிய பள்ளர், பறையர் முதலிய பரிசுத்தத் தன்மை வாய்ந்த வைசிய சகோதரர்களுக்கு அர்ப்பணம் செய்கிறேன்.

—ஆசிரியன்.

அத்தியாயம் க.

மீனாம்பாள் வீணை வாசிப்பதிலே சரஸ்வதிக்கு நிகரானவள். புரசைபாக்கத்திலுள்ள எங்கள் வீட்டிற்கு அவள் வரும் சமயங்களிலெல்லாம் மேல் மாடத்து அறையை அவளுடைய உபயோகத்துக்காகக் 'காலி' செய்துவிட்டு விடுவது வழக்கம். நிலாக் காலங்களில் இரவு எட்டு மணிக்கெல்லாம் எங்கள் வீட்டில் போஜனம் முடிந்துவிடும். ஒன்பது மணி முதல் நடுநிசி வரை அவள் தனது அறையிலிருந்து வீணை வாசித்துக் கொண்டிருப்பாள். அறைக்கடுத்த வெளிப் புறத்திலே பந்தரில் அவளுடைய தகப்பனார் ராவ் பகதூர் சுந்தரராஜலு நாயுடு கட்டிலின்மீது படுத்துக்கொண்டு சிறிது நேரம் வீணையைக் கேட்டுக்கொண்டிருந்து சீக்கிரத்தில் குறட்டை விட்டு நித்திரை செய்யத் தொடங்கிவிடுவார். ஆனால்,—மகாராஜன் குறட்டைச் சத்தத்தால் வீணைச் சத்தம் கேளாதபடி செய்துவிட மாட்டார். இலேசான குறட்டைதான். வெளி முற்றத்தின் ஒரு ஓரத்திலே நான் மட்டும் எனது 'பிரும்மசாரிப் படுக்கையைப் போட்டுக் கொண்டு படுத்திருப்பேன். வீணை நாதம் முடிவுறும் வரை என் கண்ணிமைகளைப் புளியம் பசை போட்டு ஒட்டினாலும் ஒட்ட மாட்டா. மீனாம்பாளுடன் அறையிலே படுத்துக்கொள்

ளும் வழக்கமுடைய எனது தங்கை இரத்தினமும் சீக்கிரம் தூங்கிப் போய் விடுவாள். கீழே எனது தாயார், தகப்பனார், அவரது மனைவி முதலிய அனைவரும் தூங்கிவிடுவார்கள். எனது தமையனார் மனைவி, வயிற்றிலே சோற்றைப் போட்டுக் கை கழுவிக் கொண்டிருக்கும் போதே, குறட்டை விட்டுக் கொண்டிருப்பாள்! இடையிடையே குழந்தைகளின் அழுகைச் சத்தம் மட்டிலும் கேட்கும். தமையனாருக்குக் கோட்டையில் ரெவினியூ போர்டு ஆபீஸில் உத்தியோகம். அவருக்கு நான்கு வருடங்களுக் கொரு முறை ஆபீஸில் பத்து ரூபாயும், வீட்டில் இரண்டு குழந்தைகளும் 'ப்ரமோஷன்.'

* * *

வசந்த காலப்; நிலாப்பொழுது; நள்ளிரவு நேரம். புரசைபாக்கம் முழுதும் நித்திரையிலிருந்தது. இரண்டு ஜீவன்கள்தான் விழித்திருந்தன. நான் ஒன்று, மற்றொன்று அவள்.

கந்தர்வ ஸ்திரீகள் வீணை வாசிப்பது போல மீனாப்பாள் வாசிப்பாள். பார்ப்பதற்கும் கந்தர்வ ஸ்திரீயைப் போலவே யிருப்பாள். அவளுக்கு வயது பதினாறிருக்கும். கதையை வளர்த்துக் கொண்டு ஏன் போகவேண்டும்? மன்மதன் தனது அம்பொன்றின் முனையிலே என் பிராணனைக் குத்தி யெடுத்துக்கொண்டு போய் அவள் வசம் ஒப்புவித்து விட்டான். அடடா! அவளது இசை எவ்வளவு நேரம் கேட்ட போதிலும், எத்தனை நாள் கேட்ட போதிலும் தெவிட்டாது. தினந்தோறும் புதுமை தோன்றும், அவள் முகத்தில் தோன்றுவதுபோல. அவளுடைய தந்தையாகிய ராவ் பகதூர் சுந்தரராஜுலு நாயுடு எனது தாயாருக்கு ஒன்றுவிட்ட அண்ணன். தஞ்சாவூர் முதலிய பல ஜில்லாக்களில் நெடுங்காலம் போலீஸ் இன்ஸ்பெக்டர் உத்தியோகம் பார்த்து ஸர்க்காருக்கு நன்றாக உழைத்ததினால் "ராவ் பகதூர்" என்ற பட்டம் பெற்றவர். சுதேசீயம் தொடங்கு முன்பாகவே இவர் வேலையிலிருந்து விலகிவிட்டவர். இதை எதன் பொருட்டாகச் சொல்லுகிறேனென்றால், அவருக்குக் கிடைத்த பட்டம் வெறுமே சில சுதேசியத் தலைவர்கள் மீது "ரிப்போர்ட்" எழுதிக்கொடுத்து சுலபமாக சம்பாதித்த பட்ட மன்று. யதார்த்தத்திலேயே திறமையுடன் உழைத்ததினால் கிடைத்த பட்டம். குழந்தை முதலாகவே மீனாம்பாளை எனக்கு விவாகம் செய்து கொடுக்க வேண்டுமென்பது அவருடைய கருத்து. அந்தக் கருத்து நிறைவேறுவதற்கு நேர்ந்த விக்கினங்கள் பல. அவ் விக்கினங்களில் பெரும்பான்மை யானவை என்னாலேயே உண்டாயின.

நான் சுமார் பதினாறு பிராயம் வரை சென்னைக் கிறிஸ்தியன் காலேஜில் படித்துக் கொண்டிருந்தேன். "வேதகால முதலாக இன்றுவரை பாரத தேசத்திலுள்ள ரிஷிகளெல்லோரும் ஒன்றும் தெரியாத மூடர்கள். அர்ஜுனனும், காளிதாசனும், சங்கராசாரியாரும், சிவாஜியும், ராமதாஸரும், கபீர்தாஸரும், அதற்கு முன்னும் பின்னும் நேற்று வரை யிருந்த பாரத தேசத்தாரனைவரும் நெஞ்சில் வளர்த்து வந்த பக்திகளெல்லாம் இழிந்த, அநாகரிகமான மூட பக்திகள்" என்பது முதலான ஆங்கிலேய 'சத்தியங்க'ளெல்லாம் என் உள்ளத்திலே குடி புகுந்து விட்டன. ஆனால் கிறிஸ்தவப் பாதிரி ஓர் வினோதமான ஜந்து. ஹிந்து மார்க்கத்திலும், ஹிந்து நாகரிகத்திலும் பக்தி செலுத்துவது பேதமை என்று ருஜூப்படுத்திக் கொண்டு வரும் போதே அவர் கொண்டாடும் கிறிஸ்து மார்க்கமும் மூட பக்தி என்று வாலிபர் மனதில் படும்படி ஏற்பாடு செய்து விடுகிறார். மத விஷயங்களைப்பற்றி விஸ்தாரமான விவகாரங்களெழுதிப் படிப்பவர்களுக்கு நான் தலைநோவுண்டாக்கப் போவதில்லை. சுருக்கம்; நான் எனது பூர்வ மதாசாரங்களில் பற்று நீங்கி ஞானஸ்நாநம் பெறவில்லை.— பிரம ஸமாஜத்திலே சேர்ந்து கொண்டேன்.

சிறிது காலத்திற் கப்பால் பட்டணத்தில் படிப்பை நிறுத்திவிட்டு, வீட்டில் யாரிடமும் சொல்லாமல் கல்கத்தாவுக்குப் புறப்பட்டுப் போய், அங்கே பிரம ஸமாஜத்தாரின் மார்க்க போதனை கற்பிக்கும் பாடசாலை யொன்றில் சேர்ந்து சில மாதங்கள் படித்தேன். பிரம ஸமாஜத்தாரின் 'உபதேசி'களில் ஒருவனாக வெளியேற வேண்டுமென்பது என்னுடைய நோக்கம். அப்பால் அங்கிருந்து பஞ்சாப், ஹிந்துஸ்தானம் முதலிய பல பிரதேசங்களில் யாத்திரை செய்துகொண்டு கடைசியாகச் சென்னப்பட்டணம் வந்து சேர்ந்தேன். நான் ஹிந்து மார்க்கத்தை விட்டு நீங்கியதாக எண்ணி, எனது ஜாதியார் என்னைப் பல விதங்களில் இம்சை செய்தார்கள். இந்த இம்சைகளினால் எனது சித்தவுறுதி நாளுக்கு நாள் பலமடைந்ததே யல்லாமல், எனக்கு மனச் சோர்வு உண்டாகவில்லை. எனது தகப்பனார்—இவர் பெயர் துபாஷ் ராமச்சந்திர நாயுடு—வெளி வேஷ மாத்திரத்தில் சாதாரண ஜனங்களின் ஆசார விவகாரங்களை வைத்துக் கொண்டிருந்தா ரெனினும், உள்ளத்தில் பிரம ஸமாஜப் பற்றுடையவர். ஆதலால், நான் வாஸ்தவமான பரமாத்ம பக்தியும், ஆத்ம விசுவாசமும், எப்போதும் உபநிஷத்துக்கள் படிப்பதில் சிரத்தையும் கொண்டிருப்பது கண்டு அவருக்கு அந்தரங்கத்தில் மிகுந்த உவகை யுண்டாயிற்று. வெளி நடப்பில் என் மீது கோபம் பாராட்டுவது போலிருந்தாரே யன்றி, எனது பந்துக்கள் சொற்படி கேட்டு என்னைத் தொல்லைப் படுத்தவில்லை. சகல சவுகரியங்களும் எனக்கு முன்னைக் காட்டிலும் அதிகமாக நடக்கும்படி வீட்டில் ஏற்பாடு செய்து வைத்திருந்தார். ஆனால் எனது தமையன் மாத்திரம் என்னிடம் எக்காரணம் பற்றியோ மிகுந்த வெறுப்புப் பாராட்டினான். நான் தலையிலே பஞ்சாபிகளைப் போலப் பாகை கட்டிக்கொள்வது வழக்கம். '15 ரூபாய்'க் குமாஸ்தாக்களுக்கென்று பிரத்தியேகமாக அழகு, அந்தம், ஆண்மை எதுவுமின்றி ஏற்பட்டிருக்கும் கும்பகோணத்துப் பாகை நான் கட்டிக் கொள்ளுவதில்லை. இதுகூடத் தமையனுக்குக் கோபமுண்டாக்கும். "ராஜ புத்ருடு வீடு தொங்க விதவா! தலலோ மஹா ஆடம்பரமுக பகடி வீடிகி!" என்று ஏதெல்லாமோ சொல்லி ஓயாமல் திட்டிக் கொண்டிருப்பான். இப்படி யிருக்க, ஒரு நாள் எனது தகப்பனார் திடீரென்று வாயுக் குத்தி இறந்து போய்விட்டார். அவருக்கு பிரம ஸமாஜ விதிப்படி கிரியைகள் நடத்த வேண்டுமென்று நான் சொன்னேன். எனது தமையன் சாதாரண ஆசாரங்களின்படிதான் நடத்த வேண்டுமென்றான். பிரமாத சலசங்கள் விளைந்து, நானாறு மத்தியஸ்தங்கள் நடந்த பிறகு ஸ்மசானத்தில் அவன் தனதிஷ்டப்படி கிரியைகள் நடத்தி முடிந்த பின்பு, நான் எனது கொள்கைப்படி பிரம ஸமாஜ குரு ஒருவரை வைத்துக்கொண்டு கிரியைகள் செய்தேன். இதுவெ

லாம் எனது மாமா, ரா. ப. சுந்தரராஜுலு நாயுடுவுக்கு என்மீது மிகுந்த கெட்ட எண்ணம் உண்டாகும்படி செய்துவிட்டது. ஆதலால் விவாகம் தடைப்பட்டுக் கொண்டே வந்தது. ஆனல், இறுதி வரை என்னை யெப்படியேனும் சீர்திருத்தி எனக்கே தனது மகளைப் பாணிக்ரஹணம் செய்து கொடுக்க வேண்டுமென்பது அவருடைய இச்சை.

* * *

வசந்த காலம், நிலாப்பொழுது, நள்ளிரவு நேரம், புரசைபாக்கம் முழுமையும் நித்திரையிலிருந்தது. விழித்திருந்த ஜீவன்கள் இரண்டே. ஒன்று நான்; அவள் மற்றொன்று. இன்பமான காற்று வீசிக்கொண்டிருந்தது. மேல் மாடத்தில் மீனம்பாளுடைய அறையிலிருந்து முறைப்படி வீணைத் தொனி கேட்டது. ஆனல் வழக்கப்படி குறட்டை கேட்கவில்லை. ராவ் பகதூர் குறட்டை மாமா ஊரிலில்லை. வெளியே ஒரு கிராமத்துக்குப் போயிருந்தார். நான் நிலா முற்றத்தில் எனது கட்டிலின் மீது உட்கார்ந்து கொண்டிருந்தேன். என் உள்ளத்திலோ இரண்டு எரிமலைகள் ஒன்றையொன்று சீறி யெதிர்த்துப் போர் செய்து கொண்டிருந்தன. இவற்றுள்ளே ஒன்று காதல்; மற்றொன்று பின்பு தெரியவரும். வீணைத் தொனி திடீரென்று நின்றது. சிறிது நேரத்தில் எனது பின் புறத்தில் ஒரு ஆள் வந்து நிற்பதுணர்ந்து, திரும்பிப் பார்த்தேன். மீனம்பாள்!

இப்பொழுதுதான் நாங்கள் புதிதாகத் தனி யிடத்திலே சந்தித்திருக்கிறோமென்றும், அதனல் இங்கு நீண்டதோர் காதல் வர்ணனை எழுதப்படுமென்றும் படிப்பவர்கள் எதிர்பார்க்க வேண்டாம். இவ்விதமாக நாங்களிருவரும் பலமுறை சந்தித்திருக்கிறோம். மீனம்பாள் மஞ்சத்தின்மீது உட்கார்ந்தாள்.

'மீன! இன்று உன்னிடத்தில் ஒரு விசேஷம் சொல்லப்போகிறேன்' என்றேன். 'எனக்கு அது இன்னதென்று ஏற்கனவே தெரியும்' என்றாள்.

'என்னது? சொல்லு.'

'நீ பிரமசரிய சங்கற்பம் செய்து கொள்ளப் போகிறாயென்ற விசேஷம்.'

'ஏன்? எதற்கு? எப்படி? உனக்கு யார் சொன்னார்கள்?' என்று கேட்டேன்.

'வந்தே மாதரம்' என்றாள்.

மீனம்பாளுடைய அறிவுக் கூர்மை எனக்கு முன்னரே தெரியுமாதலால், அவள் சொல்லியதிலிருந்து அதிக வியப்புண்டாகவில்லை. அதன் பின் நான் அவளிடம் பின் வருமாறு கூறலாயினேன்:

"ஆம். பாரத தேசத்தை இப்பொழுது பிரமசாரிகளே ரக்ஷிக்க வேண்டும். மிக உயர்ந்திருந்த நாடு மிகவும் இழிந்து போய்விட்டது. இமயமலை யிருந்த இடத்தில் முட் செடிகளும் விஷப் பூச்சிகளும் நிறைந்த ஒரு பாழுங்காடு இருப்பது போலாய்விட்டது. அர்ஜுனன் வாழ்ந்த மாளிகையில் வௌவால்கள் தொங்குவது போலிருக்கிறது. இதை பிரமசாரிகளே காப்பாற்ற வேண்டும். பொப்பிலி ராஜாவின் மகனுகவேனும், ராஜா ஸர் ஸவலே ராமஸாமி முதலியார் மகனுகவேனும் பிறக்காமல், நம்போன்ற சாதாரணக் குடும்பங்களிலே பிறந்தவர்கள் விவாகம் செய்து கொண்டால் இந்தப் பஞ்ச நாட்டில் அவர்களுக்கு மூச்சு முட்டிப் போகிறது. குருவியின் தலையிலே பனங்காயை வைப்பது போல இந்த நரிக் கூட்டத்திலுள்ள ஒரு வாலிபன் தலையிலே ஒரு குடும்ப பாரத்தைச் சுமத்தும்போது அவனுக்குக் கண் பிதுங்கிப் போய்விடுகிறது. அவனவனுடைய அற்பக் காரியங்கள் முடிவு பெறுவதே பகீரதப் பிரயத்தனமாய் விடுகிறது. தேச காரியங்களை இவர்கள் எப்படிக் கருதுவார்கள்? பிரமசாரிகள் வேண்டும்; ஆத்மஞானிகள் வேண்டும்; தம் பொருட்டு உலக சுகங்களை விரும்பாத தீரர்கள் வேண்டும். இந்த சுதேசியம் கேவலம் ஒரு லௌகிக காரியமன்று, இது ஒரு தர்மம். இதில் பிரவேசிப்பவர்களுக்கு வீர்யம், தேஜஸ், கர்ம யோகித் தன்மை முதலிய அரிய குணங்கள் வேண்டும். நான் பிரும்மசரிய விரதத்தைக் கைக்கொள்ளலாமென்று நினைத்திருக்கிறேன். ஆனல்—"

வேண்டுகோள்

காலஞ் சென்ற கவிச் சக்கரவர்த்தி சுப்பிரமணிய பாரதியாரின் தனிப் பாடல்களும், கட்டுரைகளும், கதைகளும் பல விடங்களில் பல பேர்களிடத்தில் இருப்பதாகச் சொல்லப் படுகின்றது. அச்சடித்த காகிதங்களாகவோ, அல்லது கை யெழுத்துப் பிரதிகளாகவோ வைத்திருக்கும் அன்பர்கள் அவைகளைத் தயவு செய்து சங்கு காரியாலயத்துக்கு அனுப்புவார்களாக. தமிழர் அனைவரும் அவைகளைச் சுவைக்க வேண்டாமா?

—ஆசிரியன்.

மீன :—'ஆனல், நான் அதற்கு ஒரு சனியாக வந்து குறுக்கிட்டிருக்கிறேனென்று சொல்லுகிறாய்.'

'பார்த்தாயா! பார்த்தாயா! என்ன வார்த்தை பேசுகிறாய்? நான் சொல்ல வந்ததைக் கேள். எனது புதிய சங்கற்பம் ஏற்படு முன்னதாகவே என் உயிரை உனக்கு அர்ப்பணம் செய்து விட்டேன். இப்போது எனது உயிருக்கு வேறொரு கடமை ஏற்பட்டிருக்கிறது. அவ்விஷயத்தில் உனது கட்டளையை எதிர் பார்த்திருக்கிறேன்' என்றேன். அவள் ஏதோ மறுமொழி சொல்லப் போனாள். அதற்குள் வாயிற்புறத்தில் ஒரு வண்டி வந்து நிற்கும் சத்தம் கேட்டது.

'நாயன்ன வந்துவிட்டார். நான் போகிறேன்' என்று சொல்லி ஒரு முத்தத்துடன் பிரிந்தாள்.

குறட்டை நாயுடு கதவை உடைத்து, உள்ளிருக்கும் குறட்டைகளை யெல்லாம் எழுப்பி, மேலே வந்து, படுத்து அரை நாழிகைக்கெல்லாம் தமது தொழிலை ஆரம்பித்து விட்டார். இரண்டு ஜீவன்கள் அன்றிரவு முழுதும் விழித்திருந்தன. ஒன்று நான்; அவள் மற்றொன்று.

[இந்த அபூர்வமான சிறு கதையின் இரண்டாவது அத்தியாயத்தை அடுத்த இதழில் பார்க்கவும்.]

ரூஸோ

பிரான்சு தேசப் பெரியார்

"சுதந்திர மந்திர" ஆசிரியர்

பந்தை உந்தினால், அது ஓட்டம் பெறுகிறது. உதைத்தால் கால் வலிக்குமே என்று தயங்கினால், பந்து நின்ற விடத்தில் தான் நிற்கும். ஓட்டத்தில் உறைசல் உண்டு; குலுங்கலும் அதிர்ச்சியும் இருந்தே தீரும். இவற்றிற்குப் பயந்தால், வாழ்க்கைப் பிரயாணம் நடக்காது. இருந்த இடத்தில் இருக்க வேண்டியது தான்.

18-ம் நூற்றாண்டில் பிரான்சில் பிரபுக்கள் என்றும் ஏழைகள் என்றும் ஜனங்கள் பிரிவுற்றுக் கிடந்தார்கள். பிரபு குலத்தில் பிறக்காதவனுக்கு உத்தியோகம், கௌரவம் ஒன்றும் கிடையாது. தாங்க முடியாத வரிகள். சில வரியோ ஏழைகளுக்கொன்று, குல மக்களுக்கொன்று என்ற பாரபட்சம். உப்பு விஷயத்திலோ, சர்க்கார் ஏகபோக உரிமை கொண்டாடி, வியாபாரம் செய்யத் துவங்கி விட்டது. ஆனால், விஞ்ஞான சாஸ்திரத்தில் ஜனங்களுக்குப் பிரமாத மோகம். இந்த நிலைமையில் தான் ரூஸோ என்ற பெரியார் அங்கு உதயமானார். இப்பொழுது சர்வதேச சங்கத்தின் 'தலை நகராயிருக்கிறதல்லவா, அந்த ஜெனிவாவில் தான் 1712 ௵ ஜூன் ௴ 28௳ ரூஸோ ஜனித்தார். அவர் ஜனனம் பிரஞ்சுப் புரட்சிக்கு ஒரு விதையாகும்.

"மனிதன் சுதந்திரமுடையவனாகத் தான் பிறக்கிறான். ஆனால், எந்த விடத்திலும் விலங்குகள் தரித்தவனாகவே வாழ்கிறான்" என்று, ஆத்திரத்துடன் கர்ஜித்தவர் ரூஸோ. அவர் தந்தைக்குக் கடிகாரம் செய்யும் வேலை; தாய் ஒரு பாதிரியின் புதல்வி.

ரூஸோ ஒரு நோட்டரி என்ற உத்தியோகஸ்தரிடம் வேலை கற்க அமர்ந்தார். பிறகு சித்திர வேலைக்காரர் ஒருவரிடம், 'கற்றுக் குட்டி'யாக வேலை பார்க்கலானார். இடம் அவருக்கு ஒத்துக் கொள்ளவில்லை. பக்கத்து ஜில்லாவான சேவாய்க்கு ஓடினார். அங்கு வாரன்ஸ் என்ற சீமாட்டியின் சிநேகம் கிடைத்தது. அம்மாது இவரை டூரின் கலாசாலைக்குப் படிக்க அனுப்பினார். அங்கு சில சில்லரைத் தில்லுமுல்லுகள் செய்துவிட்டு, வாரன்ஸ் மாதிடமே வந்து சேர்ந்தார். அவள் ஒரு கத்தோலிக்கப் பள்ளிக்கூடத்துக்கு இவரை மறுபடியும் அனுப்பினாள். அங்கும் தகராறு. திரும்பவும் வாரன்ஸ் பெண்மணியையே தேடி வந்தார். ஆனால், அப்போது அம்மாது அவ்வூரிலில்லை. அயலூர் போய்விட்டாள்.

ஜீவனம் செய்ய வேண்டுமே? அப்போது அவருக்குச் சங்கீதம் என்றால், 'நிறுவைச் சரக்கா, அளவுச் சரக்கா?' என்று கேட்கக் கூடிய ஞானமே உண்டு. என்றாலும், கச்சேரி செய்தும், பாட்டுச் சொல்லிக் கொடுத்தும் சம்பாதிக்கத் துவங்கிவிட்டார்! பொருளாதாரத்திலும் அவருக்கு அதே ஞானந் தான். என்றாலும், ஆலயத் திருப்பணிக்குப் பணம் வசூலித்த ஒரு கிரேக்க கனவானிடம் பெட்டியடிக் கணக்கராக உத்தியோகம் ஏற்றுவிட்டார்!

ஒரு சமயம் ஒரு சர்க்கார் உத்தியோகஸ்தருக்கு அந்தரங்க சேவகனாயமர்ந்து, பாரிஸுக்குச் சென்றார். அங்கிருந்து கால் நடையாகவே சுமார் 300 மைல் தூரத்துக்கு மேலிருக்கும் சேவாய்க்கு ஓடிவந்தார்.

1732-ம் வருடத்தில் மறுபடியும் வாரன்ஸ் மாதுடன் கூடி வாழ்ந்தார். 10 வருடம் இப்படிச் சென்றது. அது தான் அவர் இன்பகரமாய்க் கழித்த காலம். மறுபடியும் ஊர் சுற்றும் வாழ்க்கை துவங்கிவிட்டது. லார்னேஜ் என்ற மாதுடன் மாண்ட் பெலீர் என்னுமிடத்தில் தோழமை கொண்டு விட்டார். அதுவும் சிறிது காலமே.

பிறகும், உபாத்திமை, காரியதரிசி, காப்பி குமாஸ்தா ஆகிய உத்தியோகங்களெல்லாம் பார்த்தார். எதிலும் பழுதில்லாமல் அவர் வேலை செய்ததே கிடையாது. பத்தாந்தரமான ஒரு வேசையின் சிநேகத்தை வேறு பிடித்து விட்டார். அவள் 5 குழந்தைகளைப் பெற்றுத் தள்ளிவிட்டாள். அவற்றையெல்லாம் இவர் குழந்தைகள் வளர்ப்பு ஆஸ்பத்திரி ஒன்றில் சேர்க்க வேண்டியதாயிற்று.

1749-ம் வருடத்தில் அவருடைய சக்கரம் திரும்பிற்று. "டிஜன் அகாடெமி" என்ற சங்கம் ஒரு பரிசு விளம்பரம் செய்தது. "நாகரிகத்தினால் ஏற்பட்ட முற்போக்கு என்ன?" என்ற விஷயத்தைப்பற்றிச் சிறந்த வியாசம் எழுதுபவருக்கு அந்தப் பரிசைக் கொடுப்பதாக விளம்பரம். அந்தப் பரிசு ரூஸோவுக்குக் கிடைத்தது. "இயந்திர நாகரிகம் மனிதனது பிறப்பு வேற்றுமையைப் பெரிதாக்கி, மனித குலத்துக்குப் பெரும் நாசத்தைப் புரிந்துவிட்டது; மனிதன் எளிய கிராம வாழ்வுக்குத் திரும்பவேண்டும்" என்பதுதான் அதன் சாராம்சம். இந்த வியாசத்தால் அவருக்குப் பெயரும் புகழும் கிடைத்தன. அதிலிருந்து அவர் புதுமையான—சில சமயம் விசித்திரமான—கருத்துக்கள் அடங்கிய பல நூல்களும் வியாசங்களும் எழுதலானார்.

புத்தி சலனமற்று, மயங்கி, மோகித்துக் கிடந்த ஜனங்களிடம் இந்தக் கருத்துக்கள், ஒரு எழுச்சியை உண்டாக்கி விட்டன. பிறப்பிலே, குல மகன் எளியவன், உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற மயக்க எண்ணங்கள் ஜனங்களின் மனத்தைவிட்டு அகன்றோடத் துவங்கின.

பின்னால், எழுதிய கல்வி சம்பந்தமான ஒரு நூல் மத குருக்கள் கோபத்தையும், சர்க்கார் பகைமையையும் பெற, நாட்டை விட்டே அவர் ஓடவும் நேர்ந்தது. சுவிட்ஜர்லாந்து, பிரஷ்யா, இங்கிலாந்து முதலிய பல நாடுகளுக்கு ஓடினார். எங்கும் தொல்லையும் கூடவே தொடர்ந்தது.

1770-ம் ஆண்டில் ஏழையாய், அகதியாய், நரைகூடிக் கிழப்பருவ மெய்தியவராய்ப் பாரிஸுக்கு வந்தார். கிரார்டின் என்ற ஒரு கனவான் அவரிடம் இரக்கங் கொண்டு தங்க இடங் கொடுத்தார். அங்கு 1778 ௵ ஜூலை ௴ 2௳ திம ரென்று உயிர் நீத்தார்.

அவர் இறந்த சிறிது காலத்துக் கெல் லாம், அதாவது 1789-ம் வருடத்தி உலகப் பிரசித்தி பெற்ற பிரஞ்சு புரட்சி ஆரம்பித்தது. அதை எ சரித்திராசிரியனும் மறக்க முடியாது. அது சுதந்திரப் புரட்சி, ஜன நாயகப் புரட்சி, சமத்துவப் புரட்சி. அதற்கு அடிகோலிய பெரியார்கள் ஒரு சிலரே அவருள் நமது ரூஸோவும் ஒருவ என்பது உலகப் பிரசித்தமாகு ஆனால் அவர் மிக்க ஏழைக் குடும்பத்தில் பிறந்தவரென்பதை மறுபடியு ஞாபகப்படுத்திக் கொள்வோம்.

லக்ஷ ரூபாய் வேண்டாம்!

(தீப்பு எழுதியது)

வேண்டவே வேண்டாம்! எனக்கு லக்ஷ ரூபாய் சொத்துத் தருவதாக "அதிருஷ்டம்" வந்து நாளைக்குச் சொல்லுமானால் "வேண்டாம்" என்று அழுத்தந் திருத்தமாய்ச் சொல்லி விடுவேன். ஆனால் அந்த அயோக்கிய 'அதிருஷ்டம்' முன் நோட்டீசு தருவதே கிடையாது. முன்னறிவிப்பு இல்லாமலேயே இந்தப் பாழும் பணம் குவியும் இயல்புடையதா யிருக்கிறது. பணம் வேகமாகச் சேரும் காரணமும் கண்ணுக்குத் தெரிவதில்லை. காண முடியாத காரணத்திற்கு 'அதிருஷ்டம்' என்று செல்வப் பெயர் வைத்திருக்கின்றார்கள். 'அதிருஷ்டம்' என்பது ஐந்து தலைத் தெய்வமுமல்ல. அதற்கு ஐம்பது கையும் கிடையாது. அதிருஷ்டம் என்றால் காரணம் ஒன்றுமே யில்லை என்றுதான் அர்த்தம். அதாவது சூன்யம்! 'சூன்யம்' தரும் பிச்சையை வாங்கிக் கொள்ள எனக்கு வெட்கமா யிருக்காதா?

பிச்சைக்காரனோடாவது அநேக மக்கள் பிரியமாகப் பேசுகின்றார்கள். நான் ஒரு கோடீச்வரனாக இருந்தால் ஒருவராவது என்னோடு முகங் கொடுத்துப் பேசப் போவதில்லை.

பசப்பிப் பேசும் போலி நண்பர், பல்லைக் காட்டும் சுற்றத்தார், வேலைக்காரர்கள்—என்-மனைவி பிள்ளைகளுள்பட சகலரும்—"இவன் எப்போது சாவான், எவ்வளவு நமக்கு எழுதி வைப்பான் அல்லது நாம் கொள்ளையடிக்கலாம்" என்றே யோசிப்பார்கள். மனித உணர்ச்சி, அன்பு, லவலேசமுமில்லாத கோடீச்வர வாழ்க்கை எனக்கு வேண்டவே வேண்டாம்.

பத்திரிகைகளில் பார்த்தால் ஏராளமான விளம்பரங்கள் இருக்கின்றன. குழந்தைகள், மாணவர், ஷோக்கர், படிப்பாளி, வேதாந்தி, கருமான் முதலிய பல திறப்பட்ட கூட்டத்தாரின் உபயோகத்திற்கென்று பல பொருள்கள் விற்கப்படுகின்றன. இராஜாக்களுக்குக் கூடத் தனிச் சாமான்கள் உயர்ந்த விலைகளில் கிடைக்கின்றன. ஆனால் எவ்வளவுதான் தன்னுடைய சொத்தின் எல்லையென அறியாது இருக்கும் கோடீச்வர ஜாதிக்கென்று தனிச் சாமான் எதுவும் கடையில் கிடைப்பதில்லை. 150 கோடி மக்களடங்கிய உலகத்தில் இந்த நூறு பேர் வழிகளுக்குப் பிரத்தியேகமாக என்ன சாமானைத் தயார் செய்யக் கூடும்?

ஏழைகளுக்கென்று கிழிந்த துணிகளை—பழந்துணிகளை மூர்மார்க்கட்டில் வெகு அழகாக அடுக்கி, விலைக்கு வைத்திருக்கிறார்கள். நம்மைப் போன்ற சாதாரணப் பேர்வழிகளுக்கு திருப்பூர் கதர்க் கடை யிருக்கின்றது. பணக்காரர்களுக்கு, லக்ஷாதிபதிகளுக்கு ஜரிகைத் துப்பட்டாக்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. முப்பது கோடியில் ஒரே ஒரு மோதிலால் நேரு சீமையில் துணியைச் செய்து, பிரான்சில் அதைச் சலவை செய்து இந்தியாவுக்குக் கொணர்ந்து அதிக நாள் உபயோகிக்காமல் ஷோக் வாழ்வு வாழ்ந்திருக்கலாம். ஆனால் கோடி கோடியாய்க் காசு வைத்துக் கொண்டிருக்கும் அந்தச் சின்னக் கூட்டத்தாருக்குத் தனித் துணி கிடையவே கிடையாது. சாதாரணப் பணக்காரனை விட அவர்களுக்கு மதிப்புத் தரும் ஆடை ஒன்று கூட உலகிலில்லை.

"ஆயிரம் ரூபாய் விலையுள்ள வேஷ்டியைத்தான் கட்டிக்கொள்வது" என்று ஒரு கோடீச்வரன் சொன்னால் அந்த விலையில் உலகில் சாமானே கிடைப்பதில்லையே, அவன்தான் என்ன செய்வான் பாவம்?

சாதாரண மனிதனைவிட அதிகமாக அனுபவிக்க, கோடீச்வரனுக்கு வழியையே காணோம். தங்க மோட்டார் கிடைப்பதில்லை; முத்துத் தம்ளர் விலைக்கு வருவதில்லை. தனி ரயிலில் போவதால் தனிப் பெருமை யென்றாலோ 30 ரூபாய் சம்பாதிக்கும் பிளாத்து டிரைவரொருவன் அதே வண்டியில் நிற்கின்றான்.

ஹோட்டலில் போய்ச் சாப்பிடலாமென்றாலோ குங்குமப் பூப் போட்ட போண்டா, மயில் மூளை சூப்பு இவை கிடைப்பதில்லை. சாதாரணத் தயிர் போண்டாவும் வான்கோழிப் புலவும் தான் கிடைக்கிறது. இந்த இழவெடுத்த ஆகார விஷயம் மகா மகா கோடீச்வரனையும் சாதாரண மனிதனோடு ஸமத்வனாக்குகின்றது. என்ன அநியாயம்!

ஒருவன் யாதொரு முதலுமில்லாமல் முப்பது ரூபாய் ஜனவரி மாதத்தில் சம்பாதிப்பதாக வைத்துக் கொள்வோம். அடுத்த மாதத்தில் அறுபது ரூபாய் அவனுக்குக் கிடைப்பதாகவும் வைத்துக் கொள்வோம். தனது வரும்படியை ஒட்டிக்கிரட்டியாக ஆக்கிக் கொண்டதால் அவன் பரமானந்தமடைகிறான். உலகிலேயே பெரிய சம்பளக்காரராக இந்திய வைஸ்ராயைச் சொல்லுகிறார்கள். லக்ஷ ரூபாய் கிடைக்கும் வில்லிங்டன் துரைக்கு மூன்று லக்ஷ ரூபாய் கிடைத்தாலும் திருப்திதான். பல கோடி ரூபாய்களை உடையவனுக்கு இந்த மாதிரி இரட்டிப்பு வரும்படி வருவதே கிடையாதே; வந்தாலும் தெரிவதில்லையே. அவனுக்கு இத்தகைய சம்பாத்ய இன்பத்துக்குக் கூட வழியில்லையே, என் செய்வது?

ஓர் அளவு வரை தான் மனிதன் இன்பம் அநுபவிக்கலாமென்று ஓர் சட்டம் இருக்கிறாப் போலிருக்கிறது. இன்பம் தெவிட்டி விட்டால் அதற்கு மேலே தேவையில்லை. கட்டாயம் தெவிட்டியே தீருகின்றது என்பதும் நிச்சயம். மனிதனுக்குப் பணத்தின் மேல் ஆசை தான். ஆனால் அவனுக்குக் கோடி கோடியாய்க் கொட்டிக் கொடுத்து, "இந்தா இன்னொரு பத்து லக்ஷம்! இதையும் அநுபவி" என்றால் எப்படி அநுபவிப்பது? பையன்களுக்கு ஸினிமாப் பார்ப்பதில் இஷ்டம் தான். ஆனால் ஸினிமாவில் பீடி விற்கும் பையன் உங்களுக்குப் பிரியமான வித்தலையும், சுலோசனையையும் லக்ஷியம் செய்வதே யில்லையே! அடுத்த காட்சிக்கும் நீ உள்ளே யிருக்க வேண்டுமென்று எஜமான் கட்டளை யிட்டால் பையன் டிமிக்கி கொடுத்து விட்டு ஓடி விடுகின்றானே. அப்படித் தான் பெரிய கோடீச்வரனுக்கும் பணம் தரும் இன்பம் ஓரளவுடன் நிற்கின்றது.

கோடீச்வரனென்றால் அவனால் ஒரே நாளில் பத்து நாடகம் பார்த்து விட முடியுமா? ஒரு சமயத்தில் எட்டுக் கோட்டுகளைப் போட்டுக் கொள்ள முடியுமா? அவன் விட்டுக் குசினிக்காரனை விட அதிக ஆகாரத்தைத் தின்று ஜீரணிக்கத் தான் முடியுமா? நிறையப் பணம் வைத்துக் கொண்டிருந்தால் தினம் பிச்சையெடுப்போர் கடிதங்களைத் தான் படிக்க வேண்டி நேரிடும். இது என்ன ஓர் ஆனந்தமா? நாளைய தினம் எவ்வளவு அதிகங் கிடைக்கும் என்று பனக் கோட்டை கட்டிக் கொண்டு அதில் சந்தோஷப்படுகின்றானே ஒரு போர்ட்டர், அத்தகைய இன்பக் கனவு ஒரு நாளாவது கோடீச்வரனுக்கு உண்டா?

அதிகப் பணம் படைத்தவன் அவ்வப்போது படும் கஷ்டங்களுக்கு அநுதாபம் காட்டுவார் கூடக் கிடையாது. ஏழைக்குத் தான் இரங்குகிறார்கள். கஷ்ட நிவாரணச் சங்கங்கள் தோன்றுகின்றன. ஆனால் கஷ்டப்படும் கோடீச்வரனுக்கு ஆறுதல் கூறக்கூட ஆள் கிடையாது. அவன் முன்னே தோன்றுபவர்களனைவரும் ஒன்று பிச்சையெடுப்போர்; அல்லது கொள்ளையடிக்கச் சமயம் பார்ப்போர்; இந்த இரண்டு ரகத்தைத் தவிர வேறு மனிதர் தோன்றுவதேயில்லை. "அவனுக்கென்ன கேடு!" என்று கோடீச்வரனைப் பற்றிப் பேசுபவர்கள் தான் உலகில் அதிகம். இது புகழ் மொழியா?

தென்னிந்தியாவில் ஒரு பிரசித்தி பெற்ற பணக்காரரைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தபோது "அவன் கிடக்கிறானையா!" என்று ஒரு வாயாடி விட்டெறிந்து பேசினான். இதன் தன்மையென்ன வென்று நான் அவனைக் கிண்டினேன்.

"அவர் பணத்தில் பெரும் பகுதி லேவாதேவியில் போடப் பட்டிருக்கிறது. வருஷா வருஷம் லக்ஷ ரூபாய் வட்டியாகச் சேருகிறது. இந்த அதிக லக்ஷ ரூபாய் எப்படி வந்தது? பவுன், ரூபாயைக் கல்யாணம் செய்து கொண்டு குட்டிகளைப் போட்டதா? இல்லையே! பணம் அவ்வாறு செய்யுமானால் அதற்குக் கர்ப்பத் தடை செய்து விடலாமே. எங்கிருந்த பணமோ எத்தகைய கஷ்டப்பட்டவர்கள் பணமோ ஒரு லக்ஷம் அதிகமாக அவனிடம் குவிந்திருக்கிறது. அதென்ன காசையா காசு! நிறைய லாபம் வருமென்றெண்ணி நிறைய மோட்டார் பஸ்ஸுகளை அவர் ஓட விட்டார். அரையரையணுக்களாகச் சாதாரண மனிதர் தந்த காசெல்லாம் அவரிடம் குவிந்தது. அவருக்கு வரும் வரும்படியெல்லாம் சாதாரண மனிதர்களிடமேயிருந்தன்றி அவரைப் போன்ற பணக்காரர்களிடமிருந்து பைசாக் கூடச் சேரவில்லை. ஆகவே அந்தப் பணக்காரருக்குப் பணப்பிச்சை தருபவர்கள் நம்மைப் போன்ற பெரியார்கள் தான்" என்று ஜம்பமாக அந்த வாயாடி கூறிச் சென்றான். அந்தச் சீமானோடு அவருடைய ஊரில் உள்ள முருகன் என்ற உழவனை நான் தாரதம்யம் பார்த்தேன். அவன் மண்ணில் செடியை நட்டுப் பயிராக்கிப் பலனை அறுத்து ஜீவிக்கின்றான். இன்னொரு மனிதனிடமிருந்து சம்பாதிப்பது நல்லதா அல்லது இயற்கையிடமிருந்து பலனைச் சிருட்டி செய்வது நல்லதா வென்று ஆலோசித்த போது முருகனுக்கே மதிப்பு அதிகம் தர வேண்டியிருந்தது.

இப்படியெல்லாம் ஆலோசித்தால் கோடி ரூபாயோ லக்ஷ ரூபாயோ வேண்டவே வேண்டாமென்ற தீர்மானத்திற்குத் தான் நான் வரவேண்டியிருக்கின்றது. "பெட்டியில் செல்வம் குவிந்தால் பிள்ளை குட்டி பிறக்காது" என்று நாட்டு வார்த்தை ஒன்றுண்டு. இத்தகைய சாபங்களுக்கெல்லாம் ஆளாக எனக்கு இஷ்டமில்லை. ஆகவே அதிர்ஷ்டமே போய் வா! லக்ஷ ரூபாய் வேண்டாம். கை யுழைப்பினால் கால் ரூபா கிடைத்தாலும் எனக்குப் போதும்.

இன்பத்தமிழ்

(பாரதி தாஸன் பாடியது)

சோட்.] [ஏகதாளம்.

தமிழுக்கு அமுதென்று பேர், அந்தத்
தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்!
தமிழுக்கு நிலவென்று பேர், இன்பத்
தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவுக்கு நீர்.
தமிழுக்கு மணமென்று பேர், இன்பத்
தமிழ் எங்கள் வாழ்வுக்கு நிருமித்த ஊர்.
தமிழுக்கு மதுவென்று பேர், இன்பத்
தமிழ் எங்கள் உரிமைக்கண் தொடர்புக்கு வேர்.
தமிழ் எங்கள் இளமைக்குப் பால், இன்பத்
தமிழ் தெய்வத் தமிழ் இங்கு புலவர்க்கு வேல்.
தமிழ் எங்கள் உயர்வுக்கு வான், இன்பத்
தமிழ் எங்கள் அசதிக்குச் சுடர்தந்த தேன்.
தமிழ் எங்கள் அறிவுக்குத் தோள், இன்பத்
தமிழ் எங்கள் கவிதைக்கு வயிரத்தின் வாள்.
தமிழ் எங்கள் பிறவிக்குத் தாய், இன்பத்
தமிழ் எங்கள் அருள்சக்தி உளமுற்ற தீ.

ஆஹா! என்ன அழகு!

Courtesy P. C. Magazine.

கவிகளால் வர்ணிக்கப்படும் ஓர் கன்னிகையையும் காதலனையும் சித்திரக்காரர் எழுதுகின்றார்.

ஆஹா என்னே அந்தப் பெண்ணின் அழகு !
வண்டு மொய்த்த தோகை போன்ற கூந்தல் ! சந்திர முகம் !
தாமரைபோன்ற கண்களும் கிளி கொஞ்சும் நாவும் !
சங்கு போன்ற கழுத்தும் கும்பமொத்த தனங்களும் !
கொடியிடைக் கொம்பனையாளுக்கு யானைத் துதிக்கைபோன்ற துடை !
தாமரை மலர்போன்ற பாதங்கள் !
அவளுக்கேற்ற அந்தத் தலைவனின் அழகை என்னேன்பது !
சந்திர முகமும், பிடரிபோன்ற குஞ்சியும் !
திமில்போன்ற தோள்களும், கபாடம்போன்ற மார்பும் !
இரும்புபோன்ற கைகளில் பத்மம்போன்ற ஹஸ்தங்கள் !
அடி மரம்போன்ற கால்களில் தாமரைபோன்ற பாதங்கள் !
இது நல்ல ஜோடியல்லவா ?

பந்தயக் குதிரை

குதிரைப் பந்தயப் பித்துக்கொண்ட இரண்டு பேர்வழிகளின் சம்பாஷணை.

முதல் பேர்வழி :—என், ஸார் ? பந்தயத்துக்கு முதல் நாள் முழுவதும் குதிரை பட்டினிக் கிடக்கிறதாமே ; அது வாஸ்தவந்தானா ?

இரண்டாம் பேர்வழி :—அது எனக்குத் தெரியாது. ஆனால், பந்தயத்திற்குப் பிறகு, பல நாள் நாம் பட்டினி கிடக்க வேண்டி வருவதென்னவோ, மிக வாஸ்தவம்.

* *

பார்த்ததை நம்பலாமா ?

ஒருவன் :—'கண்ணால் பார்த்தேன் என்றேனே ஒழிய, 'நம்பினேன்' என்று உன்னிடம் சொன்னேனா ?

மற்றவன் :—'கண்ணால் பார்த்தேன்' என்றாலே 'நம்பினேன்' என்றுதான் அர்த்தம்.

முதல் பேர்வழி : — அதெப்படி ? உன்னை நான் கண்ணால் பார்த்துக் கொண்டு தானிருக்கிறேன். அதனால், நான் உன்னை நம்புகிறேன் என்று அர்த்தமா, என்ன ?

* *

சங்கீத லாபம்

சோமநாதர் : — என் பெண்ணின் சங்கீதம் எனக்குப் பெரிய லாபத்தைத் தந்து கொண்டிருக்கிறது.

சாமிநாதர் :—கச்சேரி செய்ய ஆரம்பித்து விட்டாளா, என்ன ?

சோமநாதர் : — வீட்டில் தான் பாடுகிறாள். அவள் பாட்டினால், பக்கத்து வீடுகளெல்லாம் பாதி விலைக்குக் கிடைத்து வருகின்றன.

* *

மனைவியின் கோபம்

"சாப்பாடு நன்றாயில்லை" என்று கணவன் முணு முணுக்கலானார்.

மனைவி :— "நல்ல அதிகாரம் செய்கிறீர்கள் ! இப்பொழுது யாராவது பார்த்தால், நான் ஏதோ இந்த வீட்டுச் சமயல்காரி என்றே நினைப்பார்கள்."

கணவன்:—"அப்படி யாராவது நினைத்தால் உடனே அவருக்கு நமது வீட்டில் ஒருவேளை சாப்பாடு போட்டு விட்டால், தமது அபிப்பிராயத்தை மாற்றிக் கொண்டு விடுகிறார்."

பெண்ணரசிகளுக்கு

(வ. ரா. எழுதியது)

ரொம்ப நாட்களாக, அடியிற் கண்ட யாதாஸ்தை உங்களுக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்பது என் ஆசை. தனித் தனியாக அதை உங்களுக்கு நான் அனுப்பி வைத்தால், உங்கள் வீட்டு ஆண் பிள்ளைகள் என்னைக் காணாத விடத்தில் வெருட்டுவார்கள். உங்களைக் கண்ட விடங்களிலெல்லாம் வெருட்டியடிப்பார்கள். ஆண் பிள்ளை அரசர்கள், என் யாதாஸ்தை, ராஜத்துவேஷமாகக் கொள்ளவும் கூடும். ஆனால் பகிரங்கமாய் எதையும் செய்தால், அதனால் பாதகம் ஒரு காலமும் ஏற்படாது.

உங்களிற் சிலர் எனக்குக் கட்டளையிட்ட பிரகாரம், சென்ற ஆயிரத்தைந்நூறு வருஷங்களாக நடந்து வரும் ஆண்பிள்ளை ராஜ்யத்தின் வரலாறு முழுதையும், தஸ்தாவேஜி மூலமாயும் இதர சாதனங்கள் மூலமாயும் கவனித்துப் பார்த்தேன். பெண்களுக்குப் பிறப்புரிமையான ராஜ்யபார பாத்தியம் ஆயிரத்தைந்நூறு வருஷங்களுக்கு முன், ஆண்பிள்ளைகளுக்கு அதிகாரப் பத்திர மூலமாய்க் கொடுக்கப்பட்டது தவறு என்ற முடிவுக்கு வந்தேன். இந்த முடிவைக் குறிக்கும் யாதாஸ்தைத் தான், இப்பொழுது உங்களுக்கு, பகிரங்கமாக வெளிப்படுத்த நான் எண்ணியது.

முதலாவதாக, பெண்களிடமிருந்து ராஜாங்கத்துக்கு அதிகாரப் பத்திரம் தாங்கள் அடைந்த சங்கதியையே, ஆண்பிள்ளைகள் இப்பொழுது அடியோடு மறந்துவிட்டார்கள். பூலோகத்தில் இருக்குமளவும், பெண் அரசிகளுக்குத் தாங்கள் ஏஜண்டுகள், தளகர்த்தர்கள், மந்திரிகள், விகடகவிகள், பாடகர்கள், கணக்கு ஒப்பிப்பவர்கள் என்ற இயற்கைச் சட்டத்தை ஆண் பிள்ளைகள் இப்பொழுது ஒப்புக்கொள்ளுவதில்லை. ஆண் பிள்ளைகள் பெண்களுக்கு இப்பொழுது தாலி கட்டுவதனாலேயே, நான் குறிப்பிட்ட இயற்கைச் சட்டத்துக்குக் காலாவதி ஆகிவிட்டது என்றும், அந்தச் சட்டத்தை, இனி அமுலுக்குக் கொண்டுவர முடியாது என்றும் ஆர்ப்பரித்து, ஆண்பிள்ளைகள் கொக்கரித்துக் கொம்மாளம் போடுகிறார்கள். ராஜ்யபார அதிகாரப் பத்திரத்தை, ஆண் பிள்ளைகளின் கையிலிருந்து பறிமுதல் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமாய் உங்களை வணக்கமாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன்.

மேலும் உங்கள் காரியஸ்தர்களான ஆண் பிள்ளைகள் உங்களை எவ்வளவு கேவலமாகப் பேசுகிறார்கள்! "என்னைப் பெண்பிள்ளை யென்று நினைத்துப் பேசுகிறாயோ" என்று ஒருவன் கேட்டான். பெண் பிள்ளைக்குத் தைரியமில்லையாம்; ரோஸம் இல்லையாம்; பொறுப்பு இல்லையாம்; பெண் பிள்ளைகள் எதிர்த்துப் பேச முடியாதாம்; அவர்கள் பயந்து ஓடிப் போவார்களாம். இன்னும் என்னவெல்லாமோ சொன்னான். சொன்னவன் பெரிய பதவியில் இருக்கிறான். இவன் சொன்னதையே மற்றவர்கள் பல்லவி பாடுகிறார்கள். இவ்வாறெல்லாம் சொல்லுவது தவறு என்று ஆட்சேபித்தேன். "சாண் பிள்ளையானாலும் ஆண்பிள்ளை என்று பெண்களே சொல்லும்பொழுது, நீ என் தப்புக் கட்சி சொல்லி, பரிந்து பேசுகிறாய்" என்று அவர்கள் என்னை அடிக்க வருகிறார்கள். இந்த சம்பவத்தை நன்றாக கவனிக்கும்படியாக உங்களை மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஆண் பிள்ளைகள் பாடும் பாட்டுகளையும், எழுதும் புஸ்தகங்களையும் பார்த்தேன். "இந்திரன் கெட்டதும் பெண்ணாலே, மதி சந்திரன் கெட்டதும் பெண்ணாலே" என்று எவனோ ஒரு போக்கிரி பாடிய பாட்டை, ஆண்பிள்ளைகள் ரொம்ப ஸ்வாரஸ்யமாய்ப் பாடிக் கொண்டிருக்கிறார்கள். "பெண்ணாகி வந்ததொரு மாயப் பிசாசு" என்றும் "சேலை கட்டின மாதரை நம்பினால், தெருவில் நின்று திகைத்துத் தவிப்பரே" என்றும் ஆபாஸங்கள் எழுத்தில் காணப் படுகின்றன. "மருவ நான் மையல் கொண்டேன், தங்கமே தங்கம்" என்று ஒருவன் ஊளையிட்டான்; எனக்கு இதைச் சகித்துக் கொண்டிருக்க முடியவில்லை. உங்கள் அனுமதியின் பேரில், அவனுடைய பற்களைத் தட்ட வேண்டும் என்று காத்துக் கொண்டிருக்கிறேன்.

உங்கள் காரியஸ்தர்களான ஆண்பிள்ளைகளிற் பலர் ராஜாங்க வருமானத்தைக் கண்டபடி யெல்லாம் கெட்ட வழிகளில் செலவழிக்கிறார்கள். குடி, குதிரைப் பந்தயம், சூதாட்டம், வம்புச் சண்டை, வியாஜ்ஜியம், அந்நிய நாட்டுச் சாமான்கள் முதலியவற்றில் தலைகால் தெரியாமல் செலவு செய்கிறார்கள். கணக்கு வைத்துக் கொள்ளுவதுமில்லை; உங்களுக்குக் கணக்குச் சொல்ல, அவர்களுக்கு மனமிருப்பதாகவும் தெரியவில்லை. இவ்வளவு செலவு செய்கிறார்களே, கேள்வி முறையில்லையா? உங்கள் அரண்மனையிலிருந்து வந்த சிறிய ராஜாத்தி ஒரு ஊசி வேண்டுமென்றாள் ஒரு காரியஸ்தனிடத்தில். "பொழுது விடிந்தால், பொழுது போனால், ஊசிக்குத் தான் இழவு புறப்பட்டிருக்கிறது" என்று அவன் கூச்சல் போட்டான்.

நான் என்ன சொல்லிப் பார்த்தாலும் ஆண்பிள்ளைகளுக்குப் புத்தி வருவதாகக் காணவில்லை. "பாம்பாட்டிக்குப் பாம்பினால் சாவு; மரமேறிக்கு மரத்தினால் சாவு. சாவுக்குப் பயப்படுகிறவனுக்குச் சாவு பயத்தினால் சாவு. அடிமைப் பண்ணையை வளர்க்கும் முதலாளிக்கு அடிமை மூலமாய்ச் சாவு" என்று சொல்லிப் பார்த்தேன். அவன் மசிவதாகத் தோன்றவில்லை.

இந்த யாதாஸ்தில் கண்ட யாவும் சத்தியம் என்று உறுதி கூறுகிறேன். மேலே, உங்களுடைய கட்டளைகளுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறேன்.

BOOKS by MAHATMA GANDHI

(in English)

	Rs. A.
Satyagraha in South Africa	... 4 8
Young India Vol. I	... 4 0
Young India Vol. II	... 4 0
A Guide to Health	... 0 12
Neethi Dharma	... 0 8
Indian Home Rule	... 0 8

Swathanthra Sangu Book Depot
8-c, Pycrofts Road,
Triplicane, Madras.

புல்லாக்கும் பச்சடியுமா?

("ராஜாத்தி"யின் கடிதம்.)

எனது அருமைத் தோழி
ரங்கநாயகிக்கு,

பெண்களாகிய நமக்கு இப்படி ஆபத்துக்குமேல் ஆபத்துவரும் என்று நான் நினைத்ததே யில்லை, அம்மா! ஏதோ விடிவு காலம் வந்து கொண்டிருப்பதாக, நானும் நீயும் எத்தனை தடவை சந்தோஷப்பட்டிருக்கிறோம்!

"சங்கு"ப் பத்திரிகை கூடிய சீக்கிரம் வெளிவரப் போவதாய்த் தெரிவித்திருக்கிறாய். அது சந்தோஷமான செய்திதான். அதற்கு ஏதோ நாம் விஷயதானம் செய்ய வேண்டுமென்கிறாய். அதுவும் சந்தோஷமே. ஆனால், என்னவோ "பெண்கள் பக்கம்" என்றும், அதில் நாம் எழுதவேண்டும் என்றும் சொல்லுகிறாயே, அதென்ன அது? "சங்கு" சுதந்திர முழக்கம் செய்யும் பத்திரிகையாயிற்றே; அதன் ஆசிரியருக்குமா இந்த விபரீத யோசனை தோன்ற வேண்டும்? அதற்கு நீயுமா உடன்பட வேண்டும்?

"பெண்கள் பக்கம்" என்று ஒரு பக்கத்தை ஒதுக்கினால், அதற்கு என்னென்னவோ அர்த்தம் தொனிக்கிறது, ரங்கம்! மற்றப் பக்கங்களை யெல்லாம் பெண்கள் படிக்கலாகாதா, அல்லது இந்தப் பக்கத்தை ஆண்கள் படிக்கலாகாதா, அல்லது இரண்டுந்தானா? இதை நீ தான் எனக்கு விளக்கிச் சொல்ல வேண்டும். "சங்கு" ஒரு புதிய தொனியுடன் வெளிவரும்" என்றல்லவா நாம் எண்ணியிருந்தோம்? நாம் எதிர் பார்த்துக் கொண்டிருந்தது இது தானா?

"பெண்கள் பக்கம்" என்றால், அதில் புல்லாக்கைப் பற்றியும், வெண்டைக்காய்ப் பச்சடி பண்ணும் விதத்தைப் பற்றியும் எழுத வேண்டுமென்று உத்தேசமா, என்ன? புல்லாக்கு, டோலக், ஒட்டியாணம், ஜிமிக்கி, பாதசரம், இவைகளைக் குறித்து எழுதுவதானால், "சங்குப்"ப் பத்திரிகை ஆசிரியர் நம் கையை எதிர்பார்க்க வேண்டியதில்லை. மெட்ராஸில் எத்தனையோ பெரிய வைர வியாபாரிகள் இருக்கிறார்களல்லவா, அவர்களுடைய காட்லாக்குகளை வாங்கி, தமது பக்கங்களை நிறைத்துக் கொள்ளட்டும்.

வாதம் ஹல்வாவோ, சேனைக்கிழங்கு வதவலோ செய்யும் வகையைப்பற்றி விஷயம் வேண்டுமென்றால், எங்காவது ஒரு ஒட்டல் சமயற்காரரைப் பிடித்துக் கொள்ளலாம். இதனால், நான் பாக சாஸ்திரத்தை இழிவாகக் கருதுவதாய் நீ நினைத்து விடாதே. இந்தக் காலத்துப் பத்திரிகாசிரியர்கள் தான் அப்படி நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். இது தான் அகந்தை என்று சொல்லுவது. பெண்கள், ஆடையாபரணங்கள், சமையல் இந்த மூன்றும் ஒரே ரகமான சாமான்கள் என்று நினைத்து, இம்மூன்றையும் ஒன்றோடொன்று சடை போட்டு விடுவதை அகந்தையென்று தானே சொல்லவேண்டும்.

ஆடையாபரணங்கள் மேற்பகட்டுச் சாமான்கள் என்பதில் ஆட்சேபமில்லை. ஆனால், இவற்றில் பெண்களுக்கு அதிக மோகம் என்று புருஷர்கள் நினைத்துக் கொண்டிருப்பார்களானால் அதைவிட அசட்டுத்தனம் வேறே உண்டா? பெண்கள் நகைக்கு அலைவதன் காரணம் புருஷர்கள் தான் என்று நான் சொல்லுவேன். பின்னால், அதைப்பற்றி உனக்கு விஸ்தாரமாக வேண்டுமானால் சொல்லுகிறேன். சாப்பாட்டு விஷயத்தைப் பார்க்கலாம். அருமையான உண்டிகள் புருஷர்களுக்குப் பிடிக்காதா, என்ன? அல்லது, பிடிக்கத் தான் கூடாதா? உலக வாழ்க்கையே "உண்பதும் உறங்குவதுமாக முடியும்" என்று ஒரு ஞானி சொல்லி யிருக்கிறாரே, அதை இந்தச் "சங்குப்" பத்திராதிபரானாலும் சரி, வேறு யாரானாலும் மறுக்க முடியுமா? வேண்டுமானால் வேதாந்தம் பேசலாம்; அந்த வேதாந்தத்தை, பெண்களாகிய நாமும் திருப்பிப் படிக்க முடியும்.

ஆகையால், "பெண்கள் பக்கம்" என்று ஒன்று தனியாகப் போடவேண்டாம் என்று "சங்கு"ப் பத்திராதிபரிடம் சொல்லு. போட்டாலும், அதில் சேமியா பாயசமும், பனாரிஸ் பட்டுச் சேலையும் வேண்டாம். இதை அவர் இலட்சியம் செய்யாவிட்டால், அதைப் பற்றி எனக்கு அக்கரையில்லை. நான் மட்டில் பிடிவாதமாக, "ஆண்கள் பக்கங்கள்" என்று அவர் வீண் கர்வம் பாராட்டிக் கொண்டிருக்கும் மற்ற எல்லாப் பக்கங்களையும் படித்தே தீர்வேன் என்று மாத்திரம் அவருக்கு 'நோட்டீஸ்' கொடுத்துவிடு.

கடைசியாக ஒரு வார்த்தை. நான் "சங்கு"ப் பத்திராசிரியரைக் குறித்து இக்கடிதத்தில் எழுதி யிருப்பதெல்லாம் தவறாயுமிருக்கலாம். அப்படியானால், அவருக்குத் தைரியமுண்டானால், இந்தக் கடிதாசை அவர் பத்திரிகையில் வெளியிடட்டும். ஏனென்றால், இக்கடிதம், தேச பாரத்திலும், குடும்ப பாரத்திலும் புருஷர்களுடன் சரி சமானமாகப் பங்கெடுத்துக் கொள்ள விரும்பும் ஒரு பெண்ணின் அபிப்பிராயங்களையும் ஆசைகளையும் சூசகமாய்க் காட்டுகின்றது என்பதை நீ அறிவாய்.

என்றும் உன்னுடையவளான,

ராஜாத்தி,

[இந்தக் கடிதத்தை வெளியிடாமல் நான் வேறென்ன செய்வது?—சங்கு ஆசிரியர்.]

முதல் நண்பன்:— ஏனப்பா, லட்சுமியை மணம் செய்து கொள்ள எண்ணியிருந்தாயே அந்த யோசனையை ஏன் கைவிட்டாய்?

இரண்டாம் நண்பன்:—லட்சுமியின் தாய் தந்தை இருவரும் எனது குடியிருப்புக்கு வந்தார்கள். 'கலியாணம் ஆனதும் வேறு இடம் பார்க்க வேண்டியதுதான்; இந்த வீடு நாலு பேருக்குப் போதாது' என்று அபிப்பிராயம் சொன்னார்கள். நான் இந்தக் கலியாண யோசனையை அதோடு கை விட்டேன்.

பாலர் பகுதி

பட்சண யுத்தம்

("மார்க்கண்டேயன்" எழுதுவது)

கொஞ்ச காலத்திற்கு முன்பு பட்சணங்களுக்குள்ளே சண்டை ஒன்று ஏற்பட்டது. தித்திப்புப் பண்டங்கள் ஒரு கட்சி. காரமான சாமான்கள் இன்னொரு கட்சி. இவ்வாறாகப் பிரிந்து அவை சண்டை போட்டன. இரண்டு கட்சிக்காரர்களும் வேறு வேறு இடங்களில் கூட்டம் போட்டார்கள்.

தித்திப்புக் கூட்டத்தின் அக்ராசனாதிபதியாக ஜிலேபி வீற்றிருந்தது. சத்திரம் போன்ற அதன் உடல் தித்திப்பில் குளித்தும் இருந்ததால் அதற்குக் கௌரவ மதிக முண்டல்லவா? அந்தக் கூட்டத்தின் கார்யதரிசி சாக்லேட் என்பவர். பொக்கிஷதாரி சுருள்பூரி என்ற பெயருடையவர். லட்டு, பேணி, ஸொஜ்ஜி முதலிய பலருக்கு அங்கு உத்தியோக முண்டு. நவராத்திரிக் கொலு மாதிரி அத்தனை பட்சணங்களும் அங்கு இருப்பதைக் கண்டால், நம் சிறவர்கள் வாயில் படிப்படியாக ஜலம் ஊறும். சீயன், போளி, மைசூர்ப் பாகு, குலாப்ஜான், தூத்பேடா, ஹல்வா, பிஸ்கோத்து, கேசரி எல்லாம் வட்டமாக உட்கார்ந்திருந்தனர். வெளி நாட்டிலிருந்து சில பெரியோர்களும் வந்திருந்தார்கள். தல்பர்தோஸ், ஜாம், பாதாம் கீர், ஸுரத்காரி என்று அவர்கள் பெயர் உச்சரிக்கவும் கடினமாயிருந்தது. ஜிலேபி அவர்கள் பேசினார்:-

"நண்பர்களே! கொஞ்ச நாளாக நம்மை இந்தக் கார பட்சணங்கள் ஏமாற்றி வருகின்றன. தின்பவர்களும் ஏமாற்றிவருகின்றனர். நாமும் என்னென்னவோ தந்திரங்கள் பண்ணிப் பார்த்தோம். விதம் விதமாகப் பெயர்களை மாற்றிக்கொண்டு ஓட்டல்களில் நுழைந்தோம். ஜனங்கள் ஏமாறவில்லை. ஒருவன் நம்மை விலை ஜாஸ்தி என்கிறான். சிலர் நாம் உடம்பைக் கெடுக்கின்றோம் என்கின்றனர். காரம் மாத்திரம் உடம்பைக் கெடுக்க வில்லையா? வடைக்குள்ளே நூல் ஏற்படும்; உப்புமா ஊசிப் போகும்; காராப் பூந்தி காரிவிடும். இப்படியாக இருக்கும்போது நம்மை மட்டும் ஜனங்கள் எதிர்ப்பானேன்? மறுபடி எல்லாரின் அன்பையும் பெற முயற்சிகளை எடுக்கவேண்டும்" என்று அவர் பேசினார். எல்லாப் பட்சணங்களும் கைகொட்டி ஆரவாரித்தன.

கொஞ்ச தூரத்தில் சீமான் வடை அவர்களின் அக்ராஸனத்தின்கீழ், கார வஸ்துகள் சேர்ந்து பேசின. போண்டா பொக்கிஷதாரி. காராப்பூந்தி காரியதரிசி. பஜ்ஜி, பகவடா, முறுக்கு, சீடை, ஓமப்பொடி முதலியவர்கள் உட்கார்ந்திருந்தனர். காரதுக்காடி, பொடாடோ பாத், கிச்சடி முதலிய வெளிநாட்டுப் பிரபுக்களும் வந்திருந்தனர்.

வடை பேசினார்:—"நண்பர்களே! என்னைத் தலைவனாக்கியதற்கு வந்தனம். ஜிலேபியும் நானும் உளுந்திலிருந்து புறப்படுபவர்கள். அப்படியிருக்க, சர்க்கரையில் குளித்ததால் மட்டும் அவர் என்ன ஒஸ்தி? அவர்களுக்கெல்லாம் கண்ணாடி அலமாரி, நமக்குமட்டும் தகரத் தட்டு! இந்த அவமானத்தை நம்மால் பொறுக்க முடியவில்லை. நாமும் இனிமேல் அலமாரி கேட்கவேணும். நாமும் பெயர்களை மாற்றிக்கொள்ளவேணும். பஜ்ஜியை "லாஹூர் ட்ராப்" என்று கூப்பிட்டால் நன்றாயிருக்கிறதா? எப்படியாவது இந்த சர்க்கரைச் சாமான்களையே விரட்டிவிடவேண்டும். காப்பி என்று ஓர் சர்க்கரைக் குளியன் வந்து நம்மையெல்லாம் விலையாகாமல் செய்து வருகின்றான். அவனையும் தொலைக்கவேண்டும்" என்று என்னென்னவோ பேசிக்கொண்டிருந்தார்.

அப்போது சபையின் வாசலில் குழப்பம் ஏற்பட்டது. 'தீபாவளி லேகியம்' என்று கன்னங்கறேலென்று ஒன்று அங்கே நின்றிருந்தது. அதை உள்ளே விடமாட்டோமென்று கார பட்சணங்கள் சொல்லிக்கொண்டிருந்தன. அவரைத் தித்திப்பு பட்சணப் பந்தலிலும் விடவில்லை யென்று அவர் கூச்சல் போட்டார். தித்திப்பும் உறைப்பும் உடைய அவருக்கு இரண்டு சபையிலும் இடமில்லாமல் போகவே கோபித்துக்கொண்டு போய்விட்டார். இனிமேல் நாரதர் கலகம் செய்வதெனத் தீர்மானித்தார். கசப்பு சாமான்கள், உப்பு சாமான்கள் எல்லாவற்றையும் தூண்டினார். உளுந்து, கடலைமா, அரிசிமா எல்லாரிடமும் சென்று, "என்ன! உங்கள் குழந்தைகள் இரண்டு கட்சியாகிச் சண்டை போடலாமா? அதை அடக்கக்கூடாதா?" என்று கேட்டார். கடைசியாக காப்பி, டீ, கோகோ முதலிய வீரர்களிடம் சென்று கோள் சொன்னார்.

அடுத்த கணமே இரண்டு கூட்டங்களின் பந்தலிலும் காபி மழை பெய்ய ஆரம்பித்தது. பெரிய மழை பீலிட்டு விழுந்தது. சர்க்கரைப் பண்டமெல்லாம் கரைந்து போயின. கார சாமானெல்லாம் உருண்டு ஓடின. அவைகள் மேலே மாவு வகைகள் உட்கார்ந்து கொண்டு நசுக்கவே உயிர் போவது போலாகிவிட்டது. இப்படியாக பட்சணங்களின் கூட்டங்கள் அழிவடைந்தன.



ஸ்வாமி சீதாராம அவர்களின் கைகண்ட அற்புத மருந்து

மஹா கந்தக ரஸாயனம்

இஃது குஷ்டம், சரிமேகம், திமிர், கறுப்பும் சிவப்பும் கலந்த சட்டிகள், யோனிப் புத்து, லிங்கப் புத்து, வண்டுக்கடி, விஷநீர்க் கோர்வை முதலியவைகளையும் விஷ ஜந்துக்களின் கடியினால் உண்டாகிற விஷ ரத்தத்தையும் உடனே போக்கி இரத்த சுத்தி செய்கிறது. இந்த மருந்து சாப்பிடுவதனால் சரீரத்தின் மேலுள்ள அசுத்தங்களெல்லாம் போய் பொன்போல் ஆகும். ஆயிரக் கணக்கான ரோகிகள் பூரணமாக சௌக்கியப்பட்டிருக்கிறார்கள்.

புட்டி 1-க்கு ரூ. 4. வி.பி. சார்ஜ் பிரத்தியோகம். ஸ்வாமி சீதாராம் நிலையம், 41-a, பிராட்வே, சென்னை



நமது சங்கீதக் கச்சேரிகள்

(ஸ்ரீமான் ஈ. கிருஷ்ண அய்யர் பி.ஏ., பி.எல்.,)

சாதாரணமாய் ஒரு சங்கீதக் கச்சேரி சுமார் 4-30 மணி நேரம் நடைபெறுகின்றது என்பது எல்லோரும் அறிந்த விஷயம். ஸபைகளில் நடக்கும் கச்சேரிகள் மாலை 4-15 மணிக்கு ஆரம்பித்து 8-45 அல்லது 9 மணிக்கு முடிவாகின்றன. அவைகளில் உண்மையாய் அனுபவிக்ககூடிய ஸங்கீதம் எவ்வளவு இருக்கின்றது என்பது சிறிது கவனிக்கத் தக்கது. ஒரு பிடில், ஒரு மிருதங்கம் இவையிரண்டும் மாத்திரமே பக்க வாத்தியங்களாக அமைந்துள்ள கச்சேரிகளில் கூட, உற்று நோக்குமிடத்து, மேற்படி பக்க வாத்யங்களின் பெருமிதமான தனி ஆவர்த்தனங்களினால் கழிந்து விடும் நேரம் ஒரு பாகம். இன்னும் கஞ்சீரா, கடம், கோனக்கோல் முதலியவைகளும் சேர்ந்துவிட்டால் பாதிக்கு மேற்பட்ட நேரம் அவைகளின் அட்டஹாஸத்திலேயே கழிந்துவிடும். ஒவ்வொரு கீர்த்தனத்துக்கும் பின்னால் மிதமிஞ்சிப் பாடப்படும் ஸ்வர ப்ரஸ்தாரங்களால் எடுத்துக் கொள்ளப்படும் நேரம் ஒரு பாகம். இப்படி யிருந்தால் உண்மையில் சாதாரண சங்கீதப் பிரியனால் ரஸிக்கப்படும் பாகம் குறைவுதான் என்பதைச் சொல்லத் தேவையில்லை.

ஒரு வித்வான் தான் படித்தவைகளையெல்லாம் ஒரே கச்சேரியில் வெளிக்காட்ட முடியாது. அப்படிக் காட்ட முயலுவதும் உசிதமாகாது. உயரிய கலைகளை வெளிக் காட்டுவதில் மட்டுக் கடங்கியதோர் ‘அளவு’ அவசியம் என்பது கவனிக்கத்தக்கது. மிதமிஞ்சிய பக்க மேளங்களின் தனி ஆவர்த்தனங்களையும் மட்டுக் கடங்காத ஸ்வர ப்ரஸ்தாரத்தையும் கழித்துப் பார்க்கும்போது உண்மையாய் ரஸிக்கக் கூடிய விஷயங்கள் சுமார் மூன்று மணி நேரத்துக்குள்ளாகவே அடங்கி யிருப்பது தெரியவரும். எனவே மேன்மையாய் வளர்ந்து வந்ததும், உண்மையில் அழகானதாயுமுள்ள நமது தென்னிந்திய ஸங்கீதத்திலிருந்து அனாவசியமான அம்சங்களை ஒழித்து, அல்லது குறைத்து, அவசியமான லக்ஷணங்களையும், பக்க மேளங்களையுமே வைத்துக் கொண்டு, மேற்கண்டபடி ஏறக்குறைய 3 மணி நேரம் நடக்கக்கூடிய கச்சேரிகளை நாம் ஏன் பழக்கத்தில் கொண்டு வரக் கூடாது? ஒரு கச்சேரியின் அளவு பாடகர்களையும், ஸங்கீதம் அனுபவிக்க வந்தவர்களையும் பொறுத்தது என்பது வாஸ்தவமே. எப்போதும் அவ்வாறு சரியாக 3 மணிக்குள் துல்லியமாக அமைத்துக் கொள்வது முடியாதிருக்கலாம். விசேஷ யோக்யதையை வெளிக் காட்டும் ஸந்தர்ப்பங்களில் சற்று மாறுதல்களும் செய்து கொள்ளலாம். சாதாரணமாய் நடப்பில் ஒரு வித்வானுக்கும் ஸங்கீதப்ரியனுக்கும் சளைப்பில்லாது அனுபவிக்கக் கூடிய ஸங்கீதம் அந்நேரத்தில் அடங்கும் என்பது குறிப்பிடத் தக்கது. இவ்விஷயங்களில் வித்வான்களும், அபிமானிகளும் அவரவர்களுக்குள்ளேயே யோசித்துச் சீர்திருத்தங்களைக் கடைப்பிடிக்க வேண்டுமே யல்லாது, விதண்டா வாதங்கள் செய்வதில் பிரயோஜனமில்லை.

சாதாரணமாய்க் கச்சேரி கேட்க வரும் இக் காலத்திய ஸங்கீதப் பிரியர்களில் பெரும் பான்மையோர் ஸங்கீத விஷயங்களைச் சிறிது அறிந்தவர்களாகவே யிருக்கிறார்கள். பல வகைப்பட்ட ருசி யுள்ளவர்களாயு மிருக்கிறார்கள். அப்படிப்பட்ட பொது ஜனங்களின் ஆதரவை நாடியுள்ள வித்வான்கள் அவர்களைத் திருப்தி செய்ய வேண்டுவதின் அவசியம் ஒருபுற மிருந்தபோதிலும், ஸங்கீதத்தின் உயரிய நோக்கங்களையும், உண்மையான லக்ஷணங்களையும் கை நழுவவிடாது காத்துக்கொள்ள வேண்டுவதும் அவசியமே யாகும். ஸ்தூலமாகப் பார்க்கும்போது, ஒரு ஸங்கீதக் கச்சேரி 3 முக்கிய பாகங்கள் அடங்கியதாக விருக்கிறது. கீர்த்தனைகள் முதலாவதாகவும், ராகம் பல்லவி இரண்டாவதாகவும், பல்வேறுபட்ட சில்லறை உருப்படிகள் மூன்றாவது பாகமாகவும் மொத்தத்தில் அமைந்திருக்கின்றன.

இம்மூன்று பாகங்களுக்கும், ஒன்றுக்கொன்று முரண்படாமல், போதுமான அவகாசம் ஏற்படுத்திக் கச்சேரியை ஒழுங்கு படுத்திக்கொண்டால், அது அழகாகவும் ரஞ்சனை நிறைந்ததாகவும் இருக்குமென்பதில் ஐயமில்லை. ஸங்கீதச் சீர்திருத்தத்திற்கான அபிப்ராயங்கள் பரவிவரும் இக்காலத்தில் கூட, சில சில இடங்களில் முதல் பாகத்தை மிதமிஞ்சி வளர்த்துவிட்டு மற்ற பாகங்களை விரட்டிச் சுருக்கமாக முடித்துக்கொள்வது காணப்படுகிறது.

ஆரம்பத்திலேயே முதல் பாகத்துக்குச் சமார் 1 அல்லது $1\frac{1}{4}$ மணி நேரமும், இரண்டாவதுக்கு $\frac{3}{4}$ அல்லது 1 மணி நேரமும், மூன்றாவதுக்கு 1 மணியுமாக மனதில் திட்டப்படுத்திக்கொண்டால், அப்படிப்பட்ட விரஸமான ஸந்தர்ப்பங்கள் ஏற்படா. கச்சேரியும் சளையாது கேட்கக் கூடியதாக விருக்கும்.

கச்சேரிக்கு உட்காருமுன் ஒரு பாடகன் தான் பாடப்போகும் பாட்டுக்களைப் பற்றிச் சிறிது கவனம் செலுத்தினால் மிகவும் நன்மை ஏற்படும். அப்படிச் செய்வதால், பாடும் உருப்படிகள், அவைகளின் ராகங்கள், தாளங்கள், இவற்றைப் பலவகைப் பட்டதாக அமைத்துக் கொள்ளலாம். விளம்ப கால (நீண்ட கால) மத்தியமகால கீர்த்தனைகளை மாறி மாறிப் பொருத்தமாய் வைத்துக் கொள்ளலாம். சுத்த மத்தியம ராகங்களைப் போல் பிரதி மத்தியம ராகங்களுக்கும் போதுமான இடங் கொடுக்கலாம். ஸாதாரண ராகங்களுடன் அபூர்வ ராகங்களையும் அவைகளில் செய்துள்ள உருப்படிகளையும் பாடலாம்.

ஸ்வர ஞானத்தின் அருமையும் ஸ்வரம் பாடுவதின் திறமையும் மேம்பட்டவைதான். ஆனால் ஒவ்வொரு கீர்த்தனத்துக்குப் பின்னும் ஸ்வரம் விஸ்தாரமாகப் பாடும் பழக்கத்தை நிறுத்திக் கொண்டு, விசேஷமான சில உருப்படிகளுக்குச் சற்று விஸ்தாரமாய் வைத்துக் கொள்வது உசிதம். நடப்பில் சில கச்சேரிகளில் பாடகன் ஒரு கீர்த்தனத்தின் பல்லவியையும் அனுபல்லவியையும், வெகு சீக்கிரம் முடித்துவிட்டு, ஸ்வர ப்ரஸ்தாரம் விஸ்தாரமாகச் செய்கிறான். அவனைப் பின்பற்றிப் பக்க வாத்தியங்களும் அதிக நேரம் எடுத்துக்கொள்கின்றன. இந்த நடுவில் ஆரம்பித்த கீர்த்தனத்தின் பாவமும், ஞாபகமுமே மறந்து போகின்றன. வெகுநேரம் கழித்துப் பாடகன் சரணத்தை எடுக்கிறான். அப்போது அது புதிதாகத் தோன்றுவதோடும், கேட்போருக்கு இயற்கையாகவே ஒரு சளைப்பும் ஏற்படுகிறது. இவ்வழக்கத்தை வித்வான்கள் விட்டுவிடுவது அவர்களுடைய கடமையாகும். ரஸிகர்களும் வித்வான்களிடம் இவ்விஷயத்தை வற்புறுத்த வேண்டுவது அவசியமாகும்.

(தொடரும்)

விடியுங்காலச் சங்கொலி

1. சங்கொலி யெழுந்தது, சங்கட மழிந்தது,
தைரியங் கொள்வாய் தமிழ் மகனே.
கங்குலும் கழிந்திடும், கதிரொளி பொழிந்திடும்,
கவலை யெல்லாம்விடு தமிழ் மகனே! (சங்)

2. காரிருள் மறைந்திடும், குளிர்வது குறைந்திடும்,
குறுகிப்படுத் திருத்தல் இனி வேண்டாம்.
போருள் சுரந்திடும், பெருவழி திறந்திடும்,
பேதுறல் விடுவாய் தமிழ் மகனே! (சங்)

3. சூதரும் குடியரும் சுறுக்கெனப் பயப்படும்
'சுதந்திரச் சங்'கொலி கேட் குதடா!
வேதமும் கலைகளும் வித்தைகள் விளங்கிட
விடிந்திடும், சஞ்சலம் விடுவாய் நீ. (சங்)

4. திருட்டுகள் ஒடுங்கிடும், தீயன நடுங்கிடும்,
தீனர்க் கபயக்குரல் சங்கோசை.
இருட்டினை விரட்டிடும் எழுச்சியை ஈந்திடும்
எழுந் துன்கடன் முடிப்பாய் தமிழ் மகனே! (சங்)

5. மங்கலச் சங்கொலி மகிழ்தரக் கேட்குது,
மயக்கம்விட் டெழுந்தினி மறை பாடு.
எங்கணும் யாதிலும் இருந்தருள் கடவுளும்
இருக்குது பயமில்லை எழுந் திரடா. (சங்)

—நாமக்கல் வே. இராமலிங்கம்.

போலி வார்த்தைகளைக் கேட்டு,
ஏமாந்துபோகாதீர்கள்!
குலைக்கட்டி, ஈரல் வீக்க நோய்களுக்கு
ஜெம்மி வெங்கடரமணய்யாவின்
மருந்துகளையே உபயோகியுங்கள்
கீழ்க்கண்ட இடத்திற்குச் சென்று யோசனை கேளுங்கள் :—
8, சாலைத்தெரு, மைலாப்பூர், சென்னை.

பலசரக்குக் கடை

(கம்ப தாஸன் எழுதியது)

துடைப்பம் முதல் கிரீடம் வரையில் ஒரே கடையில் விற்கப்படுகின்றது. தலைவலி உண்டாக்கும் பத்திரிகை, தலைவலி போக்கும் அஞ்சனம், தலை சிரைக்கும் கத்தி, கூந்தல் வளரச் செய்யும் தைலம் முதலிய பலவகைச் சரக்குகளும் உப்பு, புளி சாமான்கள் சகிதம் அதே கடையில் கிடைக்கின்றது. பலசரக்குக் கடை என்ற பெயர் வெகு பொருத்தமா யிருக்கிற தல்லவா? ஆனால் இத்தனை சரக்குகளும் வாங்கி அடுக்கி வைத்துக் கொள்வதற்கு ஏராளமான 'முதல்' வேண்டும். என்னிடமோ முதலுமில்லை, கடைசியுமில்லை, நான் என்ன செய்ய? மூலதனமில்லாமல் கடை வைப்பதெப்படி என்று ஆலோசனை செய்து கொண்டே பாலக்கரைத் தென்னந்தோப்பில் நான் படுத்திருந்தேன்.

நான் தூங்கினேனா இல்லையா என்பது சந்தேகம்தான். ஏனெனில், "டே ஒன்னைத்தான்டா. எழுந்திரு. என் கூட வா. முதலில்லாமல் நடக்கின்ற ஓர் கடையைக் காட்டுகிறேன் வா" என்று கூறிய குரல் கணீரென்று என் காதில் கேட்டதல்லவா? தொண்டை அதிகார தோரணையிலிருந்தது. நான் திகைத்துப் போனேன். "யார் அது?" என்று மந்தரஸ்தாயியில் ஓர் கேள்வி கேட்டேன்.

"யாரா யிருந்தால் உனக்கென்ன? கண்ணைப் பொத்திக் கொள். நான் உன்னைக் கடைக்கு அழைத்துச் செல்றேன்" என்று அக்குரல் கூறிற்று.

மனத்தில் ஆச்சரியமும். பயமும் மாறி மாறி அலைமோதின. கண்ணை மூடிக் கொண்டேன். எழுந்து நின்றேன். யாரோ என்னை அழைத்துச் செல்வதை உணர்ந்தேன். எவ்வளவு தூரம் இந்த நடை நடந்திருப்பேனெனச் சொல்ல முடியாது. "கையை எடுத்துவிடு" என்ற ஆக்ஞை பிறந்ததும் கண்ணைத் திறந்து பார்த்தேன்.

என்னை அழைத்துவந்த ஆளை அங்கு காணோம். நான் நின்றவிடம் நிச்சயமாக ஓர் கடைபோலவே இருந்தது. ...ல் தராசு, படிக்கல், சுஜக்கோல் படி, மரக்கால், அலமாரிகள், சாக்கு, டின், தொந்திச் சாவுக்கார், அவன் பணப்பெட்டி எதையும் நான் காணவில்லை. இது கடைதானா அல்லது வேறென்ன இடம் என்ற ஐயம் எனக்குண்டாயிற்று. ஐயம், வரவரப் பயத்தைச் சிருட்டித்தது. வெட்ட வெளியை உற்று நோக்கிக் கொண்டு கால் மணி நேரம் நின்றிருந்தேன்.

"யாரப்பா நிற்கிறது? உனக்கு என்ன வேணும்?" என்று ஏதோ ஓர் குரல் என் காதில் விழுந்தது. எத்தனை தடவை கண்ணைத் துடைத்துப் பார்த்தாலும் எந்த உருவமும் தென்படவில்லை. ஆகவே ஏதாவது சாமான் கேட்டால் கடைக்காரன் தோன்றமாட்டானா வென்று நினைத்து, "அய்யா, அரை வீசை நாட்டுச் சர்க்கரை கொடும்" என்று கேட்டேன்.

கலகலவென்று சிரிப்புச் சத்தம். மீண்டும் அதே அசரீரியின் குரல்.

"அட மனுஷா! இருபதாம் நூற்றூண்டுப் பேர்வழியா யிருக்கிறாயே! சர்க்கரை இந்தக் கடையில் இல்லையப்பா! சர்க்கரை சாதாரணச் சந்திக் கடைச்சரக்கு. இங்கே வெள்ளைச் சர்க்கரையை விட மிக மிக இனிப்பான கலப்படமற்ற காதல் வைத்திருக்கிறேன். வேணுமா சொல்லு!" என்றது அந்தக் குரல். சிறிது நேரம் ஸ்தம்பித்து நின்றேன். பிறகு கனைத்துக் கொண்டு "காதல் என்ன 'உருளைக் கிழங்கு போல மார்க்கட்டுச் சரக்கா?" என்று கேட்டேன்.

"அப்பா, இது உணர்ச்சிச் சரக்குக் கடை. சந்தைக் கடைச் சரக்கு எதுவுமிங்கே யில்லை. இங்கே நவரஸங்களும் விலைக்குக் கிடைக்கும். தினிஸு தினிஸான காதல்கள் இருக்கின்றன. சங்கிதத்தை அளந்து தருகின்றோம். உனக்கு என்ன வேணுமென்று கேள்!" என்று கடைக்கார அசரீரி கூறினர்.

"எனக்கு எல்லாம் விந்தையா யிருக்கிறதையா? இன்னும் என்னென்ன சரக்கு இங்கே கிடைக்கு மென்று சொல்லுங்கள். கேட்போம்" என்று கொஞ்சம் தைரியங்கொண்டு நான் கேட்டேன்.

"அப்படிக் கேளு! சபாஷ்! 'போக்கிரித்தனம்' என்ற வஸ்துவைப் பல ரகங்களில் வைத்திருக்கிறோம். பல மாதங்களாக உலகில் அந்தச் சரக்குக்குத்தான் மதிப்பு அதிகமா யிருக்கிறது. 'தெய்வ பக்தி' என்று ஒரு சாமான் ஏராளமாக உண்டு. சில வருஷங்களாகக் கேட்பாரில்லாமல் அவைமீது காளான் பூத்துக்கொண்டிருக்கின்றது. ஆனால் 'ராஜீயத் தில்லுமில்லு' என்ற சாமான் வெகு ஜரூராக விலை போகின்றது. உலகில் ஒவ்வொரு நாட்டினின்றும் அதற்கு ஆர்டர்கள் குவிந்துகொண்டே யிருக்கின்றன. ஆனால் 'மூடத்தனம்' என்ற வஸ்துவை நாங்கள் இனமாக உலகெங்கும் ஸப்ளை செய்து கொண்டிருக்கிறோம். உனக்கு வேணுமானாலும் கொஞ்சம் தருகிறேன். வேணுமா?" என்று சிரித்துக் கொண்டே அந்தக் குரல் கேட்டது.

"நமஸ்தே! எனக்கு என்ன சாமான் வேணுமென்று கடைசியில் சொல்கின்றேன். இன்னும் என்னென்ன சாமான் இருக்கிறதென்று சொல்வீரா? விலை ஜாப்தா இருக்கிறதா?" என்று கேட்டேன்.

"நீ நினைக்கும் உணர்ச்சி யெல்லாம், உருவமில்லாச் சரக்குகளெல்லாம் இங்கு கிடைக்கும். ஆனால் ஒன்றுக்கும் ரூபா அணா பைசாவில் விலை போடப்படுவதில்லை. அந்த அந்தச் சரக்கை அடைவதற்கான வழிதான் கற்றுக் கொடுக்கப்படும். அவரவர் முயற்சியினாலேயே அவரவர் அடையக் கூடும். ஆகவே உனக்குக் காதல் வேண்டுமா? வீரம் வேண்டுமா? ராஜீயப் பெருமை வேண்டுமா? தியாக புத்தி வேண்டுமா? தெய்வ பக்தி வேண்டுமா? சந்தோஷமான சாவு வேண்டுமா? என்ன வேண்டுமென்று கூறு?" என்று அக்குரல் கேட்டது.

'சாவு' என்றவுடன் எனக்குத் தூக்கி வாரிப் போட்டாற் போலிருந்தது. சாவதற்கு நான் விரும்பவேயில்லை. உலகத்தில் சிரஞ்சீவியாக வாழ்வதற்கே எனக்கு ஆசை. ஆகவே உலக வாழ்க்கையைச் சுலபமாகத் தள்ளுவதற்கு இன்றியமையாத வஸ்து ஒன்றைத்தான் என் மனம் நாடி அலைந்தது. ஆகவே நான் கடைசியாகச் சொன்னேன்.

"எனக்குக் காதல் வேண்டாம். வீரத்தை மருந்துக் கடைக்கே அனுப்பிவிடுங்கள். தெய்வ பக்தியைப் பண்டாரங்களுக்கு பாக் பண்ணுங்கள். எனக்கு வேண்டியது ஒன்றே ஒன்று தான். அதுதான் பணம்! அது உங்களிடத்தில் இலவசமாகக் கிடைக்குமா?" என்று தைர்யமாகக் கேட்டேன்.

அந்த அசரீரி கோபச் சிரிப்புச் சிரித்தது. "அட பதரே! அறிவற்ற முண்டமாக இருக்கின்றாயே! பணம் பணம் என்று ஜபம் செய்கின்றாயே! உணர்ச்சிக் கடையில் வந்து நின்றுகொண்டு இந்த பிஸாத்துப் பொருளையா நீ கேட்க வேண்டும்? உன்மேல் தப்பில்லை. இந்த நூற்றாண்டில் மனிதப் போக்கே அப்படித்தானிருக்கிறது. நீ என்ன செய்வாய், பாவம்! நீ கேட்ட 'பணம்' இங்கு கிடையாது. சனியன் தாண்டவமாடும் உலகத்தில்தான் அது கிடைக்கும். ஒழிந்து போ!" என்று அந்தக் குரல் கூறிற்று. பளிச்சென்று ஓர் மின்னல் மின்னவே, நான் கண்களை மூடிக் கொண்டேன்.

இடம்:—பத்திரிகாலயம்.

கட்டுரை எழுதுபவர்:—ஐயா! கட்டுரையைப் படித்து முடித்தீர்களா? எப்படி?

ஆசிரியர்:—மிக்க நன்றாயிருக்கிறது. ஆனால் தமிழ் உங்களதே யாயினும் கருத்தை எங்கிருந்தோ இரவல் வாங்கி யிருக்கிறீர்கள் என்று தோன்றுகிறது.

க-ர்:—(ஓர் வகைச் சிரிப்புடன்) இருக்கலாம். ஆனால் பணத்தைவிட உணர்ச்சியே மேலானதென்று நிரூபித்திருக்கின்றேனல்லவா?

ஆசிரியர்:—அதை ஒப்புக்கொள்கிறேன்.

க-ர்:—இந்த அபூர்வமான கட்டுரைக்கு என்ன பணம் தருவீர்கள்?

சித்திரக்காரன்:— சித்திரக்கலையின் மேன்மையே மேன்மை! எனது பென்சிலால் ஓர் கீற்றுப் போட்டு, சிரிக்கின்ற குழந்தையை அழுங் குழந்தையாக மாற்றிவிடுவேன்.

நண்பன்:— நான் அதட்டினலே யே அப்படிச் செய்துவிடுவேனே.

சிறு கதைப் பகுதி.

திருடன் தந்த லஞ்சம்

(தி. ஜ. ர. எழுதியது)

அது ஒரு காலம். அதைப்பற்றி இப்பொழுது பெரு மூச்சு விட்டுப் பயனில்லை. எனது அக்கால வாழ்க்கையைப் பற்றி விஸ்தாரமாக வர்ணனை செய்வதும் என் நோக்கமல்ல.

நாட்டுப் புறந்தான்; ஏழ்மையும் கூட. ஆனால், அப்பொழுது நான் நகரங்களைப் பார்த்ததே யில்லை. ஆகையால், வறுமை கொடியது என்று நான் உணரவில்லை. எனது இளமையும் அதற்கு ஒரு காரணமாயிருக்கலாம்.

நான் இந்து; அதிலும் பிராம்மணன். என்றாலும், ஜான் செல்லையாவுக்கு நான் அண்ணன். இந்த உறவு ஏற்பட்ட அபூர்வக் கதையை முதலில் சொல்லியாக வேண்டும்.

* * *

செல்லையாவின் தகப்பனர் ஒரு உபதேசியார். கிராமத்திலே ஓட்டு வீடு என்பது மிக அபூர்வம். உபதேசியாரும் கூரை வேய்ந்த மண் சுவர்க் குடிசையில் தான் வசித்தார். எங்கள் வீட்டுக்குக் கூப்பிடு தூரம். அங்கு ஒரு தனிக் குடிசை. அது தான் உபதேசியார் மனை. அந்த மனையை நான் முதன் முதலில் பார்க்க நேர்ந்த சந்தர்ப்பம், இன்று நினைத்தாலும் என் உள்ளத்தையும் உடலையும் ஒருங்கே குலுங்கி அதிரச் செய்கிறது. சாதாரணமாக, அவர் வீட்டுப் பக்கம் செல்ல வேண்டிய தேவையே எனக்குக் கிடையாது; போகவும் முடியாது. அது ஒதுங்கிய இடம்; ஒதுக்கப்பட்ட இடம். "ஹரிஜனங்கள்"—பழய பாஷையில் "பஞ்சமர்"—வாசஸ்தலத்துக்கு அருகேயிருந்தது அந்தக் கிருஸ்தவர் வீடு. பிராம்மணன் அங்கே போவது அவ்வளவு உசிதமா?

ஆனால், தெய்வத்துக்கு எல்லா சக்தியும், எல்லா உரிமையும் உண்டு. மனிதனல் ஆகாதது, மனிதன் விரும்பாதது, மனித தர்மத்துக்குப் புறம்பானது—இந்த எதையும் தெய்வம் செய்யலாம்; செய்து விடுகின்றது. அக்கினி தேவன் உபதேசியார் வீட்டுக் கூரையில் பயங்கர நாட்டியம் புரியலானன் ஒரு நாள்.

ஆபத்து வந்த போது கீட்டு ஏது? சாஸ்திரம் ஏது? சாஸ்திரமே "என்னைக் கட்டி வைத்து விடு" என்... சொல்லி யிருக்கிறதல்லவா? ஆபத்... என்றால், "கடவுளே மனிதனுடன் போராடும் சமயம்" என்று அர்த்தம். "மனிதனைச் சோதிக்கும் சமயம்" என்று வேண்டுமானால், மரியாதையான வார்த்தைகளில் சொல்லிக் கொள்ளுங்கள். கடவுளுடன் நேர்ந்த யுத்... தில், மனித ஜாதி பிரிந்து நிற்க... யுமா? உபதேசியார் வீட்டுக் கூரையை அக்கினி தேவன் மென்று விழுங்கி வருகிறான். அடுத்தபடி என்ன செய்வானே? நாங்கள் சும்மா இருக்க முடியுமோ?

உபதேசியார் வீட்டைச் சுற்... பெருங் கூட்டம். நானும் அதற்... புகுந்து விட்டேன். ஐயோ! அந்... கூட்டத்தை என்ன சொல்லுவது... மனிதர்களின் அவந்தரை, அவர் உட... லங்களின் அலங்கோலம், உள்ளங்... களின் கொந்தளிப்பு, ஆனல் இயற்றி... காரியம் சொற்பம்—இந்த வார்த்தை... களால் அதைச் சித்திரித்து விடலாம்... திகில், ஆரவாரம், ஆவேசம் அதிகம்... செயலோ அற்பம்.

இந்த அமளிக்கு நடுவே, "ஐயோ!... செல்லா!—செல்லா!" என்ற கூக்... வானைப் பிளந்தது. அது ஜான்... லையாவின் தாய் ஞானமணியின்... குரல். உபதேசியார் திக்பிரமை பி... த்தவர்போல், கலங்கிய கண்ணுட... ஒரு புறமாக, வானளாவிய தீ ஜுவா... லையை பார்த்துக்கொண்டு நிற்கிறா... ஞானமணியைப் பலர் பிடித்... கொண்டு நிற்கிறார்கள். அவள் திமு... கிறாள். உள்ளே போய் செல்ல... எடுத்துவர வேண்டுமென்பது அவ... கவலை. "அவன் எங்கேயாவது ெ...

வந்திருப்பான். வாயிற் படிக்கு ...ரே தலைமேலே தீ பலமாக எரிந்து கொண்டிருக்கிறது! நீ உள்ளே போக வாவது!" என்று பக்கத்திலிருந்தோர் அவளைத் தடுத்தார்கள். 'பெற்ற மனம் பித்து!' அவள் சமாதானம் அடையவில்லை. அவளைத் தடுத்தவர்களோ, எவரும் உள்ளே போய்ப் பார்த்துவர எண்ணமும் கொள்ளாமல் வெகு அமைதியாயிருக்கிறார்கள். இதைப் பார்க்க என் மனம் தாளவில்லை. எனக்கே அது ஒரு ஆவேசத்தை உண்டாக்கிற்று.

வீட்டின் பின்புறத்திற்கு ஓட்டமாக ஓடினேன். அவசரத்தில், ஒரு வேகத்தில், செய்த காரியம். தன்னைமறந்த ஒரு பலம் உண்டாயிற்று. கூரைமீது ஏறினேன். வீட்டு முற்றத்தில் குதித்தேன்.

ஒன்பது வயது; சின்னஞ் சிறு குமரன்; சமையல் உள்ளில் ஒரு மூலையில் அவன் ஒதுங்கிப் பதுங்கி நிற்பதை எப்படியோ கண்டு பிடித்தேன். இந்த மண்ணில் இருபது வருஷங்களாக உண்ட முழு உணவின் பலமும் அப்பொழுது எனக்குக் கிடைத்தது போலிருந்தது. யோசிக்கவில்லை; பேசவில்லை. செல்லையாவின் கைகளைப் பிடித்து இழுத்து, வெளி முற்றம் வந்து சேர்ந்தேன். அப்பொழுதுதான் செல்லையா அழ ஆரம்பித்தான். "சூ!" என்று பல்லைக் கடித்து அதட்டினேன். எந்தப் பக்கத்தில் தீ இல்லை என்று பார்க்க முடியவில்லை. புகை கண்ணைக் கவிந்தது; மூச்சும் திணறச் செய்தது. "ஈசுவரோரட்சது" என்று முணுமுணுத்தேன். எனது இடுப்புத் துணியைப் புரிபோல் முறுக்கி அவன் இடையிலும் கழுத்திலும் "8" போல் சுற்றினேன். மேல் வேட்டியின் ஒரு முனையை அதில் கட்டி, மறு முனையை எனது அரைநாணில் சொருகிவிட்டு, அனல் இல்லாத ஒரு புறம் கூரையில் ஏறினேன். அவனையும் மேலே இழுத்துவிட்டேன். இருவரும் உச்சியை அடைந்துவிட்டோம். அதுவரையில் தோன்றாத பலனவீம் என்னை அப்பொழுது பற்றிக் கொண்டது. ஆவேசம் போய்விட்டது. என் உடம்பு நடுங்கியது. உள்ளம் 'கல கல'த்தது. பின் நடந்தது எனக்கு நினைவில்லை.

என் நினைவு எனக்கு வந்தபொழுது, ஒரு கயிற்றுக் கட்டிலில், கிடக்கக் கண்டேன். இரண்டொரு இடங்களில் என் உடம்பில் கட்டுக் கட்டப்பட்டிருந்தது. பக்கத்தில் என் தந்தை உட்கார்ந்துகொண்டு, உமியையோ மணலையோ வறுத்துக்கொண்டிருந்தார். எனக்கு ஒத்தடங் கொடுத்து வந்தாள் ஞானமணி அம்மை. நான் கண்ணை விழித்ததும், அவள் என் முகத்தை நோக்கினாள். அவள் வதனம் மலர்ந்ததைக் கண்டேன். அது அன்னை பராசக்தியின் புன்சிரிப்பு; சிதேவியின் இளமுறுவல். "சும்மாப் படுத்திரு, தம்பி. செல்லம் விளையாடிக் கொண்டிருக்கிறான். சுகமாயிருக்கிறான்" என்றாள் ஞானமணி. என்னைத் தூக்கி வாரிப் போட்டது. இவள் தெய்வமா என்ன? என் மனத்தில் உதித்த கேள்வி அவளுக்கு எப்படித் தெரிந்தது? களங்கமற்ற அன்பு தெய்வீகமன்றோ!

அன்று முதல் உபதேசியார் குடும்பத்திற்கு ஒரு ஆள் அதிகரித்து விட்டது. அந்த ஆள் நான்தான். செல்லையாவின் உயர்ந்த குணங்கள் என்னை வசீகரித்தன. நான் அவனுடைய அண்ணனானேன்.

*   *

"மனிதனுக்குப் பிரபஞ்சமே சத்ரு. எதையும் எதிர்த்துப் பொருதி வெல்லுவதே அவன் வேலை"—இது மேனாட்டார் சுபாவத்திலே ஊறிக் கிடக்கும் வேதாந்தமாம். இதன் உண்மையை நானறியேன். கால சக்ரம் அற்புத லீலை புரிகிறது.

இப்பொழுது நான் பட்டிண வாசி; பணக்காரன். செல்லையா பி.ஏ. வரையில் படித்த படிப்பு எனக்குத் தெரியும். அதற்குப் பிறகு, அவன் எங்கேயோ. அவன் குடும்பத்தைப் பற்றியும் ஒன்றும் தெரியவில்லை. அறிய நான் முயற்சி எடுத்துக் கொள்ளவும் இல்லை. என் பாடுண்டு; நான் உண்டு. இப்பொழுது நான் ஒரு குடும்பத் தலைவன்; தொழில் முதலாளி.

நகரத்தில் தனிமையான பங்களா. மேன்மாடியில், ஒரு அறையில் எனது படுக்கை. என் மனைவி பெரிய குடும்பி. இரண்டு மூன்று குழந்தை குஞ்சுகள். அவள் மாடிக்கு வருவதே அபூர்வம். கீழே கூடத்தில் அந்தக் குடும்பத்தின் படுக்கை.

பாதி ராத்திரி வேளை. "அம்புஜா! அம்புஜா! அப்பாவைக் கூப்பிடு; கூப்பிடு" என்ற சத்தம் கேட்டது. மனைவியின் குரல். அந்த தொனியில் ஒரு பயம், பதற்றம். அவை மின்சாரம் போல என் உள்ளத்தில் தைத்தன.

எழுந்திருந்து, உடையைச் சரி செய்துகொண்டு ஓட்டமாக ஓடினேன்.

"யாரோ திருடன்! திருடன்!" என்று திக்கித் திக்கி உரைத்தாள் மனைவி. எனக்கு ஒன்றும் புரியவில்லை. நேற்றுத்தான் 5,000 ரூபாய் பாங்கியிலிருந்து வாங்கி, கைப் பெட்டியில் வைத்திருந்தேன். அது போய்விட்டதோ, என்னவோ!

"எந்தப் பக்கம்? எந்தப் பக்கம்?" என்று அவசரமாகக் கேட்டேன்.

அதுவரையில் சத்தம் போட்டுப் பேசிய மனைவி சட்டென்று அதிக பயத்துடன், காதோடு, "ரேழிப் பக்கம் போனான்; பெட்டியைப் பாருங்கள்" என்றாள்.

ரேழி ஹாலுக்கு ஓடினேன்.

என்ன ஆச்சர்யம்! அங்கே மாட்டியிருந்த என்னுடைய பெரிய உருவப் படத்துக்கு எதிரே செல்லையா நின்று கொண்டிருக்கிறான். நிச்சயமாகச் செல்லையா தான். அவனுடைய 'டார்ச் லைட்' என் படத்தின்மீது ஒளி வீசுகிறது. பக்கத்திலிருந்த முகக் கண்ணாடியின் எதிர் ஒளியால் அவன் முகத்தை நான் நன்றாகப் பார்க்க முடிந்தது.

என்னை யறியாமல் ஒரு சந்தோஷம். "நமது செல்லையா தானே" என்ற எண்ணம் கவலையை நொடிப் பொழுதில் மாற்றி விட்டது.

"செல்லையா" என்று அன்போடு இரைந்து கூவினேன்.

"பேசாதே" என்ற கட்டளை பிறந்தது. என் படத்தில் விழுந்த 'டார்ச்' ஒளி என் முகத்திலே இப்பொழுது விழலாயிற்று. "பேசினால், கொல்வேன். என்னிடம் துப்பா——" என்ற அவன் தட்டென்று நின்றான். மறுபடியும் படத்தின் மீது ஒளி.

சிறிது நேரம் ஒரே இருட்டு. செல்லையா எனதருகே வந்தான். என் கையை இறுக்கிப் பிடித்தான். கை அந்த முரட்டுப் பிடியில் சிறிது நொந்தது. ஆனால், தேகம் இன்புற்றது.

"நீ பாலு அண்ணா இல்லையா?" என்று ஒரு கோரமான தொனியில் வினவினான் அவன்.

"ஆம், அப்பா. வா, உள்ளே" என்றேன்.

இதற்குள் மனைவி ஒரு அரிக்கன் விளக்கை ஏற்றிக் கொண்டு வந்து சேர்ந்தாள். அந்த விளக்கு வெளிச்சத்

தில் ஒருவர் முகத்தை ஒருவர் நன்கு கப் பார்த்துக் கொண்டோம். சிறிது நேரம் மௌனம்.

"ஏனப்பா இத்தொழிலில் இறங்கினாய்? ஒரு சாண் வயிற்றை வளர்க்க, வழி தெரியவில்லையா?" என்று பரிவோடு சொன்னேன்.

ஆனால், அவன் ரௌத்ராகாரத் தோற்றங் கொண்டான். "ஒரு சாண் வயிறு? உனக்கு அது. பல கோடி சாண் வயிறுகள் பட்டினி கிடக்கின்றன. அது உனக்குத் தெரியுமா?" என்றான் செல்லன்.

"உலகத்தை யெல்லாம் காப்பாற்ற நீ கொள்ளை யடிக்கிறாயாக்கும்!" என்று ஏளனமாகச் சொன்னேன்.

"கொள்ளையல்ல. கொள்ளை ஏற்பாடுகளைக் குலைத்து முறியடிக்கும் கூட்டத்தைச் சேர்ந்தவன் நான்" என்றான் அவன்.

"ஊஊ ஹூம்! உனக்குக் கூட்டம் வேறு உண்டா? பிற உயிரினங்களை வதைத்துத் தின்னும் புலி, தனக்கு உற்றோர் உறவினர் உண்டு என்பதைப் போல் இருக்கிறது இது" என்று மறுபடியும் பரிகசித்தேன்.

செல்லையா புருவத்தைச் சுளித்துச் சிறிது மௌனமா யிருந்தான். ஏதோ ஓர் யோசனை அவனுடைய நெற்றியில் அலைபோல் ஓடியதை என் கண்ணால் கண்டேன்.

"சரி, நான் போய் வருகிறேன்" என்று மொட்டையாகச் சொல்லி, வாயிற் புறம் திரும்பினான்.

"நில். ஏன் இப்படிப் பறக்கிறாய்? சிறு குழந்தையில் உன் உயிரைக் காப்பாற்றியவனல்லவா நான்? உன்னைப் போலீஸாரிடம் காட்டிக் கொடுக்கப் போவதில்லை யப்பா" என்று, சிறிது செருக்குக் கலந்த தொனியில், குத்தலாகச் சொன்னேன்.

"வந்தனம். அதற்கு லஞ்சம் ஐயாயிரம் ரூபாய். அதோ இருக்கிறது பெட்டி" என்று அலட்சியமாகப் பதில் சொன்னான் செல்லையா.

அடுத்த நிமிஷத்திலேயே ஆளைக் காண வில்லை.

* * *

"என் பணம் எனக்கு லஞ்சமா?" என்று நினைக்கும் பொழுதெல்லாம் எனக்கு ஆச்சரியமா யிருக்கிறது. ஆனால், இரண்டு வருடங்களாக, அதில் ஒரு சல்லியைக் கூடத் தொட என் மனம் இசையவில்லை. அந்தப் பணம் என் மனத்தை அலட்டுகிறது. செல்லையாவின் நினைவு வரும்போதெல்லாம் ஏதேதோ கோர யோசனைகள். ஏன் அவன் இப்படி மாறினான்? வேலை கிடைக்காததாலா? ஆயின், அவனுக்கு ஏன் வேலை கிடைக்க வில்லை? பணம் என்பது காலும் கையும் முளைத்த பிராணியா? உலகத்தில், என்னைச் சூழ என்னவோ மாறுதல் நடந்து கொண்டிருக்கிறது! உடம்பிலல்ல; உள்ளங்களிலே. உள்ளங்களில் கிளர்ந்து கொண்டிருக்கும் அந்தப் பிரவாகம் வெளியே பொங்கி வழிந்தால், என்ன தூளி படுமோ உலகம்? என் நேசர்கள், தோழர்கள், உறவினர்களில் எத்தனை பேர் பசுத்தோல் போர்த்த புலிகளாக—பல 'செல்லையா'க்களாக—மாறி விடுவார்களோ என்ற அச்சம் என்னை வாட்டிக் கொண்டே யிருக்கிறது. செல்லையாவை மட்டில், நான் மறுமுறை பார்க்க நேர்ந்தால்——!

ராம் மோஹனுடைய
வட இந்தியா யாத்ரா ஸ்பெஷல்
(பத்தாவது யாத்ரை)

1934-ம் வருஷம் பிப்ரவரிமீ" முதல் வாரத்தில் சென்னையைவிட்டுப் புறப்படும்.

சரியான தேதி பின்னால் குறிக்கப்படும்.

கீழ்க்கண்ட இடங்களுக்கு போகும்.

துங்கபத்ரை (மந்த்ராலயம்), பண்டரபுரம், பம்பாய் நாஸிக் (பஞ்சவடி த்ரயம்பகம்), பரோச், நர்மதை, பரோடா, அஹமதாபாத் (ஸபர்மதி), ஸித்தபூர் (மாத்ருகயா-ஸரஸ்வதி), அபு (மவுண்ட் அபு), அஜ்மீர் (புஷ்கரம்), ஜயபூர், ஆக்ரா, மதுரா (பிருந்தாவனம், கோகுலம், கோவர்தனம்), டெல்லி குருக்ஷேத்திரம், ஹரித்வார், (ரிஷிகேஸ), லக்னோ (லக்ஷ்மணபுரம்), அயோத்யா (நந்திக்ராமம்), பிரயாகை (த்ருவேணி), அலஹாபாத், ஸ்ரீகாசி, கயா, கல்கத்தா, பூரி (ஜகந்நாதம்), ஸிம்ஹாசலம், ராஜமஹேந்திரி (கோதாவரி), பெஜவாடா (கிருஷ்ணா).

மதராசுக்குத் திரும்பி வரும்.

சார்ஜ்கள்:—

மூன்றாவது வகுப்பு ரூ. 90

இரண்டாவது வகுப்பு ,, 225

மற்ற விபரங்களுக்கு எழுதவும்.

ராம் மோஹன் கம்பெனி,
21, செகண்டு லேன் பீச்சு, மதராஸ்

கேசவர்த்தினி

மயிர் உதிர்வதை நிறுத்துவது.

வழுக்கை செம்பட்டை இள நரைகளைப் போக்குவது.

கூந்தலை நீண்டு செறிந்து வளரச் செய்வது.

விலை அணா 12. மேற்செலவு வேறு.

தென் இந்திய ரஸாயன சாலை, லஸ், மயிலாப்பூர்.

படித்தவர்களின் லாட்டரி

பட்டதாரியா, பட்டினிதாரியா?

(ஸர். பி. ஸி. ரே அவர்களின் உபதேசம்)

வாழ்க்கை யென்னும் பங்கயத்தில் நாம் எங்கே போயிருக்கிறோம்? பணக்காரர்களாயுமில்லாமல் கூலியாட்களாயுமில்லாமல் நடுத்தர வகுப்பினரிருக்கின்றார்களே, அவர்களுடைய நிலைமை எவ்வாறுளது? நடுத்தர வகுப்பினரில் படித்தவர்களிருக்கின்றார்களே, அவர்கள் தான் சமூகத்திற்கு முதுகெலும்பு போன்றவர்கள். ஆனால் அந்த வகுப்பினரோ வறுமை யென்னும் ஜன்னி கண்டு வருந்துகின்றனர். ஒரு பெரிய கூட்டம் இந்த மாதிரி கேவல ஸ்திதியை அடைந்தது கண்டு நமது இதயம் நடுங்குகின்றது.

சம்சார சாகரம்

சாதாரணமாக அவர்களில் ஒவ்வொருவனுக்கும் 25 ரூபாயிலிருந்து 35 ரூபாய்க்குள் தான் சம்பளம் கிடைக்கிறது. ஆனால் அந்தச் சிறிய தொகைக்கு உலை வைத்து உண்ண, குறைந்தது ஐந்து பேராவது இருப்பார்கள். பெண்டாட்டி, குழந்தைகள், விதவையான சகோதரி, அவளது குழந்தைகள், இத்தனை பேரையும் அவன் காப்பாற்ற வேண்டியிருக்கிறது. இவ்வளவு சின்னச் சம்பளத்தை வைத்துக்கொண்டு பெரியதொரு குடும்பத்தின் வரவு செலவை எப்படிச் சமாளிப்பது? அரிசியோ மூட்டை பத்து ரூபா; எண்ணெயோ வீசை ஒரு ரூபா; நெய்யைப்பற்றிய கவலையே வேண்டியதில்லை. நான் ஒரு ரஸாயன சாஸ்திரி. ஆதலால் கடைத்தெருக்களில் விற்கிறார்களே, அந்த நெய்யின் ரகஸ்யத்தை நான் அறிவேன். அந்த விஷயத்தைப் பற்றி இங்கு விஸ்தரிக்க நான் விரும்பவில்லை. நிற்க,

இப்படி அவஸ்தையிலிருக்கும் குடும்பி எப்படி வேஷ்டி, புடவை செருப்பு, முதலிய ஆயிரக்கணக்கான சில்லரை வஸ்துக்களை வாங்குவது? போதாதென்று அவன் பெற்ற பையனை மேல் வகுப்பில் படிக்க வைக்க வேண்டுமாம்! பெற்ற பெண்ணுக்குக் கல்யாணம் பண்ணிவைக்க வேண்டுமாம்! இந்த அவஸ்தையெல்லாம் ஏற ஏறத்தான் நமது வறுமைக் கொடுமை புலனாகின்றது.

சம்பாத்ய அளவு

ஒரு போஜனமாவது தாட்டியாய்ச் சாப்பிடுவதற்கில்லாது நாம் வாழ்ந்து வருகிறோம். பள்ளிக்கூட ஹாஸ்டலில் சோறும், கீரைக் கறியும் போடுவதற்கு ஏறக் குறைய 15 ரூபா சார்ஜ் பண்ணிவிடுகிறான். அதைத் தவிர, அறைக்குக் குடிக்கூலி தரவேண்டும். மாதாமாதம் குறைந்தது முப்பத்தைந்தோ நாற்பதோ செலவழிக்காமல் முடியவே முடியாது. இந்த மாதிரி புஷ்டியில்லாத சோற்றைத் தின்று வந்தால் பள்ளிக்கூடப் பையனுக்கு ஏன் மலேரியா வராது? அவனுக்கு உடம்பில் திராணி எங்கிருந்து வரும்? வங்காளத்தில் மட்டும் ஒவ்வொரு வருஷமும் 12 லக்ஷம் பேர் மலேரியாவினால் சாகிறார்களாம். இதற்கெல்லாம் மூலகாரணம் தரித்திரமும் அறியாமையுமே! 'ஏழைகளுக்குத்தான் மலேரியா ஜ்வரம் வரும்' என்று டாக்டர் பெண்ட்லி கூறியிருக்கிறார். புஷ்டியில்லாத உணவு உண்பவர்களுக்கு மலேரியா வந்தே தீரும். கல்கத்தா போன்ற பட்டணங்களில் காச நோய் விரைவாகப் பரவி வருகிறது. பிறந்த குழந்தைகளில் மூன்றிலொருபங்கு ஆண்டு நிறைவுக்கு இராமலே செத்துப் போகின்றன. பட்டணவாசங்களில் ஒன்றுக்கு இரண்டு பங்காக வாடகை ஏறிக்கொண்டே போகிறது. ஆனால் சாதாரண மனிதனின் சம்பாத்யமோ 40-50 ரூபாய்க்கு மேலில்லை. அவன் என்ன செய்வான் பாவம்! குருட்டுச் சந்துகளில், ஈரம் காக்கும் வீடுகளில் குடியிருக்கிறான். நாளில் 24 மணி நேரமும் அந்தவீடுகள் சாத்திக் கிடக்கின்றன. 'வீட்டுக் குழந்தை வெளியே ஓடி அதன்மீது வண்டியேறி விட்டால் என்ன செய்வது?' என்று கேட்கிறார்கள்.

ஆயுள் க்ஷீண காரணம்

ஏழைகளுக்கென்றே பகவான் இனாமாக, காற்று, வெளிச்சம், சூர்ய ஒளியாவும் தந்திருக்கிறார். ஆனால், அவைகளை யார் அனுபவிக்கிறார்கள்? ஒருவருமில்லை. நமது உயிர் வாழ்க்கையே பெரிய சாவு போலிருக்கிறது. நாமனைவரும் செத்தால்தான் கதி மோக்ஷம் உண்டு போலிருக்கிறது. ஆயிரக் கணக்கான தகர டப்பி உணவுகளில் எதையோ திணித்து, நம் குழந்தைகளை வளர்க்கின்றார்கள். இதை யறியாமல் இன்னும் குழந்தைகளைப் பெற்றுக் கொண்டே இருக்கிறார்களே, இவர்களை என்னென்பது! ஆதலால்தான் நமது தேச மக்களின் பலம் நாளுக்கு நாள் க்ஷீணமாகிக் கொண்டே வருகிறது. நமது தாத்தாக்கள் 70—80 வயது வரை திடகாத்திரர்களாக வாழ்ந்தார்களாம்! ஆனால் நாம் எத்தனை வயது வாழ்கிறோம்? ஒரு ஆங்கிலேயனின் சராசரி வயது 46 என்கிறார்கள். ஆனால் நம் சராசரி வயதோ 23 தான். நமது இரத்தத்தை வறுமையும், நோயும் உறிஞ்சிக் கொண்டேயிருந்தால் நாம் உயிராவது வாழவாவது!

குமாஸ்தா அவதாரமா?

இந்த மாதிரி அவஸ்தை அதிகமாகிக் கொண்டிருக்கும்போது, உயிர் வாழ்வதே லாட்டரியாயிருக்கும் போது, எல்லாம் சிக்கலாகிக் கொண்டிருக்கும் இச்சமயத்தில் நாம் என்ன செய்கிறோம்? சும்மா உட்கார்ந்து கொண்டு சோம்பேறிகளாயிருந்து வருகிறோம். நமது நெருக்கடியான நிலையைப் பற்றி ஒரு நிமிஷம் கூட

ஆலோசிப்பது கிடையாது. ஏதாவது வழி தெரிந்தாலும் அந்த வழியைப் பின்பற்றி நடக்க மாட்டோ மென்கிறோம். ஏனெனில், குமாஸ்தா வேலைக்காகத்தான் நாம் அவதார மெடுத்திருக்கிறோம் என்பது நமது எண்ணம்! நமது இளைஞர்களுக்கோ எம்.ஏ. படிப்பதும், எம். எஸ். ஸி. படிப்பதுமே வாழ்க்கையின் லக்ஷியம் என்பது எண்ணம்!

பட்டதாரியின் விலை

சந்தைக் கடையில் ஒரு பட்டதாரிக்கு என்ன விலை என்று நான் கேட்கிறேன். எம். ஏ படித்தால் 75, பி.ஏ. படித்தால் 40—50. இவ்வளவு தானே? ஆனால் அதே சமயத்தில் நாம் இன்னொன்றை மறக்கலாகாது. ஒரு உத்தியோகம் காலியானால் அந்த ஸ்தானத்துக்கு 500 பேர் அப்ளிகேஷன் போடுகிறார்கள். ஆதலால் கடைசி முடிவு என்ன? பி.ஏ. படித்தும் உத்தியோகம் கிடைப்பதில்லை என்பதுதான் முடிவு. மலேரியாவினாலும், இதர நோய்களினாலும் அவஸ்தைப் பட்டுக்கொண்டு மனித வாழ்வின் இளமையை, கலாசாலைப் படிப்பில் வீணாக்கிவிட்டு உடல் வலிமை யிழந்து இளைஞர்கள் தவிப்பதுதான் கண்ட மிச்சம். காலேஜை விட்டு வெளியே வந்த பின்புதான் புத்தகப் படிப்பின் பொறுமானம் தெரிகிறது. வாழ்க்கை யென்னும் போராட்டத்தில் ஏட்டுச்சுரைக்காய் உதவாது என்பது விசதமாகின்றது.

நான் சர்வாதிகாரியானால்?

பி.ஏ. படித்த மேதாவிகளில் சிலர் அந்தப் படிப்புப் போதாதென்று நினைத்து சட்டப் படிப்புக்கு ஆரம்பிக்கிறார்கள். 'லா' காலேஜில் படிக்காத போனால் பாபமென்று எண்ணிக் கொள்கிறார்கள் போலும். 'பரீக்ஷை பாஸ் கொடுக்கவே படிக்கின்றோம்' என்பது அநேக மாணவர்களின் எண்ணமா யிருக்கிறது. ஜில்லாக் கோர்ட்டுகளில் வாதிக்கின்ற ப்ளீடர்களிடம் "என்ன சம்பாத்தியம்?" என்று கேட்போமானால், தற்காலப் படிப்பின் குட்டு வெளிப்பட்டுவிடும். சம்சார சம்ரக்ஷணை யென்ற விசாரத்தோடு கள்ளிப் பெட்டிகளின் மீது உட்கார்ந்துகொண்டு காலம் போக்கி வருகிற அந்த ப்ளீடர்கள் தங்கள் அவஸ்தைகளை நம் காதோடு சொல்லக் கேட்கலாம். இந்தியக் கல்வியின் முன்னேற்றத்திற்காக உழைத்தவர்களில் ஸர் அஷ்டோஷ் முகர்ஜி என்பவர் பெயர் பெற்றவர். ஆனால் சட்டக் கலாசாலை சம்பந்தமாக அவருக்குள்ள அபிப்பிராயங்களை நான் ஒப்புக்கொள்ள முடியாது. என்னைக் கல்கத்தாவுக்குச் சர்வாதிகாரியாக ஒரே ஒரு நாள் நியமித்தால் போதும் உடனே என்ன செய்வேன் தெரியுமா? 'லா காலேஜ்' என்ற கட்டடத்தை தரை மட்டத்திற்கு இடித்துத் தள்ளிவிடுவேன். குறைந்தது 10 வருஷத்திற்காவது சட்டப் படிப்புச் சொல்லித் தரலாகாது என்று உத்தரவு போட்டுவிடுவேன். அந்த மாதிரி செய்தால் இப்போதுள்ள ஏழை ப்ளீடர்களுக்கு சோற்றுக்காவது கிடைத்துக் கொண்டிருக்குமல்லவா? சட்டப் படிப்பு என்ற இந்தத் தீராத நோய் இதோடு முடிந்து விடவில்லை. பி. எல். படித்தது போதாதாம்! அது முடிந்தவுடன் எம். எல். படித்துக் கிழிக்கவேண்டுமாம்! இப்படி ஸதா படித்துப் படித்து தேகத்தை நாசமாக்கிக் கொள்ள வேண்டுமென்று கடவுள் உத்தரவு செய்தாரா என்ன? என்ன பேதமை!

அங்கும் இங்கும்

ஒவ்வொருவனும் படித்தவனாயிருக்க வேண்டியது தான். ஆனாலும் இங்கிலாந்து, அமெரிக்கா, ஜப்பான், ஜர்மனி முதலிய இடங்களில் சொல்லித் தரும் படிப்போடு ஒப்பிடுங்கால், நம் இந்தியக் கலாசாலைகளில் சொல்லித் தரும் கல்வி உபயோகமற்றது என்பது தெரியவரும். பி.ஏ., எம்.ஏ., என்று பட்டம் வாங்குவதுதான் படிப்பின் லக்ஷ்யமோ? மேனாடுகளில் மெட்ரிகுலேஷன் படித்த மாணவர்களில் 100க்கு 10 பேர்தான் காலேஜ் படிப்புக்குப் போகிறார்கள். அவர்களில் பாக்கி மாணவர்கள் எங்கே போகிறார்களென்று பார்த்தால் சிலர் வியாபாரத் துறையில் இறங்குகின்றனர். சில வருஷங்களில் அநுபவசாலிகளாக மாறி விடுகின்றனர். ஆனால் நமது மாணவர்களோ காலேஜ் படிப்பு இல்லாவிட்டால் மகா பாபமென எண்ணிக் கொள்கிறார்கள். எப். ஏ, பிறகு பி. ஏ., பிறகு பி. எஸ். ஸி. இப்படிப் படித்துக் கொண்டே யிருக்கிறார்கள். "இயற்கையான புத்தியை சர்வ கலாசாலை கெடுத்து வருகிறது" என்று அறிவாளி எமர்ஸன் கூறி யிருக்கிறார். பாஸ் பண்ணின பையன்களில் முதல் வகுப்பாம்! இரண்டாம் வகுப்பாம்! மூன்றும் வகுப்பாம்! இதென்ன பிரிவுகளோ தெரியவில்லை. ஒரே காளவாயிலிருந்து சுட்டெடுத்த செங்கல்களில் முதல் தரமானது, இரண்டாம் தரமானது, மூன்றும் தரமானது என்று பொறுக்கி வைப்பது போலிருக்கிறதே இதுவும்!

உழைப்பில் வெறுப்பு ஏன்?

உழைப்பின் பெருமையை நாம் இன்னும் உணரவில்லை. கடையில் வாங்கின சாமானைத் தூக்கிக்கொண்டு போவதற்கு நமது இளைஞர்கள் கூலியாளைத் தேடுகிறார்கள். இல்லாவிடில் பிறர் கண்ணிற்படாதபடி இருட்டில் தூக்கிக்கொண்டு போகிறார்கள். இதெல்லாம் என்ன விந்தை! 'பெங்கால் கெமிகல் வொர்க்ஸ்' என்ற தொழிற்சாலையை நான் நிருமித்த போது ரகஸ்யமாக சாமான்களை பண்ணி ரகஸ்யமாக விற்கவேண்டுமென ஒரு நண்பர் எனக்கு உபதேசம் செய்தார். உழைப்பினிடத்து நமக்கு மதிப்பில்லை என்பதையே இவை காட்டுகின்றன. வியாபாரத் துறைகளில் அநேகம் வழிகளை நாம் கண்டுபிடிக்க வேண்டும். புதிய வழிகளைக் கண்டு பிடிக்காவிடில், நாம் அழிந்தே போவோ மென்பதில் சந்தேகமில்லை.

படிக்காத பெரியோர்

நம் தாய் நாட்டில் ஏதாவதொரு கண்காட்சிச்சாலையைத் திறப்பதானால், அப்போது எனக்கு அழுகை வருகின்றது. ஐரோப்பியத் தொழிற்சாலைகளிலிருந்தா சாமான்கள் வரவேண்டும்! ஓர் கண்காட்சிக்குப் போய்ப் பார்த்தால்தான் நமது குறைகளும் நமது தரித்திரமும் நன்றாய் விளங்கும். நமது இளைஞர்களுக்கெல்லாம் ஆண்மை இருக்கிறதென்பதில் ஐயமில்லை. ஆதலால், பள்ளிக்கூடப் பரீக்ஷை தவறிவிட்டதற்காக யாரும் வருந்த வேண்டாம். படிப்பு முடிந்ததும் உத்தியோகம் கிடைக்கவில்லையே என்றும் அழவேண்டாம். இந்த மாயைகளை முதலில் நம்மவர் போக்கிக்கொள்ளவேண்டும். வருங்காலத்தை எண்ணி வருந்தாத ஸ்வபாவமுடைய, வீரமுடைய இளைஞர் கூட்டமொன்று நம் நாட்டிற்

குத் தேவை. அவர்களெல்லாம் தேகத்தினால் உழைத்துப் பாடுபடவேண்டும். பெரிய பெரிய சாம்ராஜ்யங்களை உண்டாக்கிய அக்பர் சக்கரவர்த்தி, ஸம்ராட் சிவாஜி, ராணா ரஞ்சிட் சிங், சுல்தான் ஹைதர், க்ளைவ், வாரன் ஹேஸ்டிங்ஸ் முதலியவர்கள் எந்த ஸர்வகலாசாலையிலும் படித்துப் பாஸ் செய்தவர்களல்லர். அமெரிக்காவின் மகா தர்மவானான கார்னீஜி என்பார் சிறு வயதில் தெருக்களில் சாமான் விற்ற பையன்; ஆனால் அவர்தான் பிற்காலத்தில் தமது தொழிற் சாலையை 10 கோடி ரூபாய்க்கு விற்றார். சாதாரண ஸோல்ஜரா யிருந்த லார்ட் ராபர்ட்ஸ் ரணரங்க சேனாதிபதியாக மாறினான். லார்ட் கிச்னரும் அப்படித்தான். மேலும் டாடா, தாமோதர் தாகர்ஸே, பஸூல்பாய் கரீம்பாய், கோயென்கா, லிப்டன் முதலியவர்களில் ஒருவருக்காவது பி.ஏ. பட்டம் கிடையாது. அவர்களைப் 'படிக்காதவர்கள்' என்று சொல்லிவிட முடியுமா? வாஸ்தவத்தில் அவர்கள்தான் படித்தவர்கள். தன் கையே தனக்குதவி என்ற தத்துவத்தினால் முன்னுக்கு வந்தவர்கள். அவர்களெல்லாம் 'நோட்ஸ்' படித்து உருப் போட்டவர்களல்ல. தாமே கஷ்டப் பட்டு அனுபவம் பெற்றால்தான் உலகில் முன்னுக்கு வர முடியும். 'கைத் தொழில்' ஒன்றுதான் நமக்கு உள்ள வழி. அந்த வழியில் இறங்காவிட்டால் நாம் அழிய வேண்டியதுதான். சின்னச் சின்னச் தொழிற்சாலைகளை உபாயமாகத் துவக்கி, பிறகு பெரிதாக்கிக் கொள்ளவேண்டும். அமெரிக்கா முதலிய பிறநாடுகளுக்குச் சென்று இளைஞர்கள் படித்து விட்டு வருவது மட்டும் போதாது. அவர்களுக்கெல்லாம் வேலை தர, தொழிற்சாலைகள் நிருமிக்க வேண்டும். நாம் 'சாவதா? வாழ்வதா?' என்றே, இப்போது நிலைமை இருக்கிறது. குமாஸ்தா வேலையினால் பலனே கிடையாதென்றும், தன்னம்பிக்கையே கை கொடுப்பதென்றும் நாம் உணர வேண்டும். எனது எச்சரிக்கையைக் கேளுங்கள். 'தொழிற்சாலைகளும் விஞ்ஞான அறிவும் நாட்டில் மும்முரமாக வேண்டும். நமது ஸ்வதேசிக் கைத் தொழில்களை அபிவிர்த்தி செய்வதில் இளைஞர்கள் இறங்கவேண்டுமே யன்றி, குமாஸ்தா வேலையைத் தேடி அலையவே கூடாது' என்று மீண்டும் எச்சரிக்கை செய்கின்றேன்.

கபீர் தாஸரின் நன்மொழிகள்

[பதினைந்தாம் நூற்றாண்டில், காசியில், மகம்மதியரிடை வளர்ந்தவர் கபீர் தாஸர். இவருக்கு நெசவுத் தொழில். ஸ்ரீ ராமானந்தர் என்னும் ஓர் இந்து சந்நியாசிக்குச் சீடரானார். பாரத வர்ஷத்தில் இந்து முஸ்லீம் பிணக்கை ஒழிக்கவந்த மகான்களுள் இவரும் ஒருவர். பக்தி பரமான பாடல்களை ஏராளமாகப் பாடியிருக்கிறார். இவர் இறந்ததும், தாங்களே இவருக்கு ஈமக்கடன் செய்யவேண்டுமென்று இந்துக்களும், முஸ்லீம்களும் வாதாடினராம். கடைசியாக இரு ஜாதியினரும் சேர்ந்து அவருக்குச் சமாதி கட்டி இன்றைக்கும் வணங்குகின்றனர்.]

---

1. கடவுளும், குருவும் ஒருவர் தான். உருவத்தில்தான் வித்தியாசம்.

2. மெலிந்தோரை நீ ஹிம்சிக்காதே. வெருந் தோலாலாக்கப்பட்ட துருத்தியினின்று வரும் காற்று இரும்பையே சாம்பலாக்குவதுபோல, அவருடைய பார்வை எரிக்கும் சக்தியுடையது.

3. ஏழைகளுக்குக் கொடுப்பதினால் பணக்காரர்களுக்குச் செல்வம் குறைந்து போய்விடாது. தாகமுள்ளவன் தண்ணீர் சாப்பிடுவதினால் ஆற்றுத் தண்ணீருக்கு நஷ்டமா? தீமைக்குப் பதில் நன்மை செய்வாயாக.

4. உன் உணவுக்குத் தகுந்தபடி மனதும், நீ குடிப்பதற்குத் தகுந்தபடி குரலும் அமைகின்றன.

5. சிற்றின்பத்தை ஊட்டக்கூடிய கதைகளைக் கேட்காதே. அது கடவுளை மறக்கச்செய்கிறது.

6. நான், எனக்காகப் பிச்சையெடுப்பதைவிட உயிரை விடுவதையே விரும்புவேன். ஆனால் பிறருக்காகப் பிச்சை யெடுப்பதற்கு வெட்கப்பட மாட்டேன்.

7. மரம், தடாகம், மேகம், இவைகளைப் போல நல்லவர்கள் பிறருக்காகவே இருக்கின்றனர்.

8. அன்புள்ள ஒரு மனிதன் வாயால் பேசாவிட்டாலும், அவனது கண்களில் அன்பு ததும்பிவிடும்.

9. எவ்வளவு நித்ய கர்மாக்களை நீ செய்து கொண் டிருந்தாலும் அன்பில்லா விட்டால் கடவுளைக் காண முடியாது.

10. "நீ என்னை ஏன் மிதித்துத் துவைக்கிறாய்? நான் உன்னை மிதித்து மண்ணோடு மண்ணாக்கும் காலமும் வரும்" என்று மண், குயவனைப் பார்த்துச் சொல்லுகிறது.

11. சரீரம் ஒரு சத்திரம். மனது ஒரு பறவை. ஒன்றுக்கொன்று என்ன சம்பந்தம்?

12. ஏழையாயினும், அரசனாயினும், தோன்றியவர்கள் மறைந்தே போவார்கள்.

13. எல்லாம் என்னுடையதென்று இறுமாப்படையாதே. நீ சுவாசிக்கும் காற்றுக் கூட உனக்குச் சொந்தமல்ல.

14. தீமைகளைச் செய்துவிட்டு இப்பொழுது வருந்தி என்ன பிரயோஜனம்? அவரையை நட்டுவிட்டுத் துவரையை எதிர்பார்க்க முடியுமா?

15. சேர்க்கப்பட வேண்டியது கடவுளிடத்தில் அன்பு. கொடுக்கப்பட வேண்டியது பசித்தோருக்கு அன்னம்.

16. பிறர் மனைவி கூரியவாளுக் கொப்பாம். பத்துத் தலை ராவணன் அழிந்ததும் பெண்ணாலேயே.

17. ஜபம், தவம் செய்வோனாயினும், கல்வி கேள்விகளிற் சிறந்தோனாயினும் பரிசுத்த முள்ளவனே சிறந்தவனாவான்.

18. நீ எதையேனும் யாசிப்பாயானால் கௌரவம், மரியாதை, வெட்கம் மூன்றையும் இழப்பாய்.

19. திருப்தி யுள்ளவனுக்கு, பணம், பசு, யானை, குதிரை, நகை, நாணயங்கள் எல்லாம் தூசிக்குச் சமானம்.

20. மன்னிக்கும் சுபாவத்தை எல்லாரும் பழக்கிக் கொள்ளவேண்டும். பொறுமையே பூஷணம். பிருகு மகாரிஷி விஷ்ணுவை உதைத்தபோது கூட, பகவான் பொறுமையே காட்டினார்.

அனுபவ உலகம்

சொல்லுக்கு வலிமை

"திலீபன்" எழுதியது

மலையிலே பெய்யும் மழை, காட்டு வழியாய் ஓடிக் கடலில் கலக்கிறது. இதைக் கண்டுபிடித்துச் சொல்ல, அபார புத்தி வேண்டியதில்லை. ஆனால், அதை நாட்டுக்கு உபயோகமான பாசன ஆதாரமாய்ச் செய்வதற்குத் தான் ஒரு எஞ்சினீர் வேண்டியிருக்கிறது. பெரிய காரியங்களையோ சிறிய காரியங்களையோபற்றி மலிவான ஜோஸ்யங் கூறிப் புகழ் சம்பாதிக்க முயலுவோர் பலர் இருக்கிறார்கள். ஆதாரங்கள் மாறினால், ஜோஸ்யம் தப்பிப்போவது நிச்சயம். ஆதாரத்தைக் கலக்கி, தன்னிஷ்டப்படி அவற்றைத் திருப்பி, கோரிய பலனைக் காண்பவன் பெரிய மனிதன். அவன் தோல்வியுற்றாலும் மேதாவிதான்.

ஞானிக்கு ஒரு தனிவழி. பைத்தியக்காரனுக்கும் அப்படித்தான். ஏன் ஞானியைத் தொழுது, பைத்தியக்காரனைக் கண்டு நகைக்கிறோம்? ஞானி உலகத்தை மாற்றிவிடுகிறான். பித்தனோ உலகத்தினின்று மாறுபடுவதோடு நின்று விடுகிறான். இருவருக்கும் மனோ தர்மம் உண்டு. ஒன்று இனிமையமான தெளிவிலே ஜனிப்பது; மற்றது, கோரக் குழப்பத்திலே பிறப்பது. நட்டதெல்லாம் பயிராகிவிடுமோ? பிரபஞ்ச தர்சனம் வேண்டும்; பிரபஞ்சத்துக்குத் தன்னைக் காட்டிக் கொள்ளவும் வேண்டும். இரண்டையும் திறம்படச் செய்பவன் ஞானி, அறிஞன்.

வார்த்தை உங்களுக்கும் சொந்தம்; எனக்கும் சொந்தம்; காந்தி, கிருஸ்து, கண்ணன் அல்லது கண்ணனைப் புவிக்கு அளித்த ஆசிரியனுக்கும் சொந்தந்தான். ஆனால், அவர்கள் வாயினின்றும் புறப்படும் வார்த்தைகள் மந்திரச் சொற்களாகி விடுகின்றன; பல மனிதர் உள்ளங்களைக் கலக்கும் மகா சக்தியுடன் விளங்குகின்றன. நமது வார்த்தைகள் பலனளிப்பதற்கோ, நாம் அவர்கள் நாமத்தைத் துணைக்கொள்ள வேண்டியிருக்கிறது. இந்த வேற்றுமைக்கு யார் ஜவாப்தாரி?

சிறிய வியாபாரம். ஸ்தாபனத்திலுள்ளவர் யாவரும் கூடி யோசிக்கிறார்கள். புதிதாய் வந்து சேர்ந்த ஒரு குமஸ்தா "என் வார்த்தையைக் கேட்போரில்லையே" என்று அங்கலாய்க்கிறான். அவன் சொல்லும் யோசனை அருமையானதுதான். ஏனையா அது எடுபடவில்லை? தகுதியை நிரூபணம் செய்வது வார்த்தையல்ல. அனுபவமும் ஸ்தானமும் இச்சா மாத்திரத்தில் கிடைப்பனவல்ல. பட்டை தீர்த்து, சுவர்ணத்திலே பதிக்கப்பட்ட வைரம் ஜோதி வீசுகிறது. அது மண்ணோடு மண்ணாய்ப் புதைந்து கிடந்தபொழுது, அதன் அழகை அறிந்தவர் யார், அனுபவித்தவர் யார்?

சிறிய காரியத்துக்கு ஒத்ததுதான் பெரிய காரியத்துக்கும். மகாத்மா காந்தி, பட்டை தீர்ந்த வைரக்கல்; சோதனைகளில் பரீட்சை கொடுத்துத் தேறிய மகான். தேச வாழ்க்கையிலே அவருக்கு உன்னத ஸ்தானம்; அது பத்தரை மாற்றுத் தங்கக் கட்டிடம். அவர் சொல்லுவதெல்லாம் சாஸ்திரம் என்று புத்திமான்கள் கொண்டாடுகிறார்கள். அவர் வார்த்தை, கஷ்டங்களிலே ஈடு கொடுத்து வெளிவந்த சொல். அது சத்யம்.

அந்தப் பெரிய மனிதர் உறங்கிக் கிடந்த, தேங்கிக் கிடந்த, உயிரற்றுக் கிடந்த தேசத்திலே ஒரு பெரும் எழுச்சியை உண்டுபண்ணி விட்டார். எழுச்சிக்குப்பின் அயர்ச்சி இயல்பு. சிலர் துள்ளிக் கிளம்புகிறார்கள். "என் வார்த்தையைக் கேளுங்கள்" என்று கூக்குரலிடுகிறார்கள். ஆனால், கேட்போர் பலரைக்காணோம். "இந்த காந்தியை என்ன செய்வது? ஜனங்கள் அசடுகள்" என்றெல்லாம், ரகசியமாகவோ, நகாசு வேலை செய்து பகிரங்கவோ அவர்கள் உறுமுகிறார்கள். இதில் என்னவோ விந்தை மாத்திரம் ஒன்றும் இல்லை.

வாழ்வுக்குப் பயன்படாத வேதாந்தம் வேதாந்தமல்ல. என்றாலும், வாழ்வு வேறே, வேதாந்தம் வேறே என்று பாகப் பிரிவினை செய்து வாழ்க்கை நடத்துவது நமக்கு சர்வ சகஜமாய் விட்டது. சொல்லுக்கு உறுதி தருவது சத்யம். சத்ய வசனம் புறப்படுவது பெரியோர் நாவினின்று, சத்ய தர்சனத்தில் வாழ்க்கையையே ஈடுபடுத்தும் பெரியோர் வாக்கிலிருந்து. எல்லாப் பொருளும் எல்லோருக்கும் அடியிலிருந்து தென்பட வேண்டுமென்றிருக்குமானால், நாம் ஒவ்வொருவரும் நமது வாழ்க்கை பூராவையும் மரத்துக்கு மரம் தொற்றுவதிலே தான் கழித்துச் செல்லவேண்டியிருக்கும். வாழ்வு என்பது ஒரு தொடர்ச்சியின் விளைவு. ஜனசமூக வாழ்வின் தொடர்ச்சியிலே, பற்பல தத்துவ தர்சிகளின் கை முத்திரை பதிந்து கிடக்கிறது. எப்படி அவர்களால் அதைப் பதிக்க முடிந்தது? வாழ்ந்த வாழ்விலே, அவர்களுக்கு ஒரு சொரூபம், குணப் பெருமை, ஆன்ம சக்தி ஏற்பட்டது. சத்தியத்தைக் காண அவர்களுக்குள்ள உரிமை நிரூபணமாயிற்று. ஜனங்கள் நம்பினார்கள். கால சக்ரம் பலம் கொடுத்துவிட்டது.

உயர்ந்த தத்துவம் கருத்திலே உதிக்கிறது. அதைச் சொல் வெளிப்படுத்துகிறது. அந்தச் சொல் பரவுவதற்கு பின்வலு என்ன என்பதை நாம் இப்பொழுது உணர்ந்து கொள்ளவேண்டும். "நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி" என்றால், நகைத்துப் பரிகசிக்க வேண்டியதில்லை. அவ்வாறு செய்வதால் பயனுமில்லை. மனிதன் செய்தது பழைய சாஸ்திரம்; புதிய சாஸ்திரங்களையும் அவன் சிருஷ்டிக்க முடியும். இதனை யதா பூர்விகள் உணரவில்லையென்றால், அதைக் கண்டு சிரிப்பவரும்தான் உணரவில்லை. உன்னதமான கருத்துக்கள், மனம் போனபடி அலைந்து திரியும்பொழுது, இடறி விழும்படி சுத்த சொரூபத்துடன் எங்கும் கொட்டிக் கிடக்கும் சந்திக்கடைப் பண்டமல்ல. "தட்டினவனுக்குத் திறக்கும்" என்றார் கிருஸ்து. உபாசகனுக்கே உண்மை புலப்படும். எந்த எந்தத் துறையில் வாழ்க்கையை எவன் எவன் அடியோடு அர்ப்பணம் செய்து விடுகிறானோ, அவன் அவனுக்கு அவ்வப் பொருள் சம்பந்தப்பட்ட மட்டில் நாம் தலை பணிந்தே யாகவேண்டும். நமது வணக்கம் அவன் சொல்லுக்கு என்பதைவிட, அதற்குப் பின்னுள்ள சொரூபத்துக்கு என்பதே மிகப் பொருந்தும்.

புனித யாத்திரை.

பாரதத்தாயின் தவப்புதல்வர் இன்று புனிதமான தேச யாத்திரையில் ஈடுபட்டிருக்கின்றார். "தீண்டாமை ஒழியவேண்டும் அல்லது நான் அழியவேண்டும்" என்று வீர கங்கணம் பூண்டுள்ள மகாத்மா இந்த யாத்திரையில் ஹரிஜனங்களின் குறைகளை அறவே ஒழிப்பாரென்பது திண்ணம். இன்னும் 9 மாத காலத்தை அவர் இந்த யாத்திரையில் செலவழிக்கப் போகிறார்.

ஹரிஜன சேவாசங்கத் தலைவர் தக்கர் பாபாவும், மகாத்மாவின் ஆங்கிலச் சிஷ்யையான ஸ்ரீமதி மீராபாயும், மகாத்மாவின் காரியதரிசி சந்திர சங்கர் சுக்லாவும் டைபிஸ்ட் ஸ்ரீயுத நாயரும் மகாத்மாவின் கோஷ்டியில் இருக்கின்றனர்.

யாத்திரை க்காலத்தில்

தமக்காக எந்த நகரத்திலும் ஊர்வலங்கள் முதலிய தடபுடல்கள் நடத்தக்கூடாதென்று மகாத்மா கூறியிருக்கின்றார். அனாவசியமாக ஒரு தம்பிடி கூடச் செலவு செய்யலாகாதென்றும், பொதுக்கூட்டங்களில் சகலரும் ஒருமித்து உட்கார வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டிருக்கிறார். அநேக இடங்களுக்கு வந்து பார்வையிடுமாறு மகாத்மாவைச் சேட்டுக்கொள்ளலாகாது. மிக்க அவசியமான இடங்களுக்கு மட்டும் சென்று அங்குள்ள விஷயங்களைப் பூராவும் பரிசீலனை செய்ய வேண்டுமென்பது மகாத்மாவின் விருப்பம். ஆங்காங்கு ஹரிஜன மாணவர்கள் நடத்தும் பிரார்த்தனைகளில் மகாத்மா கலந்துகொள்வார். ஒரு நகரத்தில் ஒரே ஒரு பொதுக்கூட்டம்தான் நடத்தலாம். தேவையானால் ஸ்திரீகளுக்கென்று நடத்தப்படும் பிரத்தியேகமான கூட்டத்திற்கும் மகாத்மா வருவார். ஆங்காங்கு ஹரிஜனத் தலைவர்களையும், ஸனாதன சகோதரர்களையும் சந்தித்துப் பேசுவார்.

இரவு எட்டு மணிக்குமேல் மகாத்மாவுக்கு எத்தகைய அலுவலும் வைக்கக்கூடாது. திங்கட்கிழமைகளிலும் செவ்வாய்க்கிழமைகளிலும் மகாத்மாஜிக்கு எந்த அலுவலும் வைக்கக்கூடாது. அவையே 'ஹரிஜன்' பத்திரிகைக்கு அவர் கட்டுரைகள் எழுதும் தினங்கள்.

"பலரைப் பாப்பராக்கினேன்"

மகாத்மாவின் பிரயாணத்தின் முதல் வாரத்தில் ஒரு உருக்கமான சம்பவம் நிகழ்ந்தது. ஸ்ரீமான் அபயங்கர் தம்பதிகள் மகாத்மாவைத் தோட்டிகளின் சேரியிலே வரவேற்றார்கள். தேச சேவையில் எல்லாவற்றையும் தியாகம் செய்துள்ள அபயங்கரின், மனைவி கரத்திலே அணிந்திருந்த இரு தங்கக் காப்புகளைக் கழற்றி ஐயனிடம் சமர்ப்பித்து விட்டாள்.

மகாத்மா இதைப்பற்றி ஒரு பொதுக் கூட்டத்தில் பிரஸ்தாபித்த பொழுது, அவர் சொல்லியதாவது:—

"என் மனம் எஃகினும் கடினமடைந்துவிட்டது. நான் எளிதில் கண்ணீர் விடுவதில்லை. ஆனால், அபயங்கர் மனைவியின் செய்கை என்னை மனமுருகச் செய்துவிட்டது. டாக்டர்கள், லாயர்கள், வர்த்தகர்கள் முதலிய பலரை நான் 'பாப்பராக்கி' விட்டேன். ஆனால், அதற்காக நான் பச்சாதாபப்படவில்லை. தோட்டிகளோடு தோட்டியாக வாழத்துணிந்த அபயங்கர் மனைவிக்கு எதற்காகத் தங்கக் காப்பு? இந்த ஏழை நாட்டில், ஜனங்கள் காலணாச் சம்பாதிக்க, மைல் கணக்காய் நடக்கிறார்கள். ஆகையால், ஏழைகளுக்கிரங்கும் எவரும் விலைமதிப்புடைய ஆபரணங்களை யணிதல் அழகன்று. நாம் ஹரிஜனங்களோடு ஒன்றி உறவுகொள்ள, இவற்றை விலக்குவதையன்றி வேறு வழி கிடையவே கிடையாது. மற்ற எல்லாவற்றையும் துறந்தோர் பகவானை அடைகிறார்கள்; பகவானின் பரிஜனங்களாக, அதாவது ஹரிஜனங்களாக ஆகிவிடுகிறார்கள். பணத்தையுடையவரோ பணக்காரராய்த்தான் இருக்க முடியும்."

அபூர்வ ஆயுதம்

(மகாத்மா காந்தி)

["சட்ட மறுப்பியக்கத்தைச் சேர்ந்தவர்கள், ஹரிஜன சேவையில் இறங்கலாமா?" என்ற ஒரு கேள்விக்கு, இன்றைய "ஹரிஜன்" பத்திரிகையில் மகாத்மா பதில் எழுதியிருக்கிறார்.]

சட்ட மறுப்புச் செய்ய விரும்பும் காங்கிரஸ்காரர்கள், ஹரிஜன ஊழியர் சங்கம் எதிலும் பதவி வகிக்கவே கூடாது. அதிலும், அப்பேர்ப்பட்ட பதவியை, சட்ட மறுப்புக்கு உபயோகம் செய்தல் கூடவே கூடாது. சட்ட மறுப்பு என்பது ஓர் அபூர்வமான ஆயுதம். அதில் பிறவற்றைக் கலப்பதற்கு இடமே கிடையாது. அது அச்சத்தை யொழித்த வீரர்களின் ஆயுதம். ஆதலால், அதற்கு வேறொன்றில் அடைக்கலம் புகவேண்டிய அவசியமே கிடையாது. அது பட்டப் பகலிலே ஒளி மறைவின்றி எடுத்து வீசவேண்டிய ஆயுதமாகும். ஆகையால், சட்ட மறுப்புப் போரில் இறங்கியிருக்கும் காங்கிரஸ்காரர்கள், தங்களாலான ஹரிஜன சேவையும் செய்யலாம்; செய்யக் கடமைப்பட்டுமிருக்கிறார்கள். ஆனால், அவர்கள் ஹரிஜன ஊழியர் சங்கத்திலோ அதன் கிளைகளிலோ பதவி மட்டும் வகித்தலாகாது.

அவ்வாறின்றி, இவற்றில் அவர்கள் பதவி வகிப்பார்களானால், சட்டமறுப்பு இயக்கத்துக்கும் சரி, ஹரிஜன இயக்கத்துக்கும் சரி, இரண்டுக்குமே தீமை புரிவோராவர். அது எப்படிப்பட்டதென்றால், ஆலயம் செல்லுமொருவன், தனது சுவாமி தரிசனத்தையே சட்ட மறுப்பு இயக்கத்தை நடத்துவதற்குப் பயன் படுத்திக்கொள்வது போல் தான் ஆகும். அப்படிச் செய்வதால், ஆண்டவனும் ஏமாறமாட்டார்; மனிதனும் ஏமாற மாட்டான். இந்த இயக்கம் முற்றிலும் காங்கிரஸ்காரரையே நம்பி யிருந்தால், இம்மகத்தான சீர்திருத்தம் ஏற்படவே போவதில்லை. ஒவ்வொரு இந்தியனுமே தன்னைக் காங்கிரஸ்காரனாய் நினைக்க வேண்டுமென்பது தான் எனது ஆசை. ஆனால், அப்படி யில்லையே! ஒவ்வொரு ஹிந்துவுமாவது காங்கிரஸ்காரனா யிருக்கிறானா? ஒவ்வொரு ஹரிஜனும் காங்கிரஸ்காரனா யில்லாதபொழுது, ஹிந்துவெல்லாம் காங்கிரஸ்காரர்களென்று எப்படிச் சொல்ல முடியும்?

நான்?

"ச. வா. பை"

"வரும் வெள்ளிக் கிழமை வெளியாகவிருக்கும் சங்கின் முதல் இதழுக்கு நீங்கள் ஏதாவது எழுதுவீர்களென்று எதிர் பார்க்கப்படுகிறது" என்று தன் மேல் பாரம் படாமல் செயப்பாட்டு வினையாக ஒரு வெடிகுண்டை 'சங்கு' ஆசிரியர் என்மீது எறிந்தார். வெகு காலமாகத் தமிழின் தொடர்பே இல்லாது போனபடியால், கருத்துக்களையும் எண்ணங்களையும் வெளியிட வேண்டிய பதங்கள் பிடிபட மறுக்கின்றன என்று சாக்குக் கூறினேன். ஆற்று வெள்ளத்தில் முழுகுபவன் நாணற் புல்லானாலும் கைக்கெட்டியதைப் பற்றிக் கரையேற முயலுவது போல 'எதைப்பற்றி எழுதுவது? எனக்கு ஒன்றுமே தோன்றவில்லையே' என்று கூறி நழுவ யத்தனித்தேன். விடாக்கண்டன் கதையாக சங்க ஆசிரியர் "'நான்' என்று ஆரம்பித்து ஒரு பத்தி எழுதிக் கொடுத்தால் போதுமே" என்றார்.

'நான்' ஐப் (என்னைப்)பற்றி ஒரு பத்தி எழுதும்படி அவ்வளவு தெரிந்திருந்தால் என் நிலையே மாறியிருக்குமே என்று மறுமொழி யளிக்க, எங்களுடைய சம்பாஷணை முடிந்தது. ஆனால் சம்பாஷணையின் பலனாக 'நான் யார்?' என்ற விசாரம் என் சிந்தை மிசை குடிகொண்டது.

'நான்' என்பது எனது பெயரா, எனது தேகமா, எனது குணாகுணங்களின் சேர்க்கையா, எனது மனமா, ஆத்மாவா என்றெல்லாம் ஆராயப் புகுந்தேன். எனது பெயர் கேவலம் ஒரு இடுகுறியாயிற்றே! தேகமும் குணங்களும் நிமிஷந்தோறும் மாறுமியல்புள்ளனவே! மனமும் ஆத்மாவும் என்றால், அவைகளின் தன்மை யென்ன? என்றெல்லாம் 'நெடுந்தூரந் தானினைந்து நெஞ்சு புண்ணானேன்.' பிறகு பஸ்ஸில் ஏறிச் செல்லும்போது இரண்டு 'இண்டர்மீடியேட்' மாணவர்கள் 'i' என்ற குறியின் நிஜஸ்வரூபமென்ன என்பதைப்பற்றித் தர்க்கித்துக்கொண்டிருந்தனர். உடனே என் மூளைக்கு ஒரு சிறிது தெளிவுண்டாயிற்று.

பின்பு கணித சாஸ்திரத்தில் 'அஸங்க்யம்' (Infinity) என்பது எத்தன்மையது என்ற விவகாரம் என் ஞாபகத்திற்கு வந்தது. நாம் நினைக்கக் கூடிய எண்களெல்லாவற்றினும் உயர்ந்தது 'அஸங்க்யம்' என்பது கொள்கை. ஆகவே அது ஒரு எண்ணன்று. எண்ணக்கூடிய எண்களுக்கெல்லாம் அப்பாற்பட்டது, என்பது ஸித்தாந்தம். 'நான்' என்பது எது என்ற அனாவச்யமான ஆராய்ச்சியில் விழுந்திருந்த எனக்கு இக்கணித ஸித்தாந்தம் வழிகாட்டிற்று. 'நான்' என்பது பெயரல்ல, தேகமல்ல, குணாகுணங்களின் தொகையல்ல, ஆத்மாவல்ல, மனமல்ல இவையெல்லாவற்றையும் ஸம்பந்தப்படுத்தி, அவைகளுக்கப்பாற்பட்டு நிற்பது என்ற ஒரு விடை என் மனதிலெழுந்தது. முத்துகளினூடு சென்று அவைகளுக்காதாரமாயும், அவைகளாலானதாயுமுள்ள முத்துச் 'சரடு' போல், ஞானேந்திரியங்கள், கர்மேந்திரியங்கள், மனது எல்லாம் சேர்ந்ததே நிஜமான 'நான்' என்று உணர்ந்தேன். ஆகையால், 'நான்' என்பது என்ன என்று சொல்லுவதற்கு, எவை 'நான்' அல்ல என்று குறிப்பதே நல்ல வழி என்பதையறிந்தேன். கைவல்லியத்தில்,

தன்பதி யல்லாப் பேர்கள்
　தமையல்ல னல்லன் என்றாள்
அன்பனைக் கேட்ட நேரம்
　அவள் வெட்கி மௌனமானாள்
என்பது போல் இதன்றி
　தன்றெனச் சேடித்து
பின்பரப் பிரம்மந் தன்னைப்
　பேசாமல் பேசும் வேதம்.

என்ற செய்யுளின் அருமை யொருவாறு தெரியவந்தது. என்றால் இப்பொழுது 'நான்' என்பது யார் என எனக்குத் தெரிந்து விட்டதென்றே நீங்கள் நினைப்பீர்கள். அதுதான் தவறு. 'நான்' யார் என்பதை யுணர என் மனம் செய்த ஜாலங்களை யெல்லாம் நான் ஒன்றும் ஒளியாது மேலே உங்களுக்குச் சொல்லி விட்டேன். 'நான்' யார் என்பது எனக்குத் தெரிந்திருக்குமானால் உங்களுக்குந் தெரிந்திருக்க வேண்டும். அப்படியானால் 'நான்' யார் சொல்லுங்கள் பார்க்கலாம்?

எது எப்படி யிருந்தாலும் இந்தக் கட்டுரை எழுதியவர் 'ஹரிஜன்' பத்திரிகை ஆசிரியர் ஸ்ரீமான் ஆர். வி. சாஸ்திரியார் என்பதை நானறிவேன்.

—(சங்கு ப-ர்.)

தமிழ்நாட்டில் மகாத்மா பிரயாணம்

ஜனவரி

20உ	—திருவனந்தபுரம்
21 „	—திருநெல்வேலி
22, 23,	—(ஓய்வு)
24 „	—திருநெல்வேலி
24 „	—மதுரை
25 „, 26 „	—காரைக்குடி ஜில்லா.
26 „	—சிவகங்கை
27 „	—திருச்சி

பிப்ரவரி

2 „	—திருச்சினாப்பள்ளி
3 „	—திருச்சினாப்பள்ளி
3 „	—தஞ்சாவூர்
3 „	—கும்பகோணம்
4 „	—சிதம்பரம்
5 „, 6 „	—(ஓய்வு)
7 „	—விருத்தாசலம்
7 „	—சேலம் நகரம்
8 „	—சேலம்
8 „	—கோயமுத்தூர்
9 „	—காட்பாடி
9 „	—சென்னை சென்ரல்

மரண தாகமோ?

ஆயுதப் பரிகரண மகாநாடு என்ற போலிக் கூட்டம் அநேகதியாகி விட்டது. சமீபத்தில் ஜர்மனி அதனின்று விலகிக் கொண்டதினின்று எல்லோரது பாடும் கிடுகிடுத்துப் போய்விட்டது. இந்த போலிக் கூட்டம் செத்துக் கொண்டிருக்கிறதா, அல்லது செத்துப் போய் விட்டதா என்பதுதான் கேள்வி. அக்கிராஸனாதிபதி ஹெண்டர்ஸனும் தமது பதவியை இத்தனை நாட்களுக்குள் ராஜினாமாச் செய்திருக்கலாம். இந்த அந்திய காலத்தில் மரணதாகம் தீர்ப்பவர் போல ஸர் ஜான் ஸைமனும், ஈடனும் இங்கிலாந்திலிருந்து ஜெனிவாவுக்கு ஓடியிருக்கின்றார்களாம்.

நண்டர்களாவதேன்?

ஆகா! என்ன உறவு. அமரிக்கா இனி ஸோவியத் ருஷியாவோடு வியாபார உறவு கொண்டாடப் போகிறதாம். இப்படி பரஸ்பர நேசம் ஏற்படுவதற்கு என்ன காரணம்? ஜப்பானுக்கு ருஷியா ஜன்ம விரோதியாம்! ஜப்பானுக்கும் அமரிக்காவுக்கும் வியாபரப் போட்டியாம்! ஆகவே இப்போது ஏற்பட்ட வியாபார உறவு, ராஜீய உறவாக மாறி, பொது எதிரியை கலக்கமுறச் செய்வதற்காக இருக்கலாமோ என்னவோ? இந்த சதுரங்கத்தில் கிரேட் பிரிட்டன் என்ன செய்யப் போகிறதென்பது இன்னும் தெளிவாகவில்லை.

இதாலியும் விலகுமோ?

சர்வதேசச் சங்கத்திலிருந்து ஏற்கனவே ஜப்பானும், ஜர்மனியும், பிரிந்துவிட்டன. தானும் பிரிவதா வேண்டாமா என்பதைப் பற்றி, இதாலி அரசாங்கம் டிசம்பர் மாதம் 5ந்தேதி தீர்மானிக்கப் போகிறதாம்.

மணற்கயிறு உதிர்கின்றது

அறுபது தேசத்துப் பிரதிநிதிகள் சீமையில் ஒரு கூட்டம் கூடி வியாபர ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார்களல்லவா? உலகப் பொருளாதார மகாநாடு என்று 'டம் டாம்' அடித்தார்களல்லவா? அந்த ஒப்பந்தம் இப்போது வெல வெலக்க ஆரம்பித்து விட்டது. ஸ்வீடன், ஹாலந்து, ஸ்வித்ஸர்லாந்து, அயர்லாந்து முதலிய நாட்டுப் பிரதிநிதிகள் ஒருவாரம் தவணை கொடுத்து தங்கள் கையொப்பத்தை வாபீஸ் கேட்டிருக்கிறார்களாம். இனிமேல் அந்த நாடுகள் தங்கள் துறைமுகங்களில் இஷ்டப்படி சுங்கவரி வசூலிக்கலாம். உலகப் பொருளாதார மகாநாடு வெறும் மணற்கயிறு என்று நாம் கூறியது இன்று உண்மையாகின்றது.

ஸ்பெயின் ரகளை

1931ஆம் ஏப்பிரல் மாதம் தான் ஸ்பெயின் மன்னர் அரசு துறந்து வெளியேறினார். குடியரசும் ஸ்தாபிதமாயிற்று. அபேதவாதக் கட்சியினர் மேலோங்கினர். இப்பொழுது, பாஸிஸ்டுக் கட்சி யொன்று கிளம்பி யிருக்கிறது. பொதுத் தேர்தல் நடந்து வருகிறது. இருகட்சிக்கும் பலத்த போட்டி. இரத்த ரகளை வேறு நடந்து கொண்டிருக்கிறது. இரத்தஞ் சிந்தாமலே அமைதியாக முடியரசு வீழ்ந்து குடியரசு நிலைத்த ஒரு நாட்டிலே ஏன் இந்தக் கூத்து?

கூட்டுக் கமிட்டி புனர் ஜன்மம்

லண்டனில் இந்தியாவின் தலை விதியை நிர்ணயிக்கக் கூடிய கூட்டுக் கமிட்டியின் விசாரணை முடிந்து விட்டது. இந்தியப் பிரதிநிதிகள் வேலை முடிவடைந்ததாம். பிரிட்டிஷ் பிரதிநிதிகளை பிரிட்டிஷ் பார்லிமெண்டு மறுபடியும் நியமனம் செய்யுமாம். புனர்ஜன்மமடைந்த கூட்டுக் கமிட்டி, பர்மாப் பிரதிநிதிகளுடன் கூடி விசாரணை செய்து, பின்னர் தனது அறிக்கையைத் தயார் செய்யுமாம். எனவே, புதிய சீர்திருத்தம் சமீபத்தில் வருமென்று வாயைப் பிளந்து கொண்டிருக்கும் சட்டசபைப் பித்தர்கள் மோக மொழிப்பார்களாக!

உலகப் பிரசித்திப் பெற்ற
ஆ. அப்பாதுரை முதலியார் அண்டு சன்,
பட்டணம் பொடி
காரம், மணம், குணம், நிறம், முதலிய வாடை கமழுகின்றது.

ஒரு முறை வாங்கி உபயோகித்தால் அதன் குணம் தங்களுக்கே தெரியவரும்.
ஆ. அப்பாதுரை முதலியார்
அண்டு ஸன்,
புகையிலை கமிஷன் ஏஜண்டுகள், அண்டு மூக்குத்தூள் வியாபாரிகள்.
39, பாரிஷ் வெங்கடாசல ஐயர் தெரு,
தபால் பெட்டி நெ. 189. சென்னை.
தொழிற்சாலை: நெ. 55, ஆச்சாரப்பன் வீதி.

இப்நாடீசம் என்ற கண்ணாடி
நம்பினவருக்கு மருந்தும் மந்திரமும் ஜெயமளிக்கும்
ஆண்டி முதல் அரசன் வரையில் ஆண் பெண்களும் உபயோகிக்கக்கூடியது
உங்கள் வியாபாரத்தில் விர்த்தி பெற வேண்டுமா? உங்கள் பகைவன் உங்களுக்குப் பணிய வேண்டுமா? உங்கள் உத்தியோகம் உயர வேண்டுமா? உங்கள் எஜமானின் அன்பு வேண்டுமா? உங்கள் வார்த்தையை உலகத்தோர் மதிக்க வேண்டுமா? உங்கள் கஷ்டம் நீங்கி சுகம் பெற வேண்டுமா? உங்கள் நாட்டம் கைகூட வேண்டுமா? உங்கள் தீராத வியாதி நீங்க வேண்டுமா? உங்கள் மனக்கவலை நீங்கவேண்டுமா? உங்கள் விவகாரங்கள் ஜெயம் பெற வேண்டுமா? நீங்கள் பரிக்ஷையில் தேர வேண்டுமா? மேலே சொல்லிய காரியங்களில் நீங்கள் ஜெயம் பெற வேண்டுமானால் அடியில் கண்ட விலாசதாருக்கு 4-அணா ஸ்டாம்பு அனுப்பினால் உபயோக விபரத்துடன் மேலே கூறப்பட்ட கண்ணாடி அனுப்பப்படும். இந்த கண்ணாடி அவர் அவர்கள் பேருக்கு ஜபம் செய்வதால் தெளிவாக விலாசம் தெரிக்கவும்.
ஸாது சங்கம், 119, பிராட்வே, மதறாஸ்.
ஆர்டர் செய்யும்போது பத்திரிகையைக் குறிப்பிடவும்.

பிரதாப விகடன்
ஒரு மாதாந்திர விகடப் பத்திரிகை. மாதிரி பிரதி அணா இரண்டு. வருட சந்தா ரூபாய் ஒன்று. எல்லா ஊர்களிலும் ஏஜெண்டுகள் தேவை. விபரங்களுக்கு
பிரதாப விகடன் ஆபீஸ்,
தபால் பெட்டி 23, மதுரை.

நமது நாட்டில்

மருந்திலும் ஏகபோகமா?

இந்திய சர்க்காரின் மொத்த வைத்தியச் செலவில் பத்திலொன்றை, யூனனி, ஆயுர்வேத சாஸ்திரங்களுக்காகச் செலவழிக்கிறார்கள். கர்னல் பேர்ட்டென்ற ஆங்கில ஐ எம். எஸ். பேர்வழி, இவற்றிற்கு நூற்றிலொன்று கூடச் செலவழிக்கக் கூடாதென்று, லண்டன் கூட்டுக் கமிட்டிமுன் முறையிட்டிருக்கிறார். இவருக்கு இந்தப் புராதன வைத்திய சாஸ்திரங்களைப்பற்றி என்ன தெரியும்? எந்த சாஸ்திரத்திலும் வெள்ளையருக்கே ஏகபோக உரிமை உண்டு என்ற அகந்தை தானே இதன் காரணம்.

பேடிச் சபையில் நமக்கென்ன வேலை?

"சர்வ தேசச் சங்கம் சக்தியற்ற, பேடிச் சபையாகி விட்டது. இந்தியா அதில் அங்கம் வகித்திருப்பதால் பணச் சுமை தான் கண்ட லாபம். நாம் ஏன் அதிலிருக்கவேண்டும்? பிரிந்துவிடுவதாக நோட்டீஸ் கொடுத்துவிடலாம்" என்று முத்தண்ணாக்கள் சபையில் ஸ்ரீமான் கித்வாய் ஒரு தீர்மானம் கொணரப் போகிறார். நல்ல தீர்மானமே. தீர்மானத்துக்கு அனுமதி கிடைக்குமா? கிடைத்தாலும் நிறைவேறுமா? நிறைவேறினாலும் அமுலுக்கு வருமா? எல்லாம் சந்தேகமே.

ரிஸர்வ் பாங்கி விவகாரங்கள்

ரிஸர்வ் பாங்கி மசோதாவைப் பரிசீலனை செய்ய இந்தியச் சட்டசபை, ராஜாங்க சபை இரண்டினாலும் நியமிக்கப்பட்ட கூட்டுக் கமிட்டிகளின் யாதாஸ்துக் கையெழுத்தாகி விட்டது. பங்குதார் பாங்கியா யிருக்க வேண்டுமோ? ராஜாங்க பாங்கியா யிருக்கவேண்டுமோ? என்பது பற்றிப் பலத்த விவகாரம் இருந்து வருகிறது. இந்திய வியாபாரத்தையும் ஏழை விவசாயிகளின் நலத்தையும் நாடுவோர் 18 பென்சு நாணய மாற்று விகிதம் கூடாதென்றும் 16 பென்சாக்க வேண்டுமென்றும் வாதிக்கிறார்கள். இவ்விவகாரங்கள் ஒரு புறமிருக்க, மசோதா இந்தியச் சட்ட சபையில் வரும்பொழுது, அதைப் பலமாய் எதிர்க்கச் சில தேசிய வாதிகள் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். (1) லண்டன் கட்டளை யின்றி இந்தச் சட்டத்தைத் திருத்த இந்தியச் சட்ட சபைக்கு உரிமை யிருக்க வேண்டும்; (2) நமக்கு விரோதமாக இருக்கும் குடியேற்ற நாடுகளுக்கு நாமும் பதிலுக்குப் பதில் செய்ய இடம் வேண்டும் —இந்த இரு உரிமைகளும் இல்லாத வரையில் பயனில்லை என்பது இவர்கள் கட்சி. எது வரையில் பிரிட்டன் கையில் நமது அரசாங்கத்தின் சூத்திரக் கயிறு இருக்கிறதோ அது வரையில், இந்த உரிமைகள் உண்மையில் நமக்குக் கிடைக்கப் போவதில்லை என்பதை ஏனோ இவர்கள் அறியவில்லை?

கருமம் மறந்து உல்லாசக் காட்சி

வியாபார ஒப்பந்தத்துக்காக, இந்திய-ஜப்பானியப் பிரதிநிதிகள் மகாநாடொன்று புது டெல்லியில் கூடியிருக்கிறது. அது ஏறக்குறைய வியர்த்தமாகி விடும் போலிருக்கிறது. இந்தியர் நிபந்தனைகளை, ஜப்பானியர் தங்கள் சர்க்காருக்குத் தெரிவித்திருக்கிறார்கள். பதில் வரும் வரை அவர்கள் தாங்கள் வந்த காரியத்தை மறந்து உல்லாசக் காட்சிகள் பார்ப்பதில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

சங்கீதம் கேளுங்கள்!

எச்சரிக்கை

நீங்கள் தவறான வேளையில் நாட்டில் சகாயமாய்க் கிடைக்கிற மிஷன்களில் ஒன்றை வாங்கி விட்டால், பல வகையில் சீர்கேடான சங்கீதத்தையே கேட்க நேரிடும்.

விக்ட்ரோபோன் ஒன்றின் விலைக்கு நீங்கள் மேற்கண்ட மாதிரி இரண்டு மூன்று மிஷன்கள் வாங்கிவிடலாம். ஆனால் அதனால் என்ன பயன்?

ஒரு வருஷ காலத்திற்குள் ஒரு விக்ட்ரோபோனின் விலையைவிட இரண்டு மடங்கு அதிகப் பணம் அவற்றிற்காகச் செலவிட நேரும்.

ஆதலால் நீங்கள் வாங்குவது நல்ல மிஷனை வாங்குங்கள்.

விக்ட்ரோ போன்



உயர்ந்த, சிறந்த மிஷன், நல்ல ஒலி, நாட்பட உழைக்கும். மிகச் சிறப்பாகச் செய்தது. டபிள் ஸ்பிரிங்.

இந்தியாவில் செய்தது.

பரிசோதியுங்கள்! விசாரியுங்கள்!
திருப்தி யடையுங்கள்
பின்னர் வாங்குங்கள்;

ரூ. 86 தான்; அதற்கு மேலே பெறும்.

இல்லாத இடங்களுக்கு ஏஜண்டுகள் தேவை.

விக்ட்ரோ போன்,
27, வாலாஜாரோட், மவுண்ட்ரோட், மதராஸ்.

ஆசிரியர் பேச்சு!

'பேனவை எடுங்கள்'

இந்த வாரப்பத்திரிகை புதுமுறையில் இருக்கவேண்டு மென்பது காரியாலயத்தின் நோக்கம். அவ்வாறு இந்தப் பத்திரிகையை அலங்கரிக்கும் பொறுப்பைத் தமிழ் அன்பர்களுக்கே விட்டு வருகின்றேன். தமிழகத்தில் எவ்வளவோ அறிஞர்கள் இருக்கின்றனர். அவர்களனைவரும் கொஞ்சம் சிரத்தை பூண்டு பேனு எடுத்தார்களானல், தமிழ் புதிய ஒளி பெறுமென்பதில் ஐயமில்லை. 'பேனவை எடுங்கள்' என்று 'சங்கு', அறிஞர்களைக் கேட்டுக்கொள்கிறது.

இந்த இதழில்

இந்த இதழில் எழுதியிருக்கும் நண்பர்களைப்பற்றி இரண்டொரு வார்த்தை சொல்லக் கடமைப்பட்டுள்ளேன்.

ஸ்ரீயுத சுத்தானந்த பாரதியார் இன்று புதுச்சேரியில் அரவிந்த ஆசிரமத்தில் தவநிலை தாங்கி யுள்ளவர். சேரமாதேவி குருகுலத்திலும், ஸமரஸ போதினியிலும், ஸ்வராஜ்யாவிலும் ஸ்வாமிஜி செய்த சேவையைத் தமிழர் மறக்க மாட்டோம்.

நாமக்கல் இராமலிங்கம் பிள்ளையைக் குறித்து ஒரு விஷயம் குறிப்பிடத்தக்கது. அவர் சித்திரவேலையிலும், சிற்பத்திலும் நிபுணர். தமிழ் சிற்பக் கலாசாலை ஒன்று நிறுவ அவர் பாடுபட்டுக் கொண்டிருக்கிறர். உப்பு சத்தியாக் கிரகப் போரிலும், ஹரிஜன இயக்கத்திலும் 'ராமலிங்க'த்தின் பாட்டுக்கள் செய்த சேவையே தனி என்பார்கள். அவருடைய பாட்டுகளும் படங்களும் சங்கை அலங்கரித்துக் கொண்டிருக்கும்.

புதுவை 'பாரதிதாஸன்' ஓர் அபூர்வமான கவிஞர். கவிதை பாடும் போது வார்த்தைகள் அவரிடம் கை கட்டி நிற்பனபோலும்! நதி ஓடுவது போல அவ்வளவு சுலபமாக அவரது செய்யுள்களிருப்பதற்குக் காரணம் ஒரு காலத்தில் அவருக்கு கவிச் சக்கிரவர்த்தி பாரதியாரோடு ஏற்பட்ட உறவேயென்று தோன்றுகிறது.

நண்பர் வ. ரா. வைப்பற்றி அதிகம் எழுதினேனல் அவர் என்மீது கோபிப்பார். 'மணிக்கொடி' 'காந்தி' முதலிய பத்திரிகைகளை அலங்கரித்து கொண்டிருக்கும் திருப்பழனம் 'ராமஸ்வாமி', பத்திரிகை யுலகத்தின் ஒளிப் புதல்வருள் ஒருவர். காலஞ்சென்ற பாரதியாரோடு புதுவையில் வாழ்ந்தவர். பளிச்சுச் பளிச்சென்று வெட்டு நடை எழுதுவதில் பாரதியாருக்கு அடுத்தபடி வ. ரா. தான் என்று எனக்குத் தோன்றுகின்றது.

வக்கீல் இ. கிருஷ்ணய்யர் சங்கீத விமர்சனம் செய்வதில் சாமர்த்திய முடையவர்; சென்னை சங்கீத வித்வத் சபையின் ஸ்தாபகர்களுள் ஒருவர். தமது தேசீய வேலைகளோடு சங்கீதக் கலையின் அபிவிருத்திக்கும் உழைத்துவரும் அவர், நமது பத்திரிகையில் அவ்வப்போது எழுதிக் கொண்டிருப்பார்.

ஸ்ரீமான் ஆர். வி. சாஸ்திரியாரின் நட்பு எனது பாக்கியம்! மகாத்மாவின் ஆங்கில 'ஹரிஜன்' பத்திரிகை நடத்தும் பெரும் பணியை ஏற்றிருக்கும் அவர் தமிழ்த் தொண்டு புரிய முன் வந்திருப்பது அனைவருக்கும் மகிழ்ச்சி தரும். அவரும் அவரது பத்தினி யாரும் அவ்வப்போது சங்கில் எழுதுவார்கள்.

'ஆஹா என்ன அழகு!' என்ற படம் எழுதியுள்ள ஸ்ரீ சிவராமமூர்த்தி ஸமுஸ்கிருத ஹானர்ஸ் பரீக்ஷையில் தேறி ஆராய்ச்சித் துறையில் ஈடுபட்டிருப்பவர்.

அடுத்த இதழில் திருச்சி டாக்டர் சாஸ்திரியாரின் சிறு கதையும், அனுமந்தப்பட்டி கிருஷ்ணஸ்வாமி அய்யங்காரின் கவிதையும், பாரதியாரின் கதைத் தொடர்ச்சியும், திப்புவின் கட்டுரையும் கவனிக்கத் தக்கவை.

—சங்து. ஸுப்ரஹ்மணியன்.

"Swathanthara Sangu Press"

Invites enquiries of all classes of
General & Commercial Printing.

Printers of

"Harijan"

Conducted by Mahatma Gandhi

and

Published under the auspices of
The Servants of Untouchables Society.

Subscription for "Harijan"

Inland Rs. 4 Foreign Rs. 5-8.

8, PYCROFTS ROAD, TRIPLICANE, MADRAS.

Edited, Printed and Published by S. Subramanian at the Swathanthara Sangu Press, Triplicane; Madras.